3.1.1 (X)

# அரசியல் பொருளாதாரக் கட்டுரைகள்

## Essays on political Economics

கலாநிதி. செ. சந்திரசேகரம்

அபி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பொருளாதாரக் கட்டுரைகள்
# Essays in Political Economics

கலாநிதி. செ.சந்திரசேகரம்

அபி வெளியீட்டகம்
2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | அரசியல் பொருளாதாரக் கட்டுரைகள் |
| நூலின் ஆசிரியர் | : | செ. சந்திரசேகரம் |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : | 05.01.2015 |
| பக்கங்கள் | : | 164 |
| அச்சுப் பதிப்பு | : | யாழ் பிறிண்டர்ஸ் |
| வெளியீடு | : | அபி வெளியீட்டகம் |
| ISBN No | : | 978-955-44-890-9-7 |
| விலை | : | 350/= |

| | | |
|---|---|---|
| Title of Book | : | Essays in Political Economics |
| Editor | : | S. Santhirasegaram |
| First Edition | : | 5 January 2015 |
| Pages | : | 164 |
| Printers | : | Jaffna Printers |
| Publisher | : | ABI Publication |
| Copyright | : | Author |
| ISBN No | : | 978-955-44-890-9-7 |
| Price | : | Rs.350 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

பொருளியல் என்பது அரசியலுடன் மிகவும் இறுக்கமான தொடர்பினைக் கொண்டுள்ளது. இந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முது நிலை விரிவுரையா ளராகக் கடமையாற்றும் கலாநிதி செ. சந்திரசேகரம் அவர்களால் எழுதப்பட்ட அரசியல் பொருளாதாரக் **கட்டுரைகள்** என்ற இந்த நுலானானது பொருளாதார விடயங்களை அரிசியலுடன் இணைத்துப் பார்க்கின்றது. இக்கட்டுரைகள் இலங்கையின் வடக்கு கிழக்கு பொருளா தாரம், இலங்கைப் பொருளாதாரம் மற்றும் உலக பொருளா தாரம் என மூன்று பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு ஒவ்வொன் றிலும் தலா மூன்று கட்டுரைகளாக ஒன்பது கட்டுரைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது.

இக் கட்டுரைகள் யாவும் ஏற்கனவே பல சஞ்சிகைகள், காலாண்டு இதழ்கள், பருவ இதழ்கள், வருடாந்த இதழ்கள், தேசிய பத்திரிகைகளின் சிறப்பு இதழ்களில் பிரிசுரிக்கப்பட்டு அவை மென்மேலும் திருத்தியமைக்கப்பட்டு புத்தக வடிவில் வெளிவருவது மிகவும் சிறப்பானதாகும். இலங்கையின் வடக்கு கிழக்கு பொருளாதாரம் பற்றி எழுதிய கட்டுரைகள் வடக்கு கிழக்கு பொருளாதார விடயங்களைக் கற்கும் மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

இலங்கை தொடர்பாக எழுதப்பட்ட கட்டுரைகள் இலங்கைப் பொருளாதாரம் பற்றி கற்கின்ற மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது. இலங்கையின் பல அரசியல் பொருளாதார விடயங்களை இப்பகுதி எடுத்துக் கூறுகின்றது.

மூன்றாவது பகுதியில் எழுதப்பட்ட உலக பொருளாதார அபிவிருத்தி விடயங்கள் உலகப் பொருளாதார விடயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாட அலகினைப் பயிலும் மாணவர்களுக்கு மிகவும் பயனுடையதாக அமையும்.

பொதுவாக இக்கட்டுரைகளைப் பட்டப்படிப்பினை மேற்கொள்கின்ற பொருளியல் கற்கின்ற மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய அரசியல், சமூகவியல், மானிடவியல், புவியியல் மற்றும் திட்டமிடல் போன்ற பாட அலகுகளைக் கற்கின்ற பட்டாதாரி மாணவர்களும் கற்றுப் பயன் பெறக் கூடிய வகையில் பல பொது விடயங்களையும் பல புதிய விடயங்களையும் உள்வாங்கி எழுதப்பட்டுள்ள கட்டுரைகளாக உள்ளமை இந்த நூலின் சிறப்பமாக அமைந்துள்ளது.

மாணவர்கள் தங்கள் பாடப்பரப்புடன் மேலதிகமாக சில அரசியல் பொருளாதார விடயங்களைக் கற்றுக் கொள்வ தற்கு இந்த நூல் மிகவும் பயனுடையதாக அமையும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

இந்த நூலாசிரியர் தான் முன்னர் எழுதிய நூல்களுக்கு கிடைத்த விமர்சனங்களையும் உள்வாங்கி புதுப்பொலிவுடன் கட்டுரைகள் சிராக்கம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் இந்நூல் அமைந்துளள்மை இந்நூலின் சிறப்பாகும்.

மேற்படி எனது நண்பரும் துறை சார்ந்த ஆசிரியருமான நூலாசிரியரின் இந்த பணி மென்மேலும் தொடர வேண்டும் என வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடை கின்றேன்.

எஸ். எஸ். உதயகுமார்.
தலைவர்
பொருளியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

எனது நண்பன் கலாநிதி.செ.சந்திரசேகரம் "*பொருளாதார அரசியல் கட்டுரைகள்*" என்ற தலைப்பிலான இந்நூலை எழுதுவதையிட்டு எனது வாழ்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சமகால எனது பல்கலைக்கழக நண்பரான இவர் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங் களில் தான் கற்பித்து அனுபவத்தின் பின்னணியில் இவரால் இத்தகைய 8 ஆவது படைப்பு வெளி கொணரப் பட்டுள்ளது. பல்வேறு வடிவங்களில் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் தான் ஏற்கனவே வெளியிட்ட பொருளாதார அரசியல் கட்டுரைகள் 12 ஐத் தொகுத்து மாணவர்களும் இவ் உலகில் பயன்படும் வண்ணம் தமிழில் வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியதே, துணிந்த கருத்துக்களை முன்வைக்கின்ற சுபாவங் கொண்டவரான இவருடைய சிந்தனைகளில் பல எதிர்வு கூறலின் அடிப்படையில் கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

இத்தகைய இவருடைய இந்தப் படைப்பானது கற்றோர் உலகு விரும்பி ஏற்கும் என்னும் நம்பிக்கை தொடர்ந்தால் இவ்வாறான வெளியீடுகளை இவர் வெளியிட்டு தனது ஆய்வு முயற்சிகளை விரிவாக்குமாறு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

கலாநிதி க. அருந்தவராஜா
கிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I
வரலாறுற்றுத்தறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
31.12.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பொருளியல் மக்கள் எல்லோருடைய வாழ்விலும் ஒன்றிணைந்த ஓர் பாட நெறியாகும். பொருளியல் கருத்துக்களை படித்த மக்கள் தொடங்கி பாமர மக்களும் எளிதாக விளங்க கூடிய வகையில் ஆக்கங்களை உருவாக்குவது அவசியமாக காணப்படுகின்றது. இந்த வகையில் எனது அரசியல் பொருளாதார கட்டுரைகளின் "அரசியல் பொருளாதார கட்டுரைகள்" என்ற இந்நூலில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி விடயங்கள் இலங்கையின் அபிவிருத்தி விடயங்கள், உலகத்தின் அபிவிருத்தி விடயங்கள் ஆகிய மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒன்பது கட்டுரைகளை தாங்கி வருகின்றது. இக்கட்டுரைகளின் மூலங்கள் பல சஞ்சிகைகள், தேசிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டு இந்நூலில் விரிவாக்கபட்டுள்ளன.

இக் கட்டுரைகள் பொருளியலை பொதுவாகவும் பாடவிதானம் சார்பாக வாசிப்பவர்களுக்கும் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும் என நான் நம்புகிறேன். குறிப்பாக பொருளியல் சிறப்புக் கலையில் கல்வி பயிலும் மாணவர்கள் வடக்கு கிழக்கு பொருளாதாரம், இலங்கைப் பொருளாதாரம், உலகப் பொருளாதார விடயங்கள் போன்ற பாட அலகுகளை கற்கும் மாணவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் போட்டிப் பரீட்சை எழுதும் பட்டதாரிகளுக்கு பயனுள்ளதாக அமையும்.

இந்நூலின் மூலக் கருத்துக்களைப் பதித்து வெளியிட்ட அனைத்து சஞ்சிகைகளின் ஆசிரியர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் கல்வி சார் பதிப்பாசிரியர்கள் அனைவர் களுக்கும் நன்றிகள் தெரிவிக்கிறேன். மேலும் இந்நூலுக்கு அணிந்துரை மற்றும் வாழ்த்துரை வழங்கிய பொருளியல்த் துறை தலைவர் வழங்கிய திரு. சி. உதயகுமார் அவர்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய கலாநிதி க.அருந்தவராஜா அவர்களுக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றிகள் உரித்தாகும். இந் நூலினை வெளியிட்ட யாழ் பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

கலாநிதி செ. சந்திரசேகரம்
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
02.01.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| விபரங்கள் | பக்கங்கள் |
|---|---|
| பகுதி – I: வடக்கு கிழக்கு பொருளாதாரம் | |
| 1) அதிகாரப் பரவலாக்கமும் வடமாகாண பொருளாதார அபிவிருத்தியும் | 01 - 08 |
| 2) வடமாகாண விவசாய அபிவிருத்தி வாய்ப்புக்களும் சவால்களும் | 08 - 30 |
| 3) வடமாகாண சபையின் ஒரு வருடகால பொருளாதார அபிவிருத்தி அரசியல் பொருளாதார நோக்கு | 31 - 71 |
| பகுதி II : இலங்கைப் பொருளாதாரம் | 72 |
| 4) இலங்கையின் பணச் சந்தை | 73 - 81 |
| 5) இலங்கையின் வறுமை ஒழிப்பும் புதிய தந்திரோபாயமும் | 82 - 98 |
| 6) இலங்கையின் நாயணயப் பெறுமதி இறக்கமும் பொருளாதார அபிவிருத்தியும் | 99 - 111 |
| பகுதி III : உலகப்பொருளாதாரம் | 112 |
| 7) உலக மயமாக்கமும் பொருளாதார சமமின்மைகளும் | 113 - 133 |
| 8) சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் உலக வங்கி (IBRD) மீதான விமர்சன நோக்கு | 134 - 149 |
| 9) பொருளியலில் கணிதத்தின் பிரயோகங்கள். | 150 - 164 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நூலினை எனது கல்விக்கு உதவிய

அமரர். திரு. செல்லையா தம்பையா

அவர்களுக்கு காணிக்கையாக்கிறேன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி I

# வடக்கு கிழக்கு பொருளாதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01

# அதிகாரப் பரவலாக்கமும் வட மாகாண பொருளாதார அபிவிருத்தியும்

## 1. அறிமுகம்

இலங்கையின் மத்திய அரசுக்கு கீழ் மாகாண சபைகள் பல அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றன. 1987 இல் இந்தியா அரசாங்கத்தின் தலையீடு காரணமாக தமிழ் மக்கள் தங்களுடைய பூர்வீக பிரதேசங்களில் சுயமாக பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுத்து செய்வதற்கான அரசியல் அதிகாரப் பரவலாக்கம் மாகாண சபைக்கு உண்டு. இந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி பல நீண்ட காலம் அழிவடைந்து இருந்த வடக்கு பொருளாதாரத்தை மாகாண சபை பொறிமுறை கட்டியெழுப்பும் என தமிழ் மக்கள் அதீத நம்பிக்கை கொள்ள வலியுறுத்தப்பட்டார்கள். ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் குறிப்பாக வடக்கு மாகாணசபை இயங்கத் தொடங்கி ஒரு வருடம் முடிவடைந்த நிலையில் வடமாகாண அரசின் பொருளாதார நிலமைகள் மிக மோசமான நிலையில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. வடக்கின் அரசியல் பொருளாதாரம்

வடக்கின் பொருளாதார அபிவிருத்திக்கும் அரசியல் பொருளாதாரத்துக்கும் இடையிலான உறவை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். பொதுவாக வடக்கின் பொருளாதார அபிவிருத்தியில் மாகாண சபைக்கு உள்ள அதிகாரங்கள் நீடித்து நிலைத்திருக்க கூடிய பொருளாதாரத் திட்டமிடலை மேற்கொள்வதற்கு பிராந்திய அரசுக்கு பூரணமான சுயாதீனம் இருக்க வேண்டும். இருப்பினும் இதன்படி கருத்து மாகாண சபை தற்போது கொண்டிருக்கின்ற அதிகாரங்கள் மூலம் அபிவிருத்தியை முன்னெடுத்து செல்ல முடியாது என்பது கருத்து அல்ல. மாறாக துரித அபிவிருத்திக்கு அரசியல் அதிகாரம் அவசியமாக இருக்கிறது.

முதலாவதாக வடக்கு கிழக்கின் பொருளாதார அபிவிருத்தியானது பல்வேறுபட்ட தொழில் முயற்சிகள் ஊடாக முன்னெடுத்து செல்லப்படுவதற்கு அரசியல் அதிகாரங் களில் காணி அதிகாரம் அவசியமானதாகும். கடந்த ஒரு வருடகால ஆட்சியின் போது காணி விடயங்களில் மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் இடையில் பல முரண் பாடுகள் தோன்றியிருந்தமையை நாம் காண முடிந்தது. காணி அதிகாரமும் அபிவிருத்தியும் ஒருவர் தனது சொந்தப் பெயரில் வைத்துக்கொண்டு வீடுகட்டி மனைவி பிள்ளைகளுடன் சந்தோசமாக வாழ்வதற்கு ஒப்பானது. ஒருவர் வீடுகட்டுவதற்கு முன்னர் அந்த வீடு அமையும் வீட்டின் உறுதியில் தெளிவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும். வீடுகட்டி, அழகமைத்து அதை அனுபவிக்கும் பட்சத்தில் பிறர் அவ்வீட்டின் நிலத்தின் மீது உரிமை கொண்டவர்களாக இருந்தால் கஷ்டப் பட்டு உழைத்து சேமித்து கட்டிய வீட்டினால் எவ்விதபயனும் கிடைக்க மாட்டாது. இதே போன்றே மாகாணசபைக்கு உள்ள அதிகாரங்களில் ஏனைய அபிவிருத்தி பற்றி அலசுவதற்கு முன்னர் காணி அதிகாரம் பற்றிய கருத்து முக்கியம் பெறுகின்றது. உதாரணமாக மாகாண அரசு பாரியளவிலான பண்ணைகளையும், பெருந்தோட்டங்களையும், கைத்தொழில் வலயங்களையும் அமைப்பதற்கு முன்னர் இவை அமைக்கின்ற காணி நிலத்தின் உரிமை பற்றி தெளிவான சட்ட மூலங்கள் கொண்டிருக்க வேண்டும். ஓர் விஞ்ஞான தொழில்நுட்ப வலயம் ஒன்றை உருவாக்கி அபிவிருத்தி செய்து அது தொழிற்படுகின்ற போது மத்திய அரசு அந்த நிலத்தை தனக்குரியது என உரிமை கொண்டு அபிவிருத்தியை குழப் பலாம் அல்லது ஸ்தம்பிதம் அடைய செய்யலாம். எனவே தெளிவான காணி அதிகாரம், பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமானதாகும்.

வடக்கில் பல நிலங்கள் இராணுவம், ஆக்கிரமித்து உள்ளது. இந் நிலங்களில் பல பொது நிலங்களாக காணப்படுகின்றன. எனவே தனியார் நிலங்களில் இராணுவ ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்த மாகாண சபைக்கு அதிகாரம் இல்லாது இருக்கின்ற நிலையில் பொது நிலங்களை மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு ஸ்தம்பிதமடைய செய்யலாம். இவையாவும் புலப்படுத்துவது யாதெனில் காணி அதிகாரம் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமானதாகும். தேசிய பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்ப வேண்டுமாயின் காணி அதிகாரம் வலுவானதாக அமைய வேண்டும்.

## 3. காணி அதிகாரத்தை பெறுவதற்கான வழிமுறை

மாகாண சபையினர் கடந்த ஒரு வருடகால செயற்பாடுகளை உற்று நோக்குகின்ற போது பிரதேசத்தின் காணி அபகரிப்புக்கு எதிராக மக்களைக் கொண்டு காணி அளவீடுகளை தடுத்து நிறுத்தி போராட்டங்களை மேற்கொண்டதற்கு அப்பால் வேறு எந்த செயற்பாடுகளையும் பெரியளவில் முன்னெடுக்கவில்லை என்றே கூறலாம். தமிழ்த் தேசிய அபிவிருத்திக்கான காணி உரிமை தொடர்பாக பின்வரும் பொறி முறைகளை கையாள வேண்டிய தேவை உள்ளது.

1. மத்திய அரசால் அபகரிக்கப்பட்ட மாகாணசபைக்குரிய, மற்றும் பொதுமக்களுக்குரிய காணி தொடர்பான புள்ளி விபரங்களை பேணுதல்.
2. இந்நிலங்களில் அவை சார்ந்த வளங்களின் அடிப்படையில் ஓர் தரவு வங்கியை உருவாக்குதல்.
3. பறிக்கப்பட்ட நிலங்களை மீட்டு எடுப்பதற்கும் எஞ்சியுள்ள நிலங்களை பறிக்கப்படாமல் இருப்பதற்கும் இவற்றை முகாமை செய்து நெறிப்படுத்துவதற்கும் மாகாண சபையின் காணி அபிவிருத்தி அமைச்சு திணைக்களத்தின் கீழ் சிவில் சமூகத்தில் துறைசார்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் ஓர் ஆலோசனைச் சபையை நிறுவுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மாகாண நிலம் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் மத்திய அரசுடன் மற்றும் ஆளுநருடன் தொடர்ச்சியான பேச்சுக்களில் ஈடுபட்டு பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுதல்.
5. நிலம் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசுடன் இணக்கப்பாடான ஓர் அரசியல் சூழலை உருவாக்குதல்.
6. காணி தொடர்பான பிரச்சினைகளின் தீர்வைப் பெறுவதற்கு நீதிமன்றத்தை நாடுதல்.
7. காணிஅதிகாரங்களை பலப்படுத்துவதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளல்.

## 4. பொலிஸ்மற்றும் நீதித்துறை அதிகாரங்களும் அபிவிருத்தியும்

மாகாண சபைக்கு இப்பிராந்தியத்தில் சட்டம் ஒழுங்கு, சமூக பாதுகாப்பு (தேசியம் அல்ல) போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்கு நல்லாட்சி அவசியமானதாகும். நல்லாட்சி என்பது சிறந்த பொலிஸ் மற்றும் நீதிச் சேவை ஊடாகவே அடைய முடியும். இலங்கையின் மத்திய அரசின் பொலிஸ் மற்றும் நீதிச்சேவையில் உள்ள குறைபாடுக ளையும் ஒழுங்கீனங்களையும் நோக்குகின்ற போது தேசிய பொலிஸ் மற்றும் நீதித்துறையின் கீழ் வடக்கு மாகாணத்தில் ஓர் நல்லாட்சியை உருவாக்க முடியாத நிலை காணப் படுகின்றது. இவ்வதிகாரங்கள் மாகாண சபைக்கு இல்லாத போது இருக்கின்ற பொறி முறையில் தமிழ் தேசியத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு பொலிஸ் மற்றும் நீதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகள் இடைஞ்சலாக இருக்கின்றது. களவு, கொள்ளை, கப்பம் கேட்டல், பாலியல் துஸ்பிரயோகங்கள், ஆள் கடத்தல்கள், ஊழல்கள், மோசடிகள் என நல்லாட்சிக்கு தீங்கு விளைவிக்கின்ற பல சம்பவங்களை இப்பிராந்தியத்தின் பொருளாதாரத்தில் இடம்பெற்று வருகின்றது. போதைப் பொருள்கள் பாவனை, மதுபானப்பாவனை என ஓர் சமூகத்தை அழிப்பதற்கு கருவியாக செயற்படும் அனைத்து விடயங்களும் மலிந்த பூமியாக வடமாகாணம் காணப்படும் போது இப்பிரதேசத்தில் முதலீடு செய்து பொருளாதாரத்தை மேம்படுத்த எவரும் முயலமாட்டார்கள்.

மத்திய அரசின் பொலிஸ்படை மற்றும் நீதித் துறையின் ஆசீர்வாதத்துடன் இந்த சமூக சீர்கேடுகள் நடை பெறுகின்றன. இந்த பிரதான கும்பல்களுக்கும் இராணுவத் துக்கும் தொடர்பு இருப்பதாக பல செய்திகள் கடந்த காலத்தில் வெளிவந்து இருக்கின்றன. காவல் துறையில் இலஞ்சம் மலிந்து காணப்படுகின்றது. பணம் கொடுப்பதன் மூலம் குற்றவாளி தப்பித்துக் கொள்கின்றான். இது இலங் கைக்கு உரிய பொதுவான பண்பாக இருந்தபோதும் யுத்தத்தால் நலிவடைந்த வடமாகாணத்தைக் கட்டியெழுப் புவதற்கு நல்லாட்சி என்பது அவசியமானதாகும். காணிப் பிரச்சினைகளில் ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்ப்பதற்கான காவல்துறையை மற்றும் நீதி மன்றத்தை கடந்த காலத்தில் அணுகிய போது அவை ஓர் பக்க சார்பாக தொழிற்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டமையை இங்கு எடுத்துக்காட்ட முடியும். கீரிமலையில் மக்கள் தங்கள் காணிகளை துப்பரவு செய்ய முற்பட்டபோது அக் காணிகள் கடற்படைக்கு சொந்தமானது என எதுவித ஆவணங்களும் இன்றி காவல்துறை மக்களை தடுத்து நிறுத்தி உள்ளது. காவல்துறை என்பது ஓர் பொதுவான அமைப்பாக அன்றி பக்கச் சார்பாக மாகாண சபைகளில் தொழிற்படும் போது நல்லாட்சியையோ அதன் வழியான பொருளாதார அபிவிருத்தியையோ அடைய முடியாது. அதே நேரம் இலங்கையில் இருக்கின்ற அரசியல் சூழ்நிலையில் தனியான பொலிஸ் படையையோ நீதிமன்றங்களையோ மாகாண சபைகள் வைத்திருக்க முடியாது உள்ளது. இந்நிலமை பொருளாதார அபிவிருத்தியை பாதிக்கின்றது,

**5. நல்லாட்சிக்கான வழிமுறைகள்**

பொருளாதார அபிவிருத்திக்கு நல்லாட்சி அவசியமாக இருப்பதால் மத்திய பொலிஸ் மற்றும் நீதித் துறையின் கீழ் நல்லாட்சியை உருவாக்க பின்வரும் நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியும்.

1. மத்திய அரசின் பொலிஸ் மற்றும் நீதிச் சேவைகளை வினைத்திறமையாக மாற்றுவதற்கு அவர்களுடன் கலந்து ரையாடல்களை உருவாக்கி நட்புறவு ரீதியாக வினைத் திறமையுடையதாக மாற்றுதல்.

2. இத்துறைகளை கட்டுப்படுத்துகின்ற தலைமைப் பதவிகளை மாகாண சபையின் பரிந்துரைகளுக்கு அமைய சினேகித பூர்வமாக உருவாக்க முயற்சித்தல் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இத்துறைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக சிவில் அமைப்புக்களை உள்ளடக்கிய ஓர் "பொலிஸ் மற்றும் நீதிசேவை விரைவாக்கல் சபை" ஒன்றை தாபித்து, மத்திய அரசின் ஒத்துழைப்புடன் வினைத்திறனுடன் செயற்படுதல்.

4. மாகாண சபையே "நல்லாட்சிக்கான புலனாய்வுச் சேவையை ஏற்படுத்தலாம் இச்சேவை மத்திய அரசுக்கு சில ஆதாரங்களை சேகரித்து கொடுத்து பிராந்தியத்தில் நல்லாட்சியை ஏற்படுத்த மத்திய அரசுடன் இணைந்த வகையில் தொழிற்படலாம். இதன் வெற்றிக்கு மத்திய அரசின் ஒத்துழைப்பு அவசியமானதாகும்.

5. நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்து ழைப்பை பெறுதல்.

எனவே நல்லாட்சிக்கான பொலிஸ் மற்றும் நீதித்துறை யானது காணி அதிகாரத்தின் மூலம் பொருளாதார திட்ட மிடலை மேற்கொண்டு நீண்டகால நோக்கம் கொண்ட வடக்கின் பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்புவது அவசியமானதாகும். இச்செயற்பாடு பிராந்திய வலுவை அதிகரிப்பதால் இதைச் சிதைக்கவே மத்திய அரசு முயல் கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02

# வடமாகாண விவசாய அபிவிருத்தி: வாய்ப்புக்களும் சவால்களும்

## 1. அறிமுகம்

வடக்கின் அபிவிருத்திக்கான பிரதான வளங்களில் விவசாயமும் ஒன்றாகும். நெல், மரக்கறி வகைகள், உப உணவுப் பயிர்கள், பழவகைகள், பணப் பயிர்கள் போன்ற பல விவசாய உற்பத்திகளுடன் தென்னை, பனை போன்ற நீண்டகால பெருந்தோட்டப் பயிர்களும் காணப்படும். விவசாய அபிவிருத்தியானது மிகவும் பழமையான வரலாற்றைக் கொண்டு ஊட்டிய பெறுமானத்தை அதிகமாக கொண்டிருந்த போதும் விவசாய உற்பத்தியை முதன்மைப்படுத்திய விவசாயப் பொருளாதாரமானது வடக்குக்கு மட்டும் அல்ல உலகத்திலே விவசாய நாடுகள் வறிய நாடுகளாக இருக்கின்றன. விவசாயத்தில் அதிக வருமானத்தை பெற்று விவசாயப் பொருளாதாரத்தில் தங்கி இருக்கின்ற மக்களின் வருமானம் மற்றும் வாழ்க்கைத்தரத்தை அதிகரிக்க வேண்டுமாயின் விவசாயம் நவீனமயமானதாக சிறிய அலகுகளில் இருந்து பாரிய அளவுத் திட்ட சிக்கனங்களைக் கொண்டதாக மாற்றம் அடைய வேண்டும். என்றுமே அரசியல் வாதிகளின் தயவில் தங்கியிருக்கின்ற ஏழ்மை விவசாயிகளை உருவாக்காமல், செந்தக்காலில் விவசாயம் செய்கின்ற விவசாயிகளை உருவாக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. விவசாயத்தின் தற்போதைய நிலை

வடக்கின் விவசாய அபிவிருத்தியில் இன்றைய நிலைகளை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. ஒட்டுமொத்தத்தில் விவசாய உற்பத்தியில் முன்னேற்றம் காணப்படுகின்றது.
2. உற்பத்தி அதிகரித்த போதும் விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கப்படவில்லை. (உற்பத்தித்தளம்பல் மற்றும் விலைத்தளம்பல்)
3. உற்பத்தி செலவு குறிப்பாக கூலி அதிகமாக காணப்படுகின்றது.
4. விலைத்தளம்பலால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.
5. இடையீட்டாளர்கள் அதிகளவான இலாபத்தை பெற்றுக் கொள்கின்றனர். விவசாயிகளை விட விவசாயத்துடன் தொடர்புடைய வர்த்தகர்கள், தரகர்கள், நிலவுடமையாளர்கள் போன்றவர்களின் வருமானம் அதிகம்.
6. இறக்குமதி உணவுப் பொருட்களால் பாதிப்படைகின்றனர். உ+ம் வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு, செத்தல் மிளகாய் போன்றவற்றின் இறக்குமதியால் உற்பத்தியாளர்கள் பாதிப்படைகின்றனர்.
7. அதிகமான இரசாயன உள்ளீடுகளின் பாவனையும் நிலம் மற்றும் நீர் மாசடைதலும்
8. சிறு நில விவசாயிகள் பாதிக்கப்படுதல்.
9. காலநிலை மாற்றத்தின் பாதிப்பு காணப்படுகின்றது.
10. அரசின் ஊக்குவிப்புக்கள் குறைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மத்திய அரசால் நடைமுறைப்படுத்தப் படுகின்ற விவசாயம் சார்ந்த கொள்கைகள் வாக்கு வங்கியை கவர்வதாக இருக்கின்றது. இந்நிலமை வட பகுதி யிலும் காணப்படுகின்றது. விவசாயிகளுக்கு சிறிய சிறிய உதவிகளை செய்து அரசியல் வாதிகளை பிரபல்யப்படுத்தி அவர்களில் என்றும் தங்கியிருக்கின்ற, பிறரின் கைகளை எதிர்பார்த்து இருக்கின்ற ஏழ்மை விவசாயக் கூட்டத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. பலம்மிக்க விவசாயிகளை உருவாக்கி உறுதியான விவசாய வெளியீட்டின் மூலம் பசுமை புரட்சிக்கு இட்டுச் செல்வதை தவிர்த்து, அடிக்கடி அரசியல் வாதிகளின் வாசல்படிகளுக்கு விவசாயிகளை கவர்ந்து இழுக்கின்ற விவசாய கொள்கையே இங்கு காணப்படுகின்றது. மண்வெட்டி, கோடரி, விதைப் பக்கற்றுகள், வீட்டுத் தோட்ட ஊக்குவிப்புக்கள் என கடந்த காலத்தில் திவிநெகும திட்டத்திலும் விவசாய திணைக்களத்தால் வழங்கப்பட்ட உபகரணங்கள் மற்றும் ஏனைய உள்ளீடுகளில் அரசியல்வாதிகள் தங்களை பிரபல்யப்படுத்தி வாக்கு வங்கியை கவர்வதாக இருந்தது, உண்மையில் இந்த ஏழ்மை விவசாயத்தால் விவசாயிகளின் வருமானம் வாழ்க் கைத்தரம் அதிகரிக்க மாட்டாது. இது இலங்கையின் தேசிய விவசாய அபிவிருத்தி கொள்கையாக இருப்பதால் இவற்றின் மூலம் நாங்கள் பெற்றுக் கொண்ட அனுபவத்தின் அடிப் படையில் வடமாகாண பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பணியில் விவசாய அபிவிருத்திக்கு பிரதான பங்கு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே வடமாகாண சபை கடந்த ஒரு வருடத்தில் காத்திரமான விவசாயக் கொள்கையை கடைப்பிடித்ததாக அல்லது அறிமுகப்படுத்தியதாக கூறமுடியாது உள்ளது. இவர்கள் அரசியல் ரீதியாக பொருளாதார அபிவிருத்திக்கான தளத்தை அமைக்க முடியாமல் இருக்கின்ற போது, உறுதி யான விவசாய கொள்கைக்கான நடவடிக்கைகளை மேற் கொள்வது கடினமானது.

இருப்பினும் வடக்கின் விவசாய அபிவிருத்திக் கொள்கையானது நன்கு திட்டமிட்டு நவீன யுகத்துக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். அவ்வாறான விவசாய அபிவிருத்திக்கான வழி முறைகளாக பின்வருவனவற்றை சுட்டிக்காட்ட முடியும்.

### 3. நவீன விவசாயத்துக்கான வழிமுறைகள்

1. விவசாயம் தொடர்பான அனைத்து புள்ளிவிபரங்களையும் பெறக் கூடிய வகையில் ஓர் தரவு வங்கியை தொடர் புடைய அமைச்சு உருவாக்க வேண்டும். திட்டமிடலுக்கு தரவுகள் அவசியமானவை. வடபகுதியில் விவசாய நிலம், மண்வகைகள், நீர் வசதிகள், விவசாயிகள், உள்ளீடுகளின் பாவனை, ஆய்வுகளின் தலைப்புக்களின் தொகுப்பு, வள ஆர்வலர்களின் விபரம், உற்பத்தி, விலை, இருப்புக்களின் போக்கு போன்ற பலதரப்பட்ட தரவுகள் அவசியமானவையாகும். இவற்றை உருவாக்குவதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று விடாமல் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். தரவு கள் உண்மைத் தன்மை உடையதாக பேணப்படல் வேண்டும். கோப்பாயில் நெல் விவசாயம் செய்யும் நிலப் பரப்பு கோப்பாயின் மொத்த நிலப்பரப்பை விட அதிகமாக இருந்தது என ஓர் கடந்தகால புள்ளிவிபரம் குறிப்பிடு கின்றது. இந்நிலமை மாற்றப்பட வேண்டும். அரசியல் வாதிகளுக்கு தங்கள் வாக்கு வங்கியை பலப்படுத்த தவறான புள்ளிவிபரங்களை மாகாணசபை அதிகாரிகள் உருவாக்க கூடாது, அவர்கள் தங்களின் கடமைகளை நேர்மையாக செய்ய வேண்டும்.

## 2. விவசாயப் புரட்சிக்கான விவசாயக் கொள்கை

சிறு சிறு உதவிகளை செய்து விவசாயிகளை ஏமாற்று வதை விடுத்து பாரிய அளவுத்திட்ட சிக்கனங்களை உருவாக்க கூடிய நவீனமயப்படுத்தப்பட்ட பண்ணைக ளையும் முயற்சியாளர்களையும் உருவாக்குதல் வேண்டும். இதன் அர்த்தம் சிறு நில முயற்சியாளர்களை வலுப்படுத் தக்கூடிய கொள்கைகளை உருவாக்காமல் விடுதல் என்பதல்ல. விவசாய புரட்சியானது சிறுநில முயற்சி யாளர்களால் ஏற்பட்டது என்பதற்கு உலகில் எந்த நாட்டையும் உதாரணம் காட்டமுடியாது. எனவே பசுமை புரட்சி பெரிய மூலதனம் படைத்த நவீனமயப்படுத்தப்பட்ட விவசாய முயற்சியாளர்களால் மட்டுமே அடையப்பட முடியும். விவசாயக் கொள்கையானது பாரிய அளத்திட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கனங்களை முயற்சியாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் உருவாக்கப்படுதல் வேண்டும். பாரிய பண்ணைகள் பாரிய பெருந்தோட்டங்கள், பாரிய சிறு தானிய பயிர் உற்பத்திகள் மற்றும் விலங்கு வளர்ப்பு, பறவை வளர்ப்பு, என தனியார் துறையை பாரிய உற்பத் திக்கு உள்ளீர்க்க வேண்டும். தனியார் துறையில் புலம் பெயர் நாடுகளில் ஏற்கனவே நல்ல அனுபவங்களைப் பெற்ற முயற்சியாளர்களை இப்பாரிய பண்ணைகளை உருவாக்க கூடிய வகையில் கட்டியெழுப்ப வேண்டும்.

பாரிய விவசாய பண்ணைகளின் உருவாக்கம், வடக்கின் மத்திய அரசின் திட்டமிட்ட குடியேற்றங்களை தடுத்து நிறுத்துவதற்கான வாய்ப்பினையும் வழங்குகின்றது. பொது நிலங்கள் பாரிய பெருந்தோட்டங்கள் மூலம் பிரதேச முயற்சியாளர்களால் நீண்ட கால குத்தகை அடிப்படையில் கையடக்கப்படும் போது பிரதேசத்தின் விவசாய அபிவிருத் தியுடன் சூழல் சமநிலை மற்றும் தேசிய உறுதிப்பாடும் ஏற்பட வழி வகுக்கும்.

பாரிய பண்ணைகள் மூலம் மாகாண அரசு திரட்டுகின்ற வருமானங்களை சிறுமுயற்சியாளர்கள் ஊக்குவிக்க பயன் படுத்தலாம். யாழ் மாவட்டம் சிறுமுயற்சியாண்மை விவசாயத் திற்கும் வன்னி பெருநிலப்பரப்பு பாரிய அளவுத்திட்ட சிக்கன விவசாயத்துக்கும் உகந்ததாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணம் நிலப்பரப்பு அதிகமாகவும் சனத்தொகை செறிவு குறைவாகவும் காணப்படுவதால் சிறு நிலத்தில் செறிவாக்க (Intensive) உற்பத்தி தொழில்நுட்பங்கள் பயன் படுத்துவதை தவிர்த்து விரிவாக்க உற்பத்தி விவசாய கொள்கைக்கு சாதகமாக காணப்படும். தைவான், ஜப்பான் போன்ற நாடுகளில் நிலப்பற்றாக்குறை காரணமாக விரிவாக்க கொள்கைகளை விட செறிவாக்க கொள்கைகள் பயன்படுத் தப்பட்டன. மூலதனத்தை அதிகமாக கொண்ட நாடுகளுக்கு செறிவாக்க உற்பத்திக் கொள்கை அதிக உற்பத்தியை பெற்றுக் கொடுத்தாலும் இது பிரதேசத்திற்கு பிரதேசம் மற்றும் பயிருக்கு பயிர் வேறுபடலாம். பசுமைப்புரட்சிக்கு விரிவாக்க (Extensive) மற்றும் செறிவாக்கக்( Intensive) கொள்கைகள் அவசியமாகின்றன.

## 3. விவசாயக் கொள்கையும் சூழல் பாதுகாப்பும்

விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு மேற் கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் இயற்கை வளங்களை அழிவடைய செய்து சூழலை மாசடைய செய்கின்றன என்பது இன்று வளர்ந்து வரும் நாங்கள் முன்வைக்கும் பிரதான ஓர் வாதமாகும். உற்பத்தியா அதாவது மேம்பாடா? அல்லது சூழல்பாதுகாப்பா? எது முதல் அடையப்பட வேண்டும்? என்பதில் வாதப் பிரதிவாதங்கள் காணப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இன்றைய வளர்ந்த நாடுகள் அவை நாங்கள் இன்று அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் கொண்டிருக்கின்ற வருமான மட்டத்தில் இந்த சூழல் பாதுகாப்பு விடயங்கள் யாவற்றையும் கவனத்தில எடுத்துக் கொண்டுதான் பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் அடைந்தனவா? என்பது மிக முக்கியமான வினாவாகும்.

வடக்கு மாகாணத்தில் பல மனித உரிமை மீறல்கள் ஆள்கடத்தல்கள், மனித குலத்துக்கே அநாகரிகமான செயற்பாடுகளின் மத்தியில் சூழல் அதாவது இயற்கையை பாதுகாத்தல் என்பது விசித்திரமானதாக காணப்படுகின்றது. மனித உயிர்களா? மரங்களா? எது முக்கியம். உண்மையில் இரண்டும் முக்கியம்தான். ஆனால் ஓர் நாட்டில் மனிதனாக பிறந்த ஒருவரும் இவ்வுலகில் வாழும் காலத்தில் அவர்களுக்கு தேவையான வருமானத்தை பெறுவதற்கு இயற்கையை பயன்படுத்தல் என்பது அவசியமான ஒன்றாகும். எனவே உற்பத்திக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படுதல் வேண்டும். உற்பத்தியின் போது சூழல் பாதுகாப்பு முறைகள் அவசியமானவை ஆகும். வடமாகாண விவசாய அபிவிருத்தியில் உற்பத்தியில் ஓர் தன்னிறைவு அடைந்து மக்களின் வருமான மட்டம் உயர்வடைவதற்கு முன்னர் சூழல் பாதுகாப்பு என்ற பெயரில் விவசாய அபிவிருத்தி தடைப்படுகின்றது. எனவே இரண்டும் இணைந்த வகையில் விவசாய அபிவிருத்தி முன்னெடுக்கப் படுதல் வேண்டும். பொருளாதார வளர்ச்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக ஊட்டிய பெறுமதியைக் கொண்டிருக்கின்ற விவசாயத் துறையின் அபிவிருத்தியில் சூழல் பாதுகாப்பு இரண்டாம் நிலையே முதல் நிலையாக இருந்து உற்பத்தியை தடுக்க கூடாது.

## 4. பாதுகாப்பான விவசாயக் கொள்கை

மாகாண சபை அரசு மத்திய அரசின் விவசாயக் கொள்கையுடன் இணைந்ததாக விவசாயக் கொள்கையை கொண்டிருக்க வேண்டும். இருப்பினும் இலங்கையுடன் விவசாயக் கொள்கையானது விவசாயிகளை பாதுகாப் பதாக அமையவில்லை. இந்நிலையில் மாகாண மட்டத்தில் விவசாயிகளை பாதுகாக்க கூடிய கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும். இப்பாதுகாப்புக் கொள்கையை அடைவதற்கு வரி, மானியம் கடன்கள் போன்ற கருவி களைப் பயன்படுத்தலாம். காலப்போக்கில் மாகாண மட்டத்தில் கட்டுப்பாடுகளை கூட விதிக்கலாம்.

## 5. விலைத் தளம்பல்களைத் தடுத்தல்.

வடமாகாணத்தில் பல விவசாய உற்பத்திகள் மிக மோசமான விலைத் தளம்பல்களைக் கொண்டிருக்கின்றன. இவ்விலைத் தளம்பல்கள் காரணமாக இடையீட்டாளர்கள் அதிக இலாபத்தை பெறுகின்றார்கள் உதாரணமாக ஒரு கிலோ வாழைப்பழத்தில் நுகர்வோன் விலையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்குதான் விவசாயிகளுக்கு கிடைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுதி இரண்டு பங்கும் இடையீட்டாளர்கள், வர்த்தகர்கள் ஏனைய பலர் பங்கீட்டுக் கொள்கின்றார்கள். ஓர் உற்பத்தியில் அதிக பங்காற்றிய உற்பத்தியாளனுக்கு சிறிய பங்கும் சிறிய அளவில் பங்காற்றிய இடையீட்டாளர்களுக்கு அதிக பங்கும் சென்றடைகின்றது. இது உற்பத்திக்கு உற்ப்பத்தி வேறு பட்டாலும் அதிகமான பங்கினை இடையீட்டார்கள் உறுஞ்சிக் கொள்கின்றார்கள் என்பது வெளிப்படையாகின்றது.

இடையீட்டாளர்கள். மற்றும் விலைத்தளம்பல்களில் இருந்து விவசாயிகளை பாதுகாப்பதற்கு ஓர் பொருத்தமான பொறிமுறை ஒன்றினை ஏற்படுத்த வேண்டிய அவசியம் மாகாண அரசுக்கு இருக்கின்றது. சரியான அரச தலையீடு விவசாயத்துறையில் இல்லாமையே இந்த விலைத் தளம்பல் களுக்கும் உற்பத்தியாளர்கள் சுரண்டப்படுவதற்கான காரண மாக காணப்படுகின்றது.

இந்த பிரச்சினையை தீர்த்து விவசாயத்துறையை பாதுகாப்பதற்கு மாகாண அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. நவீன விவசாயத்துக்கான மாகாணசபையின் நடவடிக்கைகள்

### 1. விவசாய உள்ளீட்டு மற்றும் பதனீட்டு கைத்தொழில்களை வளர்த்தல்.

விவசாயத்துடன் இணைந்த வகையில் விவசாய உற்பத்திகள் பதனிடல், மூலம் கைத்தொழில்களை உருவாக்கி ஊட்டிய பெறுமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியும். உதாரணமாக சில பருவங்களில் பீற்றூட் கிலோ 5-10 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் பீற்றூட்டை உள்ளீடாக பயன்படுத்துவதன் ஊடாக இவ்விலையை அதிகரிக்க முடியும். சீனி செய்தல், பீற்றூட் வற்றல் செய்தல் என்பன சில உதாரணங்கள் ஆகும். இதேபோன்று தக்காளிப்பழம், ஏனைய மரக்கறிகளுக்கும், பருவகால விலைத்தளம்பல் ஓர் பிரச்சினையாக காணப்படுகின்றது. விவசாய உற்பத்திகளில் எல்லா உற்பத்திகளையும் பதப்படுத்தி சேமிக்க முடியும். உதாரணமாக நான் சீனாவில் கலாநிதிப் படிப்பு படித்த காலத்தில் பிரான்சுக்கு சென்று இருந்தேன். எனது சகோதரன் கேட்டார் என்ன சாப்பாடு விருப்பம் என்றார். சீனாவில் இருந்த காலத்தில் கீரை சமைப்பது கஷ்டமாக இருந்தது. கீரை சமையுங்கள் என்றேன். கீரை சமைக்கப்பட்டது. ஆனால் அந்த கீரை சீனாவில் இருந்து பதனிட்டு பிரான்சின் சந்தைக்கு வந்திருந்தது. சில மணித்தியாலங்களில் வாடிபோகும். கீரையை உலர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெடிமேட் கீரைக்கறிக்கு ஏற்றவாறு உணவு பதனிடல் தொழில் நுட்பம் வளர்ந்து இருக்கின்றது என்பதற்கு இது சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும். எனவே உணவு பதனிடல் கைத்தொழில் வடமாகாணத்தின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அவசியமானதாகும். இக்கைத் தொழில் உற்பத்திகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்களின் கேள்வியும் போதியளவில் இருப்பதால் இவைகளின் அபிவிருத்தி விலைத்தளம்பல்களில் இருந்து விவசாயிகளுக்கு பாதுகாப்பு தருவதோடு வளர்ந்த நாடுகளின் கொள்வனவு சக்தியுடன் கூடிய சந்தையில் இருந்து அதிக வருமானத்தையும் உழைக்க முடியும்.

**2. ஏற்றுமதி மேம்பாட்டு ஊக்குவிப்புக்கள்**

இன்று போக்குவரத்து மிகவேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. எனவே விமானப் போக்குவரத்து மூலம் வடமாகாணத்தில் இருந்து நேரடியாக மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள், மாலைதீவு போன்ற நாடுகளுக்கு மரக்கறிகளை ஏற்றுமதி செய்யக் கூடிய ஓர் ஏற்றுமதி மேம்பாட்டினை ஊக்கப்படுத்துவதனூடாக விலைத்தளம்பல் மூலம் உற்பத்தியாளர் பாதிக்கப்படுவதை தவிர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. குளிரூட்டப்பட்ட பாரிய களஞ்சியங்கள்.

வடமாகாணத்தின், விவசாய உற்பத்திகளின் விலைத் தளம்பலுக்கு பிராதான காரணம் இவ் உற்பத்திகள் உற்பத் தியாளனிடம் இருந்து தாரகர்கள் ஊடாக நேரடியாக சந்தையை சென்றடைவதாகும். மேலே பீற்றூட், தக்காளி, போன்றன ஓர் குறிப்பிட்ட மாதத்தில் அதிகளவான நிரம்ப லைக் கொண்டிருப்பதால் விலை குறைவடைகின்றது.

இவ் உற்பத்திகள் நேரடியாக சந்தைக்கு வருவதை தவிர்த்து பாரிய குளிரூட்டி களஞ்சியத்துக்கு சென்று அதன்வழி அவை சந்தையை அடையுமாக இருந்தால் இவ் விலைத்தளம்பல் உற்பத்தியாளனை பாதிக்காது என பல நாடுகளின் அனுபங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக ஜப்பானில் பழங்கள், மரக்கறிகள், மீன்கள் போன்ற பருவகால உற்பத்திகள் சிறு உற்பத்தியாளர்களிடம் இருந்து நேரடியாக சந்தைக்கு செல்லாமல் குளிரூட்டப்பட்ட களஞ்சியத்துக்கு சென்று அங்கிருந்து சந்தைக்கு ஓர் நிலையான நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் செல்கின்றன. சந்தையில் நுகர்வோனுக்கு விற்பனை செய்யப்படும் விலை க்கும் களஞ்சியத்தில் விற்பனை செய்யப்படும் விலைக் குமிடையில் வேறுபாடு நிலையானதாக காணப்படுகின்றது. பருவகால மாற்றத்தால் ஏற்படும் விலை அதிர்வுகளால் ஏற்படுகின்ற ஏற்ற இறக்கங்களை இந்த களஞ்சியம் தன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தே கட்டுப்படுத்திக் கொள்கின்றது. இது விவசாயிகளைப் பொறுத்த வரையில் இலாபகரமானதாக நல்ல விலையை பெற வாய்ப்பு கிடைக்கின்றது.

மேற்குறிப்பிட்ட குளிரூட்டப்பட்ட களஞ்சியங்களை அமைப்பதற்கு அதிக மூலதனம் தேவைப்படுவதோடு இவை களை பராமரித்து முகாமைப்படுத்துவதற்கு நல்ல நிறுவன ங்கள் அவசியமாகின்றன.

வடமாகாணத்தில் பல கூட்டுறவு சங்கங்கள் இந்த தொழிற்பாடுகளை மேற்கொண்டால் அவை சிறந்த பெறுபேற் றை பெற்றுத்தருமா? என்பது கேள்விக் குறியாகும். கூட்டுறவு சங்கங்களில் உள்ள பல குறைபாடுகள் தோல்விக்கு காரண மாக அமைந்தன. எனவே இந்த களஞ்சியங்களை நிர்வகிப் பதற்கு விவசாயசம்மேளனங்களையும் விவசாயிகள் சார்ந்த விவசாய அமைப்புக்களையும் பலப்படுத்தி நிர்வாகத்தையும் ஒப்படைப்பதோடு இவைகளை ஒட்டுமொத்தமாக நிர்வகிப் பதற்கு மாகாண விவசாய அமைச்சுக்கு கீழே ஓர் முகா மைத்துவ நிறுவனம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். பொதுவாக பொதுத்துறை சார்ந்த நிர்வாகம் பல முறை கேடுகளை கொண்டிருப்பதால் இக்களஞ்சியங்களின் முகா மைத்துவத்தின் தனியார் துறையிடம் ஒப்படைத்து விவசா யிகளின் நலன்களை உயர்த்தலாம். இப்பொறிமுறை வெற்றி யளிக்குமாயின் விவசாய உற்பத்திகளின் விலைத்தளம்பல் கட்டுப்படுத்தப்படுவதோடு விவசாயிகளுக்கு நல்ல விலையும் இதன் மூலமான வருமானம் அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. தொழில்நுட்பமும் விலைத்தளம்பலும்

தொழில்நுட்பத்தின் சரியான பிரயோகம் மற்றும் இவைகளின் முன்னேற்றங்கள் விவசாய உற்பத்திகளின் விலைத் தளம்பல்களை தடுத்து விவசாயிகளுக்கு நன்மை களை பெற்றுக்கொடுக்கும். விவசாயம் இயற்கையுடன் இணைந்த ஓர் உற்பத்தியாக இருப்பதால் இயற்கையின் மாற்றங்கள் உற்பத்தி மீது தளம்பல்களை ஏற்படுத்தி விலை வீழ்ச்சிக்கு காரணமாக இருக்கின்றது. தொழில்நுட்பம் இயற் கையின் பாதகமான விளைவுகளை சரியாக எதிர்வு கூறுவ தாக இருந்தால் உற்பத்தி தளம்பல்களை தடுக்கப்படுகின்றன. எனவே தொழில்நுட்ப முன்னேற்றம் விவசாய உற்பத்தியில் இருக்கும் நிச்சயமற்ற தன்மையைக் குறைக்குமாக இருந்தால் விலைத்தளம்பல்கள் தவிர்க்கப்படுகின்றது. வளர்ந்த நாடு களில் இவ்வாறான இயற்கை மீதான தொழில் நுட்ப முன்னேற்றம் விவசாயிகளுக்கு பல நன்மைகளை பெற்றுக் கொடுக்கின்றது.

வடமாகாணமும் இலங்கையில் வேறுபட்ட தரைத் தோற்ற வானிலை காலநிலைகளை கொண்டிருப்பதால் மாகாண அரசின் இவை மீதான ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப் புக்கள் விலைத்தளம்பல்களை நீக்கி விவசாயிகளின் வருமானத்தை உறுதிப்படுத்தும். பலமடையச் செய்யும். இந்த நடவடிக்கைக்கு எற்ற வகையில் பல்கலைக்கழகங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சி நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் பழமைபேணும் இப்பல்கலைக்கழகங்கள் இவ் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யத்தக்க வகையில் உருவாக்கப்பட்டுள்ளனவா, என்பது ஆராய்சிக்குரியது. எனவே இந்நோக்கத்தை நிறைவேற்றத்தக்க வகையில் புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட வேண்டும். (Northern Agricultural University) முக்கியமாக மாகாண அரசின் கீழ் நிறுவப்பட வேண்டும். இப்பல்கலைக்கழகம் நவீனத்துவத்துக் காவ ஓர் வாயிலாக இருக்க வேண்டும். இது ஏனைய மாகாணங்களுக்கு முன்மாதிரிகளைக் கொடுக்க வேண்டும்.

விலைத்தளம்பலை தொழில்நுட்பம் ஊடாக உற்பத்தி, சந்தைப்படுத்தல், பதனிடல், களஞ்சியப்படுத்தல் வினைத் திறன் போன்ற அனைத்து விடயங்களில் பயன்படுத்துவதன் ஊடாக கட்டுப்படுத்த முடியும்.

**5. விவசாயக் கைத்தொழில்களின் வளர்ச்சி**

வடமாகாண விவசாயக் கொள்கையில் இன்னொரு முக்கியமான விடயம் மனித வளத்தை விவசாயத்துடன் இணைத்து விவசாயக் கைத்தொழில் உபகரணங்களை உற்பத்தி செய்யும் விவசாய பொறியில் பகுதி விரிவாகவும் உள்நாட்டு தேவையுடன் இணைந்த வகையில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். பல நாடுகளின் அபிவிருத்தியின் அனுபவங்களின் அடிப்படையில் பசுமைப்புரட்சி என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்து விவசாயத் துறையுடன் மட்டுப்படுத்தப்படவில்லை. மாறாக இது கைத்தொழில் மற்றும் விவசாய துறைகளுக்கு இடையில் பின்கொழு மற்றும் முன் கொழுக்களை ஏற்படுத் தியதன் விளைவாக ஏற்பட்டதாகும். விவசாயத் துறையின் வெளியீடு கைத்தொழில் துறைக்கு உள்ளீடாக செல்லும் அதேநேரம் கைத்தொழில்துறையின் வெளியீடுகள் விவசாயத் துறைக்கு உள்ளீடாக செல்ல வேண்டும். இவ்வாறு இரு துறைகளுக்கும் இடையில் ஓர் உள்ளார்ந்த பிணைப்பு உள்ள வகையில் விவசாய அபிவிருத்தி அமைய வேண்டும். மாறாக வெளிநாட்டில் இருந்தோ அல்லது ஏனைய மாகாணங்களில் இருந்தோ உற்பத்தியாகின்ற கைத்தொழில் உள்ளீடுகளை விவசாயத்துறை உள்வாங்கும் போது மாகாணத்துக்கு விவசாயத்துறையில் கிடைக்கின்ற ஊட்டிய பெறுமானம் குறைவடைந்து இலாபம் வீழ்ச்சியடைந்து விவசாயிகளின் வருமானம் மற்றும் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடையும். விவசாயத் திட்டமிடலானது இந்த ஏனைய துறை சார்ந்த விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

### 6. விவசாய அபிவிருத்தி வங்கி

விவசாயத்துறைக்கு கடன் வழங்கல் விவசாயத் துறைக்கான உட்கட்டிடங்களுக்கான பிணைப்பத்திரங்கள், முறிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் ஊடாக விவசாயிகளின் நலன்களை முதன்மை படுத்திய வகையில் "விவசாய அபிவிருத்தி வங்கி" ஒன்று ஸ்தாபிக்கப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இவ்வங்கி எந்த வகையிலும் அரசியல் கலப்பு இல்லாமல் சுயாதீனமாக தொழிற்பட்டு தமது இலக்கை அடைவதற்கு வழிவகுத்தல் வேண்டும். உதாரணமாக பெருந் தோட்டங்களை அமைப்பதற்கு மட்டும் அல்ல சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கான நிதி வசதிகளை, மற்றும் காப்புறுதி, ஏனைய நிதிச் சேவைகளை இவ்வங்கி வழங்க முடியும். பாரிய குளங்கள், மற்றும் ஆறுகள் திசை திருப்புத்திட்டங்களை உருவாக்கும் போது அவற்றுக்கு தேவையான நிதியினை இவ்வங்கி விசேட விவசாய அபிவிருத்தி முறிகளை வழங்குவதன் மூலம் நிதியை திரட்டி அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு உதவி புரிய முடியும். விவசாய பல்கலைக்கழகம் மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு கூட இவ் வங்கி நிதி வசதிகளை வழங்க முடியும். பல நாடுகளில் விவசாயத் துறைக்கு என பிரத்தியேகமான முறையில் உருவாக்கப்பட்ட வங்கிகள் பசுமைப் புரட்சியில் குறிப்பிடக்கூடிய பங்கினை வகித்து இருந்தன. இவ்வங்கியின் நிதி உதவிகள் ஏழ்மை விவசாயத்தை உருவாக்குவதை தவிர்ந்து சுதந்திரமான தேசிய மற்றும் சர்வதேச ரீதியால் போட்டியிடக்கூடிய விவசாய முயற்சிகளை உருவாக்க வேண்டும். இவ்வங்கி அரசியல் தலையீடுகள் இன்றி சுயாதீனமாக இயங்க வழிசெய்தல் வேண்டும். விவசாயிகளின் சேமிப்புக்களை திரட்டுதல், கடன்வழங்கல், அபிவிருத்திக்கு நீண்டகால கடன், வழங்கல் என்பன இவற்றின் இலக்குகள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. விவசாய நிறுவன அமைப்புக்களின் அபிவிருத்தி

மாகாணசபை அரசு விவசாய அபிவிருத்தியின் ஓர் அங்கமாக விவசாயிகளின் சிவில் அமைப்புக்களை புதிதாக உருவாக்குவதும் ஏற்கனவே உள்ள அமைப்புக்களை மறு சீரமைத்து புதுப்பொழிவுடனும் விவசாயிகளின் வலுவூட்டல் சக்தியை அதிகரிக்க கூடிய வகையில் விருத்தி செய்தல் வேண்டும். ஏற்கனவே வடக்கு கிழக்கில் பல விவசாய அமைப்புக்கள் இயங்குகின்றன. இவ்வமைப்புக்களில் உள்ள குறைபாடு யாது எனில் அவை வலுவான பொறிமுறையே அல்லது வலுவடைவதற்கான நிதி வசதியையே கொண்டு காணப்படாமையால் அரசியல் வாதிகளின் ஆதரவின் கீழ் வலுவற்று இயங்குவதாகும். இலங்கையில் ஏனைய மாகாணங்களில் உள்ளது போன்று இவற்றை அரசியல்வாதிகள் தங்கள் வாக்கு வங்கியை பலப்படுத்துவதற்கு பயன்படுத்துவதாகும். நிதி முகாமைத்துவம், தொழில்நுட்பம் சார்பாக வலுவற்று இருக்கும் இவ்வமைப்புக்களுக்கு இங்கொன்று அங்கொன்றுமாக சில கவர்ச்சிகரமான சலுகைகளையும் உதவிகளையும் வழங்கி இவ்வமைப்புக்களை அரசியல் வாதிகள் தங்களின் இம்சைகளை தீர்ப்பதற்கு பயன்படுத்துவதாகும். இந்த சாபக்கேடு விவசாயிகளை ஓர் நவீனத்துவத்துக்கு இட்டுச் செல்வதை தடுத்து என்றுமே பிறர் கைகளை எதிர்பார்த்து இருக்கும் ஏழ்மை விவசாயத்தை உருவாக்கியுள்ளது. விவசாயிகளின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை கீழ்நிலையில் வைத்திருப்பதன் ஊடாக அரசியல் வாதி தனது நலன்களை உயர்த்திக் கொள்கின்றான். இந்நிலைமை வட மாகாணத்தில் மாற்றமடைய வேண்டும். இம்மாற்றமானது விவசாயிகள் சார்ந்த அமைப்புக்களை வலுப்படுத்துவதிலேயே பெரிதும் தங்கி இருக்கின்றது.

விவசாய அமைப்புக்களின் பலமே விவசாயத்துறை மக்களின் பலம் என்பது பல நாடுகளின் அனுபவத்தின் மூலம் அறிய முடிகிறது. ஜப்பான், ஸ்ரேல், பிரான்ஸ் போன்ற நாடுகளில் இவ்வமைப்புக்கள் மிகவும் பலம் பொருந்தியனவாக இருப்பதனால் அவை விவசாயிகளின் வருமான அதிகரிப்பில் மிக முக்கியமான பாத்திரத்தை வகிக்கின்றன. எனவே வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத் தியில் மாகாண அரசுகள் எவ்வித அரசியல் கலப்படம் இல்லாமல் விவசாய அமைப்புக்களை வலுப்படுத்துவதற்கு காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ் வமைப்புக்களுக்கு பெருந்தொகையான மூலதன நிதிப்பாய்ச் சல், முகாமைத்துவம், தொழில்நுட்ப வசதிகள் போன்ற வற்றை மாகாண அரசுகள் பெற்றுக்கொடுப்பதன் மூலம் இவ்வமைப்புக்களைப் பலப்படுத்தி அதன் வழி விவசாயி களின் பேரம் பேசும் ஆற்றலை அதிகரித்து வலுவூட்டல் சக்தி அதிகரித்து விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கும். இது ஓர் முக்கியமான வலுவூட்டல் கருவியாக தொழிற்பட முடியும். உதாரணமாக நீரவேலி வாழை உற்பத்தியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்துக்கு நாம் களப்பயணம் செய்த போது இச்சங்கம் ஓர் வலுவற்ற முகாமைத்துவ அமைப்பாக இருப்பதை அவதானிக்க முடிந்தது. ஒழுங்கான வாகன வசதி இல்லை. இடவசதி போதாது, நீண்டகால களஞ்சிய வசதி இன்மை, முகாமைத்துவம் பிரச்சினைகள் என பல இன்னல்கள் மத்தியில் இயங்கியதை அவதானித்தோம். விவசாய சங்கங்களில் ஓரளவு சிறந்த அமைப்பு என பலரால் விதந்துரைக்கப்பட்ட இவ்வமைப்பே இந்நிலமையில் இருந்தால், ஏனைய உற்பத்திகளின் அமைப்பு எப்படி இருக்கும் என உணரமுடிந்தது. வளர்ந்த நாடுகளில் சிறிய உற்பத்தியாளர்களைக் கொண்ட பொருள் உற்பத்திக்கே வலுவான சங்கங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. வடக்கில் அவ்வாறான சங்கங்கள் ஒவ்வொரு உற்பத்திகளிலும் காண முடியாது. இவ்வாறான சங்கங்கள் உருவானால் உற்பத்தியாளர் பலமடைந்து அதிக விலையை கொடுக்க வேண்டி ஏற்படும் என்பதற்காக அரசுகள் திட்டமிட்டு இவற்றின் நடவடிக்கைகளை மழுங்கடைய செய்கின்றன.

ஊக்குவிப்புக்கள் இல்லை, மூலதனமாக்கம் இல்லை, பயிற்சிகள் இல்லை, எனவே பல உற்பத்திகளுக்கு அவ்வாறான அமைப்புக்களே இல்லை. விவசாய பொது அமைப்புக்கள் விவசாயிகளின் ஓர் சமூக மூலதனம் ஆகும். இவ்வமைப்புக்களின் வளர்ச்சி அங்கத்தவர்களுக்கு பல சேவைகளை வழங்குவதன் வழி விவசாயிகளின் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்காற்றுகின்றன. இவ் வமைப்புக்களை பலப்படுத்துவது தேசிய பொருளாதாரத்தை பயன்படுத்துவதற்கான ஓர்வழி ஆகும்.

விவசாய அமைப்புக்கள் ஒவ்வொன்றும் அவைகளின் உற்பத்தி வழியில் ஒன்றாக மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் சம்மேளனங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும். இச்சம்மேளனங்கள் ஒவ்வொரு உற்பத்தி பொரு ட்களுக்கும் இருப்பதோடு பின்னர் அவற்றை உள்ளடக்கி மாகாணமட்டத்தில் சம்மேளனங்களை உள்ளடக்கிய ஒன்றி யத்தை ஏற்படுத்த முடியும். இவ்வாறு கீழ் மட்டத்தில் இருந்து மேல்மட்டம் வரை வலுவான உறுதி மிக்க அமைப் புக்கள் உருவாகும் போது உண்மையான விவசாயிகளுக் கான பொருளாதாரக் கொள்கைகளை முன்னெடுத்து செய்வதற்கு அரசை நிர்பந்திக்க முடியும். இதைவிடுத்து சிறிய சிறிய உதவிகளை செய்து விவசாயிகளை பாது காக்கும் பாதுகாவலன் என்ற நடிப்பை அரசுகள் செய்வதை தவிர்த்து உண்மையான பாதுகாவலனாக உருவாக்க முயற்சிக்க வேண்டும். இது ஓர் ஆக்கபூர்வமான சிபார்சுகளாக இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03

## வடமாகாண சபையின் ஒரு வருட கால பொருளாதார அபிவிருத்தி: அரசியல் பொருளாதார நோக்கு

இலங்கையில் பல நூற்றாண்டுகளுக்கு மேலாக தொடர்கின்ற இனமுரண்பாட்டுக்கான ஓர் அடிப்படைத் தீர்வாக மாகாணசபை அரசியல் முறைமை அமுல்படுத்தப்பட்டு அதிகாரப் பரவலாக்கம் ஊடாக மாகாணங்களின் குறிப்பாக வடமாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தி அடையப்படும் என கூறப்பட்டது. இருப்பினும் இலங்கையில் ஏனைய மாகாணங்களில் அதிகாரப் பரவலாக்கத்தின் மூலமான அபிவிருத்திக்கான தேவை எழாத போதும் எல்லா பிரதேச ங்களிலும் ஒப்புரவான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு இம்மாகாணசபை அவசியம் என பலர் குறிப்பிட்டுள்ளனர். அதிகாரப் பரவலாக்கம் அவசியப்பட்ட வடக்கு மாகாணசபை இயங்கத் தொடங்கி ஓர் வருடகாலம் முடிவடைந்த நிலையில் வடமாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தியின் இன்றைய நிலையையும், வடக்கில் தமிழ்த் தேசிய பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்ப வேண்டிய அவசியத்தையும், தமிழ்த்தேசிய பொருளாதாரம் ஒன்றை உருவாக்குவதற்கான பொறிமுறைகளையும் இக்கட்டுரை எடுத்து விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. அரசியல் அதிகாரமும் தமிழ் தேசியப் பொருளாதாரமும்

நடைபெறுகின்ற ஒற்றை ஆட்சியில் வடக்கு மக்களின் பொருளாதார அபிவிருத்தி இன மத மொழி வேறுபாடு இன்றி நடைபெற்று இருந்தால், அரசியல் அதிகார பரவலாக்கத்துக் கான தேவை ஏற்பட்டு இருக்க மாட்டாது. பொருளாதார அபிவிருத்தியில் சிறுபான்மை மக்கள் செறிவாக வாழும் பிராந்தியங்கள் ஓரங்கட்டப்பட்டதன் காரணமாகவே அரசியல் அதிகார பரவலாக்கத்துக்கான கேள்வி எழுந்தது. இந்த பின்னணியில் மாகாண சபைகளுக்கு இருக்கின்ற அதிகா ரங்கள் அவை சார்ந்த பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய போதுமானவையாக இல்லை என்பது கடந்த ஒரு வருட காலத்தில் வடக்கு மாகாணசபை அனுபவத்தின் வாயிலாக கற்றுணர்ந்து கொள்ள முடிந்தது. முதலமைச்சர் எல்லா அலுவல்களுக்கும் ஆளுநரின் அனுமதியை பெறுகின்ற இம்முறையில் பொருளாதார அபிவிருத்தியை மாகாண சபை முன்னெடுக்க முடியாது. மாகாண சபையின் அனுமதியின்றி எல்லா விடயங்களிலும் மத்திய அரசு தலையிட முடிகின்றது. கட்டுப்படுத்துகின்றது. எனவே இப்பிரதேசத்தின் பெரும்பா ண்மை மக்கள் மாகாணசபையில் விரும்புகின்ற அபிவிருத் தியை விட மத்திய அரசு தான் விரும்புகின்ற அபிவிருத் தியை மாகாணத்தின் மீது திணிக்கின்ற ஒரு நிலைமையை கடந்த ஒரு வருடம் கற்றுணர்த்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக வடக்கில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள பல வீதிகள் காபெற் வீதிகளாக மாற்றப்பட்டன. இவ்வீதிகள் புனரமைக்கப்பட்டமை வரவேற்கக் கூடிய அபிவிருத்தியாகும். ஆனால் எந்த வீதி முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்பது மக்களை அதிகம் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாணசபையே தீர்மானிக்க வேண்டும். வடக்கின் அபிவிருத்தி வடக்கு மக்களுக்காகவே ஆகும். எந்த வீதியால் வடக்கு மக்களுக்கு அதிக நன்மை இருக்கின்றதோ, அவ்வீதிகளே முதலில் புரனரமைக்கப்பட வேண்டும். வீதி அபிவிருத்தியால் வடக்கு மக்களின் பொருளாதார மேம்பாடு நடைபெற வேண்டும். மக்களுடைய வருமானம் கார்பெற் வீதியை அனுபவிக்க போதாமல் குறைந்த நிலையில் இருக்கும் போது பாரிய செலவில் கார்பெற் வீதி இடுவதால் சாதாரண பொது மக்கள் நன்மையடைவது குறைவாக இருக்கின்றது. இது கிழவிக்கு பட்டுச்சாறி உடுத்து அழகு பார்ப்பதற்கு நிகரானது. மேலும் வடமாகாணத்தில் இடப்பட்ட கார்பெற் வீதிகள் மக்களின் ஜீவனோபாயத்துடன் நேரடி பங்களிப்பை நல்குவதை விடுத்து இராணுவ நலன்களுக்கும் தென்பகுதி முயற்சியாளர்களின் நலன்களுக்கும் ஒப்பந்தகாரர்களுக்கும் அதிக நன்மை கொடுத்ததாக அமைந்துள்ளது. இவ்வீதிக்கு மத்திய அரசு செலவழிக்கும் பணத்தில் பெரும் பகுதி மீள தென்பகுதிக்கு செல்கின்றது. அரசின் செலவு பிரதேச மக்களின் வருமானத்தை உயர்த்துவதாக இருப்பது குறைவாக காணப்படுகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன்றது. கல், சீமெந்து, கம்பிகள், தார், கனரக வாகனங்க ளுக்கான வாடகை, கூலி, சம்பளம், ஒப்பந்தகாரர்களுக்கான இலாபம் என வீதிக்கு செலவு செய்கின்ற பணத்தில் பெரும் பகுதி மீள தென்பகுதிக்கு செல்கின்றது. இது பிரதேச மக்களின் மீள் வருமானச் சுற்றோட்டத்துக்கு பங்காற்ற வில்லை எனலாம்.

மேலும் மத்திய அரசின் மாகாணங்களுக்கான செலவுகள் சில மத்திய அரசே செலவழித்து விட்டு மத்திய அரசால் மாகாணசபைக்கான ஒதுக்கீட்டில் இருந்து கழித்துக் கொண்டு மிகுதியை மாகாணசபைக்கு வழங்குகின்றது. மிகுதியாக வழங்குகின்ற நிதியை கூட மாகாண சபை ஆளுநரின் (மத்திய அரசின்) ஒப்புதல் இன்றி பயன்படுத்த முடியாமல் இருக்கின்றது. எனவே ஒட்டு மொத்தத்தில் மத்திய அரசு மாகாண சபைகளுக்கு ஒதுக்குகின்ற நிதி மத்திய அரசால் முழுமையாக கட்டுப்படுத்த முடிகின்றது. இது மக்கள் பிரதி நிதிகளாக இருக்கின்ற மாகாண சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துகி ன்றது. நிதி இல்லையாயின் அபிவிருத்தியும் இல்லையாகும்.

மாகாணசபை தனது அபிவிருத்திக்கு என நிதி நியம சட்டங்களை இயற்றி சுயமாக வருமானத்தை உழைத்து செலவு செய்யலாம் என சட்ட ரீதியாக கூறப்பட்டாலும் இயற்றப்பட்ட சட்டங்கள் ஆளுநரின் அங்கீகாரத்துடன் மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு ஒப்புதல் கொடுக்க வேண்டி இருக்கின்றது. எனவே மாகாணசபை தேடுகின்ற நிதி மூலங்களை கூட மத்திய அரசு கட்டுப்படுத்த முடிகிறது. உதாரணமாக ஏனைய மாகாண சபைகளில் முதலமைச்சர் நிதியம் உள்ளது போன்று வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் நிதியத்தை உருவாக்குவதை மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்துகின்றது அல்லது தாமதப்படுத்துகின்றது. எனவே சபைகளின் சுயமான நிதி தேடல் மூலங்களும் தடைப்படும் போது பொருளாதார அபிவிருத்தி தடைப்படுகின்றது.

## 2. காணி அதிகாரமும் அபிவிருத்தியும்

அபிவிருத்தியில் நிலம் என்பதும் அவை சார்ந்த வளங்களும் முக்கியமானவையாகும். நிலத்தின் உரிமையை யார் கொண்டிருக்கின்றார்களோ அவர்களே நிலத்தின் மீது வாழ்கின்ற மக்களின் அபிவிருத்திக்கு உரிமை கொண்டாட முடியும். வடக்கு மாகாணத்தில் உள்ள மிக முக்கியமான ஓர் அபிவிருத்திப் பிரச்சினையாக நிலப்பிரச்சினை காணப்படுகின்றது. மக்கள் தங்கள் சொந்த நிலத்தில் மீள குடியமர, பயிர் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. வலி வடக்கில் பெருமளவான தனியார் நிலத்தில் இராணுவம் பயிர் செய்து அதை குறைந்த விலையில் உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்கின்றது. இது இடம் பெயர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறுக்கப்பட்ட வளங்களுடன் விவசாயத்தில் ஈடுபடும் மக்களை பாதிக்கின்றது. பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளரை இது பற்றி வினாவிய போது "இது திறந்த போட்டி சந்தை யாரும் எங்கையும் எதையும் விற்பனை செய்யலாம்" என்றனர். இராணுவம் செய்யும் விவசாயத்துக்கு நிலத்துக்கு வாடகை இல்லை. வேலை செய்பவர்களுக்கு கூலி கொடுப்பது இல்லை. எரிபொருள் மின்சார செலவு இல்லை. உள்ளீடுகளையும் வெளியீடு களையும் கொண்டு செல்வதற்கு போக்குவரத்து செலவு இல்லை. நிலத்தை பண்படுத்துவதற்கு உழவு இயந்திர செலவு இல்லை. இவ்வாறு உற்பத்தி செய்து சந்தைக்கு வரும் உற்பத்தியுடன் ஏற்கனவே பல இடங்களில் இடம்பெயர்ந்து தமது உடமைகளை இழந்து உருப்படியான அரச ஆதரவு இல்லாமல் உற்பத்தி செய்கின்ற உற்பத்திகள் எவ்வகையில் போட்டி போட முடியும்?

மக்கள் தமது பிரதேசத்தை சூழவுள்ள கடல் வளத்தில் சுதந்திரமாக மீன்பிடித்தொழில் செய்ய முடியாத நிலை காணப்படுகின்ற போது தென்பகுதி மற்றும் இந்திய சீன மீன்பிடி படகுகள் ஆழ்கடல் மீன்பிடியில் இலகுவாக ஈடுபட்டு கடல்வளத்தை சுரண்டுகின்றன. இதேபோன்று மணல் கணிய வளங்கள், காட்டு மரங்கள் ஆற்று மணல்கள் போன்ற இயற்கை வளப்பாவனைக்கான அனுமதி சான்றிதழ் மத்திய அரசின் கைகளில் உள்ளது. இவற்றை ஒழுங்குபடுத்துகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் மற்றும் நீதி அதிகாரமும் மத்திய அரசிடம் உள்ளது. மத்திய அரசு தனது முகவர்களுக்கு அனுமதி பத்திரங்களை கொடுத்து இவற்றின் ஏகபோக உரிமையை சுதேச மக்கள் பயன்படுத்த தடுத்து பிற பிரதேச மக்களுக்கு கொடுக்கின்றது. இவ்வளங்கள் தொடர்பாக மாகாண அரசுகள் தெளிவான உரிமையை பெறும் வரையில் மாகாண அபிவிருத்தி என்பது கானல் நீராக இருக்கின்றது. இவ் வாறான இயற்கை வளங்களின் பாவனையால் சூழலுக்கு ஏற்படும் தீங்கு மிக அதிகமாகும். இயற்கை வளப் பாவனையால் ஏற்படும் எதிர்மறைவான தாக்கத்தையும் உள்ளூர் மக்களே தாங்கிக் கொள்கின்றார்கள்.

எனவே காணி அதிகாரம் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமானதாக காணப்படுகின்றது. மாகாணத்தில் காணி இல்லாத பலர் இன்னல்களை சுமந்து வறுமையில் வாடுகின் றனர். இவர்களுக்கு காணிகளை பங்கிட்டு கொடுப்பதற்கு மாகாண சபைக்கு அதிகாரம் தெளிவற்றதாக உள்ளது. ஆனால் மத்திய அரசு பிற மாகாணங்களில் இருந்து இங்கு வந்து குடியேறியவர்களுக்கு தேவையான காணிகள் மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து குடியேற்றங் களை உருவாக்குகின்றது.. யுத்தத்துக்கு பின்னரான பொரு ளாதார அபிவிருத்தி கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலான இனமுரண்பாடு மற்றும் யுத்தத்தால் ஏற்பட்ட அனுபவங் களின் அடிப்படையில் புதிய பாதையில் அமையும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் எதிர்பார்த்த போதும் அது பழைய பாதையில் மிகவும் வேகமாக பயணிப்பதை அவதானிக்கலாம். இந்த அபிவிருத்தி போக்கை மாற்றியமைப்பதற்கு மாகாணங்க ளுக்கு காணி அதிகாரம் அவசியமாகின்றது.

இவை எல்லாவற்றையும் ஏற்படுத்தி வட பிராந்தி யத்தின் அபிவிருத்தி விரைவுபடுத்தப்படும் போது மத்திய அரசு தலையிட்டு இலங்கையில் எந்தக் காணியையும் தனியார் நிலங்களையும் கையாளும் உரிமை எனக்குள்ளது எனக்கூறி அவற்றை பறிக்கும் நில உரிமை மத்திய அரசுக்கு இருக்குமானால் எந்த இடத்தையும் மீளப் பெற்றுக்கொள்ளவும், எந்த அபிவிருத்தியைக் குழப்பவும் மத்திய அரசால் நடவடிக்கை எடுக்க முடிகின்றது. இதை எதிர்த்து காவல் துறை மற்றும் நீதித்துறைக்கு சென்றாலும் இத்துறைகளும் அதிகாரங்களும் மத்திய அரசின்கீழ் இருக்கும் போது மாகாண சபைக்கு நியாயம் கிடைக்குமா? என்பது கேள்விக் குறியே ஆகும். எனவே உறுதியான நிலைத்து நிற்கக் கூடிய விரைவான பொருளாதார அபிவிருத்தியை உருவாக்க வேண்டுமானால் நீதி, பொலிஸ், மற்றும் காணி அதிகாரங்கள் மாகாணசபைக்கு அவசியமானதாகும்.

இருப்பினும் இவ்வதி காரங்களை மத்திய அரசிடம் இருந்தவாறே நல்ல புரிந்து ணர்வு அடிப்படையில் நல்லாட்சி ஊடாக பிராந்திய பொருளாதார அபிவிருத்தியை உருவாக் கலாம். புரிந்துணர்வு என்பது பெரும்பான்மை ஆட்சியாளர் களிடம் இருக்கின்றதா? என்பது கேள்விக்குறியே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்ஸ்மன் கதிர்காமர் ஓர் உன்னதமான சர்வதேசம் அறிந்த தமிழ் தெரியாத பெயரை மட்டும் தாங்கிய ஓர் சிறுபான்மை இனத்தவர். இவர் புலிகளை அழிப்பதற்கு மிக முக்கியமான பாத்திரத்தைக் கொண்டிருந்தவர். இவருக்கே தேர்தலின் போது பிரதம மந்திரிக்கான பேச்சு இடம்பெற்றது. இறுதியில் கிடைக்காமல் சென்றது. எனவே வடக்கின் முதலமைச்சர் மருமக்களாக பெரும்பான்மை இனத்தவரை கொண்டிருந்தாலும் முதலமைச்சர் இந்து சமயத்திலும் தமிழ் தேசியத்திலும் அதிக அக்கறை காட்டி மத்திய அரசுடன் எவ்வாறு இந்த பிராந்திய அபிவிருத்திப் பிரச்சினைகளை தீர்க்கப் போகின்றார் என்பது கடந்த ஒரு வருட காலத்தை விட எதிர்வரும் காலத்தைக் கொண்டுதான் அறிய முடியும். மத்திய அரசுடன் இணக்கப்பாடான முறையில் வடமாகாண அபிவிருத்தியை முன்னெடுத்து செல்ல கூடிய குடும்ப பின்னணி முதலமைச் சருக்கு இருந்தாலும் பேரினவாதம் இதை சாதகமாக பயன் படுத்த முன்வரவில்லை என்றே கூறலாம். தமிழ் மக்களைப் பொறுத்த வரை இணக்க அரசியலும் கசப்பாகவே இருக்கும் என்பதற்கு மலையக மக்களின் இன்றைய நிலைய சிறந்த உதாரணமாகும்.

**3. வடமாகாண அபிவிருத்தியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

பல்கலைக்கழகம் என்பது பிரதேச அபிவிருத்திக்கு மிக முக்கியமான ஒன்றாகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அச்சேவையை உரிய முறையில் செய்கின்றதா? என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி முன் வைக்கப்படுகின்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் நியமணத்தில் பிரதேசத்தின் அதிக வாக்குகளை பெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் சிபாரிசு புறக்கணிக்கப்பட்டு அரசின் தோழமை கட்சி ஒன்றின் சிபாரிசில் நியமனம் இடம் பெற்றுள்ளது. இலங்கையில் சகல பல்கலைக்கழகங்களில் உள்ளது போன்று இந் நியமனமும் ஆளும் கட்சியின் அரசியல் சார்ந்ததாக இடம்பெற்றுள்ளது. நிர்வாகம் செய்கின்ற தவறுகளை நிவர்த்தி செய்வதற்கு 27 உறுப்பினர்களை கொண்ட பேரவை இருக்கின்றது. இப்பேரவைக்கு நியமிக்கப்பட்ட 14 வெளிவாரி உறுப்பினர்களில் குறைந்தது ஒர் இருவராவது இப் பிரதேசத்தில் அதிக மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது சமூகத்தில் உயர் நிலையில் இருக்கின்ற கட்சியின் சிபாரிசில் நியமிக் கப்படவில்லை. 14 உறுப்பினர்களும் உப வேந்தர் நியமனம் போன்று அரசின் பங்கு கொள்ளும் ஓர் அரசியல் கட்சி சார்ந்ததாக மட்டும் நியமிக்கப்பட்டுள்ளனர். மத்திய அரசாங்கத்தில் பெரும்பான்மைச் சிறுபான்மை மக்களின் குரல் இல்லாதது மட்டம் அல்ல, பிரதேசத்தின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்ற பல்கலைக் கழகத்திலும் இது இல்லாது உள்ளது.

ஆளுநர் சிவில் சேவை அதிகாரியாக இருக்க வேண்டும் என்ற அதிகளவான தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு மத்திய அரசால் நிராகரித்தமை போன்று யாழ்பல்கலைக் கழக பேரவைக்கு தகுதியான மக்களிடம் செல்வாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர்களை நியமிக்கும்படி பல்கலைக்கழக சமூகம் ஒன்றாக சேர்ந்து விடுத்த கோரிக்கையையும் நிராகரித்தது மட்டும் அல்ல, தமிழ் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையும் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளது. நியமிக்கப் பட்ட இவ் உறுப்பினர்கள் பேரவை கூட்டத்துக்கு முன்னர் அரச கட்சி ஒன்றின் அலுவலகத்தில் சந்தித்து பேரவையில் எடுக்கப்படும் தீர்மானங்களில் ஒருமித்த முடிவை எடுத்த பின்பே பேரவை கூட்டங்களில் பங்கு கொள்கின்றனர். இவ் 14 வெளியக உறுப்பினர்களும் சூரியன் மேற்கே உதித்து கிழக்கே மறைகின்றது எனக் கூறினால் (அதாவது பிழையான முடிவு எடுத்தால்) பல்கலைக் கழகத்தின் உள்ளக உறுப்பினர்கள் அதை தவறு எனக் கூற முடியாது. காரணம் உபவேந்தர் பதவி உட்பட மற்றும் ஏனைய உள்ளக உறுப் பினர்களின் உயர் பதவிகள், பதவி உயர்வுகள் அனைத்தும் இந்த 14 உறுப்பினர்களும் ஒன்றாக இருப்பதால் பேரவையில் இவர்களின் வாக்குகளால் தீர்மானிக்கப்படுகின்றது. உள்ளக உறுப்பினர்கள் வெளியக உறுப்பினர்களில் பெரிதும் தங்கி யுள்ளனர் என்பது ஒரு புறமிருக்க, 13 உள்ளக உறுப்பி னர்கள் எல்லோரும் ஒன்றாக இருந்தால் கூட, இவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஒரே அணியில் பெரும்பான்மை வெளியக உறுப்பினர்கள் தான் எனவே பல்கலைக்கழகத்தின் புத்தி ஜீவிகளும் வெளிவாரி உறுப்பினர்களைச் சார்ந்து சூரியன் கிழக்கில் மறைவதாக ஏற்றுக் கொள்வார்கள். இது தான் அறிவுச்சாலையான பல்கலைக்கழகத்தின் தீர்மானமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். இவற்றை எல்லாம் ஒருவர் கடந்து நீதி மன்றம் சென்றாலும் நீதி கிடைக்குமா? என்பது கேள்விக் குறியாகும். பேரவை உறுப்பினர்களை நியமித்தவர்களே நீதிபதிகளையும் நியமிக்கிறார்கள். எனவே ஓர் உயர்கல்வி நிறுவனம் எப்படி சுயாதீனமாக நடுநிலைமையாக இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்காக தொழிற்பட முடியும்? பல்கலைக்கழகத்திலேயே ஜனநாயகத்தின் நிலைமை இதுவாயின் ஏனைய நிறுவனங்களின் நிலை இதை விட மிக மோசமாக உள்ளது.

யாழ் பல்கலைக்கழகத்தில் 2012 இல் நடைபெற்ற சர்வதேச ஆய்வு மகாநாட்டுக்கு "யுத்தத்துக்கு பின்னரான பொருளாதார அபிவிருத்தி" என தலைப்பு இடப்பட்டதை அமைச்சர் மறுத்து "முரண்பாடு மற்றும் யுத்தத்துக்கு பின்னரான அபிவிருத்தி" என மாற்றும்படி கூறினார். இறுதியாக அவ்வாறு மாற்றப்பட்டது. இலங்கையில் தமிழ் சிங்களம் என்ற இன முரண்பாடு எல்லாளன் காலத்தில் இருந்து இன்று வரை தொடர்கின்றது. 2009 இல் யுத்தந்தான் முடிவடைந்தது. இன முரண்பாடு அல்ல. 2014 இல் அளுத்கமவில் இடம்பெற்ற சம்பவமும் இன முரண்பாடே ஆகும். ஆனால் அரசாங்கம் பல ஆவணங்களில் குறிப்பாக சர்வதேச ஆவணங்களில் முரண்பாடும் யுத்தமும் முடிவடைந்ததாக கூறியுள்ளது. இந்த வார்த்தை பிரயோகத்தில் வடமாகாண அபிவிருத்தி தொடர்பில் இங்குள்ள கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் வடக்கில் முரண்பாடு முடிவடைந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற விடயத்தை சிறுபாண்மை புத்திஜீவிகளால் பல்கலைக் கழகத்தில் அதுவும் சர்வதேச மகாநாட்டில் வைத்து எடுத்துக் கூற நிர்ப்பந்திகப்பட்டமையாகும்.

யாழ் பல்கலைக்கழகத்தில் துரிதப்படுத்தப்பட்ட பிராந்திய அபிவிருத்தி என்ற தலைப்பில் 2014 இல் சர்வதேச எலற்றோனிக் மகாநாடு ஆங்கில மொழியில் சென்றது. இம்மகாநாடு தாய்மொழியில் அமைவது ஆரோக் கியமானதாகும். தாய்மொழியில் உள்ள போது இந்த கருத்துக்களை படித்தவர்கள் மட்டும் அல்ல சாதாரண மக்களும் வாசித்து விளக்க கூடியதாக இருக்கும். மேலும் பிராந்திய அபிவிருத்தியைப் பற்றி கதைத்துக் கொண்டு பிராந்தியத்தின் மக்களின் தாய்மொழிக்கு அப்பால் ஆங்கில மொழியில் கலந்துரையாடுவது எங்களை நாங்களே அழிப்ப தற்கு ஒத்ததாகும். மகாநாடுகளில் பங்குகொள்கின்றவர்கள் 90 சதவீதம் தமிழர்கள் ஆவர். இந்த கருத்துக்கள் அடங்கிய ஆவணங்களை பிற்காலத்தில் வாசிப்பவர்கள் 90 வீதமான வர்கள் தமிழர்கள் ஆவார்கள். எனவே தமிழ் மொழியில் இம்மகாநாடுகள் அமைவதுதான் எமது மக்களுக்கு நாங்கள் செய்யும் பிரதானமாக முதற்படி அபிவிருத்தி சேவையாகும்.

இதே நேரத்தில் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். வடக்கு கிழக்கு பிராந்திய அபிவிருத்திக்கு கல்விச் சீர்திருத்தமானது உயர்கல்வியில் ஆங்கிலக்கல்வியை பயன்படுத்த வேண்டும். என்ற தொனியில் பலர் கருத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடுகின்றனர். இக்கருத்து மிகவும் ஆழமாக நோக்கப்பட வேண்டியது. உலகிலே விஞ்ஞான தொழில் நுட்பங்களில் புதிய புதிய கண்டுபிடிப்புக்களை செய்து முதனிலையில் உள்ள நாடுகள் மற்றும் செய்கின்ற நாடுகளில் உயர் கல்வியின் மொழி மூலம் ஆங்கிலம் அன்றி தாய் மொழியாக காணப்படுகின்றது. உதாரணம் ஜப்பான், ஜேர்மனி, தைவான், தென்கொரியா, சீனா போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். இம் மகாநாட்டில் இது வரைகாலம் இல்லாதது போன்று வரவேற்பு நடனத்தில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டிருந்தது. நடனமாடிய 9 மாணவர்களில் இருவர் மட்டுந்தான் தமிழர்கள் 7 மாண வர்கள் பெரும்பாண்மை இனத்தவர்கள்

உயர்கல்வியில் மொழி தொடர்பான கருத்தில் இன் னொரு விடயமும் உள்ளது. இலங்கையில் வடக்கு கிழக்கில் மக்களின் அடையாளத்தை வெளிப்படுத்துவது பிரதானமானது மொழியாகும். ஆனால் இது திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. இலங்கையில் எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் ஆங்கிலமொழிக் கல்வியில் பாடங்கள் போதிக்கப்பட்டால் அது ஓர் தேசியக்கல்வி கொள்கை என்ற வகையில் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் வடக்கு கிழக்கு பல்கலைக்கழகங்களில் மட்டும் ஆங்கில மொழியும் ஏனைய பல்கலைக்கழகங்களில் ஆங்கிலமும் சிங்களமும், என அமுல்படுத்துவதில் கடந்த காலங்கள் போன்று தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகள் அரசியல் நோக்கம் கொண்டதாக அமைகின்றது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் 1997 – 2002 காலப்பகுதியில் இருநூறுக்கு மேற்பட்ட தமிழ் மாணவர்கள் சமூகவிஞ்ஞானப் பாடங்களை தமிழ் மொழியில் கற்கிறார்கள். 3, 4 விரிவுரையாளர்கள் தமிழ் மொழியில் கற்பிப்பதற்காக விரிவுரையாளர்களாக அமர்த்தப்பட்டார்கள். யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழ் மொழி மூலமான பாடங்கள் நிறுத்தப்பட்டு தமிழ் மாணவர்கள் ஆங்கில மொழிக்கு மாற்றப்பட்டார்கள். ஆனால் சிங்கள மாணவர்களுக்கு சமூக விஞ்ஞானப் பாடங்கள் சிங்கள மொழி மூலத்தில் தொடர்ந்து இருக்கின்றன. இது அபிவிருத்தியா? அல்லது மொழியை அழித்தலா? இது போன்ற ஓர் நிலை அபிவிருத்தி என்ற போர்வையில் வடக்கு கிழக்கில் உருவாக புத்திஜீவிகள் என கூறிக் கொள்பவர்கள் அனுமதிக்க கூடாது.

அண்மையில் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவில் ஓர் கூட்டத்தில் எதிர் காலத்தில் வடக்கு கிழக்கு பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்கள் தெரிவின் போது மாணவர்களின் இன விகிதாசாரத்துக்கு ஏற்ப விரிவுரையாளர்களின் நியமனம் வழங்கப்படவேண்டும் என்ற கருத்து கூறப்பட்டதாக அறிய வருகின்றது. நியமனங்களில் இன விகிதாசாரம் மிகவும் வரவேற்கக் கூடியது. ஆனால் இந்த நியமனமுறை வடக்கு கிழக்குக்கு மட்டுமா? அல்லது இலங்கை பூராகவா? என அங்கு இருந்த வடக்கு கிழக்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பல்கலைக் கழகங்களை சேர்ந்த துணைவேந்தர்கள் எவரும் வாய் திறக்கவில்லை. அவர்கள் கூறிய இன விகிதாசாரம் வடக்கு கிழக்குக்கு மட்டுந்தான். எனவே இதற்கு பின்னால் வடக்கு கிழக்கு அபிவிருத்தியில் உள்ள மிகப்பெரிய ஓர் அச்சுறுத்தலை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வடக்கு–கிழக்குக்கு என எஞ்சியிருக்கின்ற மிக சிறிய சில அடிப்படை உரிமைகளையும் அபிவிருத்தி என்ற பெயரில் அழிப்பதற்கு நாம் துணை போகலாமா? என்பது வினாவாகும். பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் பெற்றோர்கள் ஆங்கிலக்கல்வியால் வாழ்க்கை யில் சாதிக்கலாம் என்ற மாயையில் இருந்து நீங்கவேண்டும். அதேநேரம் மாணவர்கள் ஆங்கிலத்தில் சிறப்பான அறிவைக் கொண்டிருக்க வேண்டும். உயர் கல்வியின் மொழிமூலம் தாய் மொழியாகவே இருக்க வேண்டும். இது நாட்டுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் சிறந்ததாகும்.

## 4. வட பகுதியின் உள்கட்டுமானமும் அபிவிருத்தியும்.

இலங்கையின் வடிகால் நீர் வழங்கல் சபை வடமா காணத்தில் பல திட்டங்களை முன்னெடுத்து செல்கின்றது. இத்திட்டங்களுக்கான செலவு நன்மை ஆய்வுகள் எதுவும் நடுநிலைமையாக மேற்கொள்ளப்படாமல் அம்பாந்தோட்டையில் விமான நிலையில் அமைந்தது போன்றது. வெளிநாட்டு உதவிகள் பல கரியாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக உலக வங்கியானது துரித மீள்எழுச்சி திட்டத்துக்கு 75 மில்லியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொலர்களை வழங்கியிருந்தது. இந்த நிதி மூலம் செய்யப்பட்ட பல குடிநீர்ப்பாசன திட்டங்கள் மக்களின் தகுதியை மீறியவையாக அவர்களுடன் வருமானத்துடன் ஒத்து போகாதைவையாக இருந்துள்ளன. உதாரணமாக நெடுங்கேணியில் 192 பில்லியன் ரூபாவில் பழைய நீர்தாங்கி ஒன்று பயன்படுத்தக்கூடிய நிலையில் இருக்க, புதிய நீர்த்தாங்கி ஆடம்பர ஊழியர் விடுதி மற்றும் அலுவலகங் களுடன் அமைக்கப்பட்டிருந்தது. இத்திட்டம் தொழிற்பட ஆரம்பித்து 9 மாதம் நீக்கிய போதும் ஆக 39 பேர் மட்டுந் தான் குடிநீர் இணைப்பை பெற்று இருந்தனர். திட்டத்தின் தொழில் நுட்ப தரம் பற்றிய ஆய்வுக்கு அப்பால், பொருளாதார சமூக ரீதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இந்த நீர் விநியோகத்திட்டம் பொருத்தமான அபிவிருத்தியாக கருத முடியாது உள்ளது. எல்லா உடமைகளையும் இழந்து தகரக்குடிசையில் நிரந்தர வருமானம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு வீட்டு முற்றத்துக்கு குழாய் குடிநீர் சாதாரண மக்களுக்கு கொடுக் கின்ற விலையில் தேவையா? இதன் மூலம் இம்மக்கள் தேறிய நன்மை அடைவார்களா? என்பது வினாவாகும். பாதுகாப்பான குடிநீர் ஓர் அடிப்படைத் தேவை ஆகும். ஆனால் ஏற்க்கனவே நீர் பிரச்சினையை சாமாளித் துக் கொண்டு வாழ்ந்த மீளக் குடியமர்ந்த மக்களின் வருமான மட்டத்துக்கு இத்திட்டம் பொருத்தமானதா? என்பது பலரால் முன் வைக்கப்படும் வினாவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இலங்கையின் பொது தேசிய நிறுவனங்களான மின்சாரசபை, நீர்வழங்கல் சபை, புகையிரத திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, போன்றன யுத்தத்தால் அழிவடைந்த வடக்கு பொருளா தாரத்தை புனரமைக்கின்றன என்ற அபிவிருத்தி சுலோகத்தை தாங்கிக் கொண்டு வடக்கு மக்களின் எஞ்சிய சொத்துக்களையும் தென் பகுதிக்கு உறிஞ்சுவதாக உள்ளன. இந்நிறுவனங்களின் மூலதன இருப்பு யுத்த பிராந்தியத்தை புனரமைப்பதற்கு கிடைத்த நிதி மூலம் பலப்படுத்தப்பட்டிருக்கின்றது. மின் சாரசபை, நீர்வழங்கல் சபை, புகையிரத திணைக்களம், போன்றவற்றின் மூலதன இருப்பு இந்த அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக அதிகரித்துள்ளது. மேலும் இந் நிறுவனங்கள் கடந்த காலத் தில் நட்டத்தில் இயங்கின. வடபகுதிக்கான சேவையை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்துக்கு கிடைத்த வெளிநாட்டு உதவி மூலம் மீள ஆரம்பித்ததன் காரணமாக இவைகள் மாதாந்தம் வடபகுதி மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்கின்ற வருமானம் அதிகரித்துள்ளது. இவ்வருமான அதிகரிப்பு காரணமாக இந்நிறுவனங்கள் எதிர் காலத்தில் இலாபத்தில் இயக்கும் என்பது மறுக்க முடியாது. ஆனால் இப்பிரதேச மக்களின் நிரந்தர வருமானத்தை இச்சேவைகள் எவ்வாறு உயர்த்தும் என்பது மிக முக்கியமான விடயம் ஆகும். நிட்சயமாக இவை அவசியமானவையாகும். ஆனால் இவை பிரதேச மக்களின் வாழ்வாதாரத்துடன் இணைந்ததாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் நிரந்தர வருமானத்தை உயர்த்துவதாக இருக்க வேண்டும்.

இச் சேவைகள் மக்களின் வருமான அதிகரிப்புக்கு பின்னர் தான் கிடைக்கப்பட வேண்டும். மாறாக வடபகுதி மக்களின் நிரந்தர வருமானம் அதிகரிப்புக்கான உள்ளூர் மூலங்கள் சரியாக பலப்படுத்தப்படுவதற்கு முன்னர் இச் சேவைகளை வழங்கியமை இப்பிரதேச மக்கள் வெளிநாட்டு பண அனுப்புதல்கள் மூலம் பெற்றுக்கொள்கின்ற வெளிநாட்டு வருவாயை உறிஞ்சி எடுப்பதாகும். பல இடை நிலை மட்ட குடும்பங்களின் மின்சாரப்பட்டியல், நீர்ப் பட்டியல் அவைகளின் பொருளாதார தகுதிக்கு மீறியனவையாக உள்ளன. மிகச் சிறிய கிராமங்களுக்கும் மின்சார இணைப்பு மூலம் மக்கள் உற்பத்தி முயற்சிகளில் பங்கு கொள்வதை குறைத்து சந்தோஷமாக பொழுதை கழித்து நுகர்வு கலாச் சாரத்தை ஏற்படுத்தியுள்ளன.

மிகச்சிறிய கிராமங்கள் மின்சார வசதிகளை பெற்றுக் கொண்டமையானது இப்பிரதேசத்தை தொடர்ந்து உற்பத்தி கலாசாரத்துக்கு செல்வதை தடுத்து உற்பத்திதிறன் அற்ற நுகர்வு கலாசாரத்துக்கு இட்டு செல்வதாக அமைகின்றது. இதேபோன்று புகையிரத சேவை குறைந்த செலவிலான பயணம் என்ற அடிப்படையில் மக்களுக்கு நன்மை தருவ தாகும். ஆனால் ஓர் பொருளாதார அபிவிருத்தி கண்ணோட் டத்தில் இச்சேவை வழங்கலின் தேறிய நன்மை வடக்குக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கணியமாகவே இருக்கும். புகையிரத சேவையால் பல போக்குவரத்து சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ் உரிமையாளர்களின் வருமானம் இழக்கப்படும். இழக்கப்படும் வருமானம் அரசின் புகையிரத திணைக்களத்தின் வருமானத்தை அதிகரிக்கும். இவ்வுயர்வுக்கு மாற்றீடாக மிகப் பெரிய மானியத்திட்டம் ஒன்று உள்ளூர் போக்குவரத்து சேவை உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். ஆனால் அதற்கான சாத்தியம் அறவே இல்லை என்றே கூறலாம். பிரித்தானியர் எந்த நோக்கங்களுக்காக இலங்கையில் உள்கட்டுமானங்களை அமைத்து சுதேச மக்களின் பொருளாதார நடவடிக்கைகளை மழுங்கடித்தார்களோ அதே நிலைமை வடக்கு அபிவிருத்தியில் அவதானிக்க முடிகின்றது.

மாகாண சபைகளும் மிகவும் பலமான அரச நிறுவனங்களை உருவாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. உதாரணமாக மின்சாரம், நீர்வழங்கல், மத்திய அரசின் நிறுவனங்கள் ஆகும். பல மில்லியன் அபிவிருத்தி திட்டங்கள் இப்பிராந்தியத்தில் செய்யப்பட்டன. செய்யப்படவுள்ளன. ஆனால் இவ் அபிவிருத்தியில் வருமானம் மற்றும் செலவின் மீள் சுற்றோட்டம் இப்பிராந்தியத்தில் நடைபெறவில்லை. மின்சார வேலைக்கான அனைத்து ஒப்பந்தங்களும் தென்பகுதி ஒப்பந்தகாரர்களுக்கு கொடுக்கப்பட்டன. அவர்கள் பயன்படுத்திய பெரும்பாலான வளங்கள் தென்பகுதியில் இருந்து கொண்டு வரப்பட்டன. எனவே திட்டத்தில் செலவழிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பகுதி வருமானமாக கூலி, வாடகை இலாபம் என்ற வடிவில் தென்பகுதிக்கு மீள செல்கின்றது. பிராந்திய மக்கள் இவற்றால் என்ன நன்மை அடைந்தார்கள் என்பது ஆழமாக ஆராயப்பட வேண்டி இருக்கிறது.

வன்னியில் உள்ள ஓர் விவசாயியும், யாழ்ப்பாணத்தில் உள்ள சாதாரண விவசாயியும் கார்பெற்வீதி மூலம் என்ன நன்மையை அடைந்தார்கள் என்பது கேள்விக் குறியாகும்?

திட்டங்கள் வகுக்கப்படுவதும் ஒப்பந்தங்கள் கைய ளிக்கப்படுவதும் கொழும்பில் உயர் மட்டத்தில் நடை பெறு கின்றது. எல்லாம் மேல் மட்டத்தில் முடித்துக் கொண்டு அவற்றை அமுல்படுத்துவதற்கு மாவட்ட செயலகத்துக்கு கட்டளை இடப்படுகின்றது. செயலக அதிகாரிகளுக்கு இத் திட்டத்தின் மீது வினாத் தொடுக்க அதிகாரம் இல்லை. அவ்வாறு அதிகாரம் இருந்த திட்டங்களுக்கு உள்ளூர் அதிகாரிகளின் சிபாரிசுகள் மத்திய அரசால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. திட்டங்களில் உள்ளூர் மதி யுரைஞர்களின் அறிவுரைகளும் ஆலோசனைகளும் அறவே பெறப்படவில்லை. எல்லா ஆலோசகர்களும் பெரும்பான்மை இனத்தவர்களாக அல்லது கொழும்பை தளமாகக் கொண்டு அரசுக்கு ஆதரவான சிறுபான்மை மதியுரைஞர்களாக இருந் துள்ளனர். எனவே அவர்களின் அறிவுரைகள் இப்பிராந்திய மக்களின் அபிவிருத்தியை விட இப்பிராந்தியத்தின் அபி விருத்தி என்ற பெயரில் அரச நிறுவனங்களின் மூலதன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கத்தையும் அதன் வழியான அரச நிறுவனங்களின் வருமானத்தையும் உயர்த்துவதாக இருந்தன. இதன்கருத்து பிராந்திய மக்களின் அபிவிருத்திக்கு இவை அறவே பங்களிப்பு செய்யவில்லை என்பது அல்ல. மாறாக ஒப்பீட்டு ரீதியில் முன்னுரிமை அடிப்படையில், வாழ்வாதார மேம்பாடு என்ற நோக்கில் இவை பிராந்திய அபிவிருத்திக்கு சிறிய ளவிலான பங்களிப்பையே செய்துள்ளன. பல உதாரணங் களை எடுத்துக்காட்ட முடியும். வடக்கின் துரித மீள் எழுச் சித்திட்டத்தில் வெளிநாட்டு உதவியை பெற்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஊடாக செய்யப்பட்ட திட்டங்களில் பலவற்றில் பாதிக்கப்பட்ட மீள் குடியமர்த்த மக்களுக்கு கிடைத்த நன்மையை விட மற்றவர்களுக்கு கிடைத்த நன்மையே அதிகமாகும். உலக வங்கியின் பார்வையில் பாதுகாப்பான நீர் என்ற எண்ணக்கரு பெற்றுக் கொள்ளப்பட்டு ஏற்கனவே பொதுக் கிணறுகளும், தனிக் கிணறுகளும், இருக்கும் போது இவற்றை துப்பரவு செய்து அல்லது புதிதாக அமைத்து நீர் வழங்கலை செய்யாது நீர்வழங்கல் சபைக்கு நிதியை ஒதுக்கீடு செய்து எதுவித மானியமுமின்றி குழாய் நீர் விநியோகம் நடைபெற்றது. கேள்வி என்னவெனில் வீட்டு முற்றத்தில் குழாய் நீரை பாவிக்க கூடிய சமூக, பொருளாதார நிலையினை இம்மீளக் குடியமர்ந்த மக்கள் பெற்றார்களா? மிக நீண்டகாலமாக இக்குடிநீர் பிரச்சினையில் இம்மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்களா, அவசரமான தேவை வீட்டு முற்றத்துக்கு குழாய் நீர் விநியோகமா? என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாக்கள் எழுகின்றன. இத்திட்டத்தில் வடமாகாணத்தில் ஏறத்தாழ 1000 மில்லியன் ரூபாய்கள் குழாய் நீர் விநியோகத்துக்கு செலவழிக்கப்பட்டது. குழாய்நீர் விநியோகம் தேவையற்றது என்பது இங்கு கருத்து அல்ல. அவர்கள் இருந்த வருமான நிலையில் பாதுகாப்பான நீர் வழங்கல் என்பது வீட்டு முற்றத்துக்கு குழாய் நீர் வழங்கல் மூலம் மட்டுந்தானா? தீர்க்கப்படமுடியும் என்பது வினாவாகும். இதற்கு பதில் கூறிய இத்திட்டத்தின் உயர் அதிகாரிகள் "எல்லாம் மேலிடத்தில் இருந்து கட்டளை, இத்திட்டத்தில் நீர் வழங்கல் சபைக்கான இந்த குழாய் நீர் திட்டத்தின் நிதியை எடுத்துக்கொண்டு மிகுதிதான் எங்களுக்கு தரப்பட்டது. யார் திட்டத்தை தீட்டியது? யாருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது? எதுவுமே தங்களுக்கு தெரியாது" எனக் கூறினார்கள்.

பல திட்டங்களில் மத்திய அரசின் இராணுவ நலன்கள் முதன்மைப்படுத்தப்பட்டிருந்தன. உதாரணமாக வடக்கில் அமைக்கப்பட்ட பெருமளவு செலவிலான கார்பெற் வீதி அமைப்பானது மக்களின் செறிவையும் அதன் வழியான மக்களின் பயன்பாட்டையும் முன்னிலைப்படுத்தாது இராணுவ நலன்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன. வல்லை–பொன்னாலை வீதி, யாழ்ப்பாணம் புங்குடுதீவு வீதி போன்றன இவ் வகையில் சார்ந்தமை ஆகும். இவ்வீதிகளை விட மக்களுக்கு அதிக பயன்பாட்டினைக் கொண்டுள்ள பல வீதிகள் யாழ்ப்பாணத்தில் புனரமைக்காது சாதாரண நிலையில் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரணைமடு குடிநீர்விநியோகத் திட்டம்

இரணைமடு நீர் விநியோகம் தொடர்பாக பல வாதப்பிரதிவாதங்களை பல ஆய்வரங்கங்கள் எடுத்து வந்துள்ளது. அரசியல், பொருளாதார கண்ணோட்டத்தில் இவ் விடயம் தொடர்பாக பின்வரும் கருத்துக்களை குறிப்பிடலாம்.

1. இரணைமடுகுளம் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் வரட்சியான பகுதிகளில் குறிப்பாக தீவுப்பகுதிகளில் இருந்து வன்னியில் குடியேறிய மக்களின் வாழ்வாதரத்துக்கான அடிப்படை வளமாக உருவாக்கப்பட்டது. எனவே பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்துக்கு உருவாக்கப்பட்ட இக் குளத்தில் இருந்து நீரைப்பெறுவது அவர்களுடைய ஜீவனோபாயத்தை சிதைக்கும் செயலாகும். குளத்தின் கனஅடி உயர்த்தப்படும் போன்ற விளக்கங்கள் அர்த்த மற்றவை ஆகும். இரணைமடு குளத்தில் இருந்து சிறுபோகத்துக்கு உகந்த நிலம் சிறுபகுதிக்கே நீர் கொடுக்கப்படும் நிலையில் அவர்களுடைய ஜீவனோ பாயத்தின் அடிப்படையை இத் திட்டம் தகர்க்க கூடாது.

2. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இத்திட்டம் இலங்கையின் நீர் வழங்கல் சபைக்கு கீழ் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இதுவும் மத்திய அரசு தனது நிறுவனங்களின் மூலதன இருப்பை அதிகரிக்கவும் அதன் வழி வருமானத்தை அதிகரிக்கவும் (இத்திட்டம் வன்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் ஜீவனோபாயத்தை சிதைத்து) வழி வகுக்கின்றது. இத்திட்டத்தின் மூலம் யாழ்.மாவட்டத்தில் 100,000 குடும்பங்கள் நீர் வழங்கல் இணைப்பை பெற்றால், நீர்வழங்கல் சபையின் வருமானம் மாதம் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாவை பெற்றுத்தரும். பாதுகாப்பான குடிநீர் அவசியந்தான் அதற்கு இரணைமடு நீரை பயன்படுத்தாது மாற்றுத்திட்டத்தை தயாரித்து வழங்கலாம். இலங்கையின் புகையிரத திணைக்களம், மின்சாரசபை நீர்வழங்கல் சபை, பெரும் தெருக்கள் அபிவிருத்தி அதிகாரசபை போன்றன இப்பிராந்தியத்தில் பெற்றுக்கொள்கின்ற வருமானத்தில் செலவு நீங்கலாக மிகுதியை இப்பிராந்தியத்தின் அபிவிருத்திக்கு மாகாண சபைகளுக்கு கையளிக்க கூடிய ஓர் பொறிமுறையை மத்திய அரசும் பிராந்திய அரசும் இணைந்து உருவாக்குமானால் இவற்றான பிராந்திய அபிவிருத்திப் பிரச்சினைகள் இலகுவாக நீக்கப்படும் மேலும் மத்திய அரசின் செலவுகள் மாகாண சபையின் அங்கீகாரத்துடன் பிராந்திய மக்களின் வருமானத்தை உருவாக்க கூடிய ஓர் பொறிமுறை சார்ந்ததாக கட்டியெழுப்பப்பட வேண்டும். ஆனால் மாகாணசபை மிகச் சிறய அலுவல்களையே செய்ய முடியாது இருக் கின்ற நிலையில் இவ்வாறான வருமான மீள்பங்கீட்டு பொறிமுறையை 13வது திருத்த சட்டத்தில் உருவாக்க முடியாது. இது மேலும் அதிகாரங்களை வேண்டி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மத்திய அரசின் செலவுகள் மாகாண சபைகளில் இவ்வாறான மாவட்டங்களை இணைக்கின்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது ஏற்கனவே மாகாண சபைக்கு உள்ள சிறிய அதிகாரங்களும் வலுவிழக்கலாம். இந்த நிறுவனங்களில் அலுவலர்கள் ஊழியர்களின் நியமனங்கள் அவர்களுக்கான சலுகைகள் மற்றும் வீட்மைப்புத் திட்டங்கள் என உள்ளக குடியேற்றவாதம் அபிவிருத்தி என்ற பெயரில் கடந்த காலம் போன்று விரைவுபடுத்தப்படலாம்.

4. மத்திய அரசு, பிரதேசசபை, நீர்வழங்கலை போன்று, மாகாணசபையும் ஓர் நீர்வழங்கள் சபையை உருவாக்கி புதிய நீர் வழங்கல் திட்டங்களை தனது நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளும் போது வருமானம் பிராந்தியத்துக்குரிய அரசுகளுக்கு செல்வதுடன் செலவுகளும் மக்களின் வருமான உருவாக்கத்திற்கு வழி வகுக்கும்.

**5. வட மாகாண அபிவிருத்தியும் உயர் அதிகாரிகளும்**

பிராந்திய அபிவிருத்தியில் அரச உயர் அதிகாரிகளின் பங்கு மிக முக்கியமானதாகும். பதவிக்கும், வருமானத்தை உழைப்பதற்கும், சலுகைகளைப் பெறுவதற்கும் பிராந்திய மக்களுடைய வாழ்வாதாரங்களை மற்றும் சுயாதீனங்களை இவ் அதிகாரிகள் ஆட்சியாளர்களிடம் அடைவு வைக்க கூடாது. வடகிழக்கில் அபிவிருத்தியில் மத்திய அரசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண அரசும் அபிவிருத்திப் பணியில் ஈடுபடுகின்றன. இவைகளில் பல மில்லியன் வேலைத்திட்டங்கள் மாகாண சபைக்கு என ஒதுக்கிய நிதியில் மத்திய அரசு செலவு செய்கின்றது. உதாரணமாக வடக்கின் வீதி அபிவிருத்திக்கு என மாகாண சபைக்கு ஒதுக்கிய நிதி மாகாணத்தில் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வீதி அபி விருத்தி அதிகார சபைக்கு நேரடியாக கொடுக்கப்பட் டுள்ளது. மாகாண சபைக்கு என்ற கணக்கு பதிவில் மத்திய அரசு இந்நிதியினை தமது அரச நிறுவனங்கள் ஊடாக கையாள்கின்றது. இவ்வாறு மத்திய அரசின் நிதி நேரடியாக மாகாணசபையின் அனுமதி இல்லாமலே கையாள முடியு மாயின் மாகாணசபை ஏன் என்ற கேள்வி எழுகின்றது? அத்துடன் நிதியின் தொகையை மாகாண சபைக் கணக்கில் பெரிதாக காட்டுவதற்காகவா? இந்த செயற்பாடு என்ற வினா எழுகின்றது. இது போன்ற பூஞ்சாண்டி அபிவிருத்தியை மாகாணசபையின் பெயரில் மேற்கொள்வதை நிறுத்தி நேரடியாகவே மத்திய அரசே அபிவிருத்தியை மேற்கொள் ளலாம்.

எனவே வடக்கின் அபிவிருத்தி, வடபகுதியின் மக்கள் பிரதிநிதிகளுடனோ, உயர் அதிகாரிகளிடமோ ஆலோசனை கள் பெறப்படாது முன்னெடுக்கப்பட்டது என்பதும் அவை உண்மையான பயனாளிகளின் வருமான உருவாக்கத்தை உருவாக்கவில்லை என்பதும் தெளிவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. அதிகாரிகளும் அதிகாரங்களைப் பயன்படுத்துதலும்

பிராந்திய அபிவிருத்திக்கு பிராந்திய அரசுகளுக்கு அதாவது மாகாண சபைகளுக்கு அதிகாரம் போதாது என்ற வாதத்துக்கு அப்பால், இருக்கின்ற அதிகாரங்களை நாம் சீராக பயன்படுத்தி இந்த வட பிராந்திய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்கின்றோமா?, என்பது இன்று எம்முன் உள்ள வினாவாகும். மாகாண சபைகள், பிரதேசசபைகள் தங்களுக்கு என சட்டதிட்டங்களை உருவாக்கி பிரதேச அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யலாம். உதாரணமாக சுன்னாகத்தில் அமைக்கப்பட்ட மின்சக்தி நிலையத்தில் எண்ணெய்க் கழிவுகள் நிலக்கீழ் நீருடன் கலந்து சுற்றுப்புறச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தியுள்ளது என்பது இன்று கண்டறியப் பட்டுள்ளது. சிறிய தேநீர்கடையில் கண்ணாடி பெட்டிகள் முழுமையாக மூடப்படாது உணவுகள் பாதுகாப்பின்றி வைக்கப்பட்டுள்ளதாக தண்டம் விதித்த பொது சுகாதாரப் பரிசோதகர்கள் இந்த மின் நிலையத்தில் பல ஆயிரம் மக்களை பாதித்த இந்த சூழல் சீர்கேட்டுக்கு ஏன் தண்டம் விதிக்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது. இந்த மாசடை தலால் பல வைத்தியர்களும் பாதிப்படைந்துள்ளனர். எந்த வர்த்தகத்திலும் சுற்றுப்புறச் சூழல் அனுமதிப்பத்திரம் தொடர்பாக பிரதேச சபைகளின் அனுமதி இன்றி மத்திய அரசின் அனுமதிப் பத்திரம் பெற முடியாதுள்ளது. அவ்வா றெனில் பிரதேசசபையில் இந்த அனுமதி எவ்வாறு கொடுக்கப்பட்டது. என்பதும் மிக முக்கியமான வினாவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச சபைகளின் செயலாளர்கள் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் யாவரும் இப்பிரதேசத்தின் அபிவிருத்தி மீது அக்கறை கொண்ட தமிழ் அலுவலர்கள். எனவே இவர்கள் தங்களுடைய அதிகாரங்களை சரியாக பயன்படுத்த தவறியதுதான் இப்பிரச்சினைக்கு காரணமாகும். இதேபோன்று தான் கீரிமலை பிரதேசத்தில் தென்பகுதி நிறுவனத்தின் சுற்றுப்புறச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்ற சுண்ணக்கல் அகழ்வாகும். வலி வடக்கு பிரதேச சபை தனது அதிகாரத்தை பயன்படுத்த தவறியுள்ளது.

இதேபோன்று யாழ்பல்கலைக்கழகத்தின் அதிகாரச் சக்தி உள்ள பேரவை இப்பிரதேச அபிவிருத்திக்கு தனது அதிகாரங்களை சரியாக பயன்படுத்தியுள்ளதா? என்ற கேள்வி எழுகின்றது. பல்கலைக்கழகத்தில் ஊழல் மோசடி, அதிகார பாலியல் தொந்தரவுகள், கெடுபிடிகள் போன்ற பல விடயங்கள் தொடர்பாக பத்திரிகைகளில் பல தசாப்தங் களாக செய்திகள் வந்துள்ளன. இவை தவறு ஆயின் பத்திரிகை நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். சரியாயின் திருத்திக் கொள்வதற்கான அதிகார நடவடிக்கை எடுக்க வேண்டும். அபிவிருத்தி பிராந்திய மக்க ளுக்கு சார்பாக இருக்க வேண்டும் என்ற வாதத்தை சமூக த்தின் உயர்நிறுவனமான பல்கலைக்கழகம் சரியாக செய்கி ன்றதா? என்ற வினா எழுகின்றது. அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெரியளவிலான நிதி உட்கட்டுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திக்கு என ஒதுக்கப்பட்டது. இவற்றுள் புதிய மாணவர் விடுதிகள், பல்கலைக்கழக நகரத்திட்டம் போன்றன முக்கியமானவை. புதிய விடுதி தென்பகுதி மாணவர்களை சென்றடையும். மாணவர்களின் வீடு அமைந்த கிலோமீற்றர் அடிப்படையில் இவர்கள் அதீத நன்மைகளை பெறுவார்கள். பிராந்திய மாணவர்கள் தனியார் வீடுகளில் தான் தனியார் செலவில் இருப்பார்கள். இதேபோன்று நகரத்திட்டம் யாழ்ப் பாணத்தில் இடவசதி போதாமையினால் கிளிநொச்சிக்கு அதிகமாக செல்லவுள்ளது. இது ஓர்வகையில் நியாயமானது. ஆனால் மறுபுறத்தில் 40ஆண்டு யுத்தத்தினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு இந்த திட்டத்தின் பலன் சென்றடையாமல் சிங்கள மாணவர்களை அதிகமாகக்கொண்ட பொறியியல் மற்றும் விவசாயபீட மாணவர்களுக்கும் இதன் நன்மைகள் சென்றடையப் போகின்றன. விரிவுரையாளர்கள் நியமனங் களும் இன விகிதத்தில் இடம்பெற்று அவர்களுக்கான விடுதி களும் பெரும்பான்மை மக்களுக்கு சென்றடைய போகின்றது. கேள்வி என்னவெனில் கடந்த ஒரு வருடத்தில் போரால் பாதிக்கப்பட்ட பிராந்திய மக்கள் இந்த அபிவிருத்தி திட்டங்களால் நேரடியாக என்ன நலனைப் பெற்றார்கள், பெறப்போகிறார்கள் என்பதாகும். பல்கலைக் கழக பேரவை இது விடயத்தில் முடிவெடுக்க அதிகாரம் உள்ள அமைப்பு ஆகும். என்ன செய்தது என்பது கேள்வியாகும்? யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம் சிங்கள மயமாக்கப்படுவதே இப்பிரதேசத்தின் விரைவுபடுத்தப்பட்ட அபிவிருத்தி என ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் இங்கு நடைபெற்ற வினாவுபடுத்தப்பட்ட பிராந்திய அபிவிருத்தி என்ற ஆய்வு மகா நாட்டின் நிகழ்வுகளை பார்த்து கூறியுள்ளார்.

மாகாண சபையில் உயர் அதிகாரிகள் தமிழர்களாக இருந்து அவர்கள் தமிழ் மக்கள் சார்பாக அல்ல நடு நிலமை யாக தமது அதிகாரங்களைப் நடு நிலைமையாக பயன்படுத் தியுள்ளார்களா? என்ற வினா எழுகின்றது. முதலமைச் சருக்கும் பிரதம செயலாளர்களுக்கும் இடையில் நடை பெறுகின்ற அதிகார போட்டியை நோக்குமிடத்து இவ்விடயம் நன்கு தெளிவாகின்றது. ஆளுநர் இராணுவ பின்புலத்தை கொண்டிருந்தாலும் இவரை மீறி, இவருடன் கலந்து ஆலோ சிக்காமல் சிலர் அதிரடி நடவடிக்கைகளை எடுத்து தங்க ளுடைய அதிகார போட்டிக்கான களமாக மாகாண சபையை பயன்படுத்தியுள்ளனர். சிங்கள உயர் அதிகாரி ஒருவர் பிரதம செயலாளர் பதவியில் இருந்து பாதுகாப்பு மற்றும் துப்பரவு சேவையை இப்படி அதிரடியாக நிறுத்தியிருப்பாரா? (தாபன நியமங்களுக்கு அப்பால் மனிதாபிமான முறையில் அல்லது மாகாணத்தின் முதலமைச்சர் என்பதற்கு அப்பால் ஓய்வு பெற்ற நீதியரசர் என்ற வகையில்) என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். எனவே எங்களுடைய அபிவிருத்திக்கு தடையாக இருப்பது நாங்கள் தான். வேறு யாரும் இல்லை. இவ்வாறு வடமாகாணத்தின் அபிவிருத்தி சார்ந்த உயர் பதவிகளைப் பெற்று தமிழ்த்தேசிய பொருளாதாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிப்பதற்கு பலர் வாளிகளுடன் மும் மூர்த்திகளின் திருப் பாதங்களை கழுவுவதற்கு தவம் இருக்கிறார்கள்.

## 7. நல்லாட்சி.

மேலே குறிப்பிட்ட எல்லா விடயங்களுக்கும் மேலாக பிராந்திய அபிவிருத்திக்கு தடையாக இருக்கின்ற மிக முக்கியமான ஓர் விடயம் பிராந்தியத்தில் சட்டம் ஒழுங்கை சரிப்படுத்தி நல்லாட்சியை ஏற்படுத்துவதாகும். சட்டம் ஒழுங்கை பாதுகாக்கின்ற ஒவ்வொரு அதிகாரமும் மத்திய அரசிடம் இருக்கின்றது. ஆள்கடத்தல்கள், கப்பம் கேட்டல், களவு, கொள்ளை, சட்டத்துக்கு முரணான கைதுகள், பாலியல் வல்லுறவுகள், கொலைகள், நீதித்துறையின் பக்கச் சார்பு போன்றன இப்பிராந்தியத்தில் இடம்பெறும் போது நல்லாட்சி கேள்விக் குறியாகின்றது. இது பிராந்தியத்தின் மூளைசாலிகளை இப்பிராந்தியத்தை விட்டு வெளிநாடுகளுக் கும் பிற இடங்களுக்கும் புலம்பெயரச் செய்துவிடுகின்றது. வெளி நாட்டில் மற்றும் கொழும்பில் வசிப்பவர்கள் யாழ். குடா நாட்டுக்கு வந்து மீள குடியமர்ந்த நிலை 2009, 2010 க்கு பின்னர் 2012 – 2013 இல் குறைவடைந்து செல்வதாக ஓர் புள்ளிவிபரம் குறிப்பிடுகின்றது. ஆழியவளைக் கிராமத் தில் யுத்தத்துக்கு முன்னரை விட யுத்தத்துக்கு பின்னர் வெளிநாடுகளுக்கு சென்றவர்களின் எண்ணிக்கை அதிகம் என ஓர் ஆய்வு குறிப்பிடுகின்றது. எனவே யுத்த காலம் போன்று யுத்தத்துக்கு பின்னர் குடித்தொகை இடப்பெயர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கு பிராந்தியங்களில் இருந்து பிற பிராந்தியங் களுக்கும் வெளிநாடுகளுக்கும் அதிகமாக இருக்கின்றது. இக்குடிப்பெயர்வுக்கு பிரதான காரணம் இங்கு நல்லாட்சியில் உள்ள குறைபாடு ஆகும். பிறேசிலில் தயாரிக்கப்பட்ட வாள்க ளுடன் களவு, கொள்ளை, பாலியல் துஸ்பிரயோகங்களில் ஈடுபடுகின்ற இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்ட நடவடிக்கைக்கு முன்னர் இவர்கள் தப்பித்து விடுகின்றார்கள். கழிவு ஒயிலூற்றும் கலாச்சாரம் அதிகரித்து செல்கின்றது.

எனவே சட்டத்தையும் ஒழுங்கையும், நிதித்துறையும் மத்திய அரசிடம் இருக்கும் போது இவற்றை மாகாணசபை அரசுகள் தங்களுக்கு தரும்படி கேட்க கூடிய ஓர் சூழ் நிலையை மத்திய அரசு உருவாக்க கூடாது. மத்திய அரசின் சேவைகள் எல்லாம் மக்களுடைய அபிவிருத்தியை அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்வதாக இருந்தால் மாகாண சபை அரசு ஒன்று தேவையில்லை. ஆனால் நடைமுறையில் பிராந்திய மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் மத்திய அரசு இதயசுத்தியுடன் செயற்படவில்லை என்பதை கடந்தகால சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எனவே நல்லாட்சியை ஏற்படுத்தி தனக்கு உள்ள அதிகாரத்தை வடக்கு கிழக்கு பிராந்திய மாகாண சபைகள் கேட்காது இருக்கும்படி பாதுகாத்துக் கொள்வது மத்திய அரசின் கடமையாகும். எந்த விதத்திலும் வட பிராந்திய அபிவிருத்திக்கு மத்திய அரசின் பொலிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் நீதிமுறை ஒழுங்கை பாதுகாப்பது மத்திய அரசின் கடமை ஆகும். ஆனால் கடந்த காலத்தில் கிறீஸ் மனிதனின் விளையாட்டுக்கள் மத்திய அரசு வடக்கு கிழக்கில் நல்லாட்சியை உருவாக்க முயற்சிக்கவில்லை என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

## 8. வடமாகாண அபிவிருத்திக்கு கடைப்பிடிக்க வேண்டியவை

வடக்கு மற்றும் கிழக்கின் விரைவுபடுத்தப்பட்ட அபிவிருத்தி தொடர்பாக அரசியல் பொருளாதார பரிமாணத்தில் பின்வரும் விடயங்களை தொகுத்து கூறலாம்.

1. பிராந்திய அபிவிருத்தியானது வட பிராந்திய மக்களின் அடிப்படை இன அடையாளங்களை அழிப்பதாக அமையக் கூடாது.
2. பிராந்திய அபிவிருத்திக்கு தேவையான அதிகாரங்களில் கிடைக்கப் பெற்ற அதிகாரங்களை நாங்கள், குறிப்பாக அரசாங்கத்தின் தமிழ் உயர் அதிகாரிகள் பயன்படுத்தவில்லை. வழங்கப்பட்ட பல்வேறுபட்ட அதிகாரங்கள் அபிவிருத்தி நோக்கில் சரியாக பயன்படுத்தப்படவில்லை.
3. பிராந்திய அபிவிருத்தி அரசியல் ரீதியாக மட்டும் அல்ல பொருளாதார ரீதியாக பிராந்திய மக்களின் வருமான மூலங்களை பலப்படுத்துவதாக அமைய வேண்டும். மாறாக அபிவிருத்தி என்ற பெயரில் அவர்களின் வாழ் வாதாரங்களையும் வருமான மூலங்களையும் சிதைக்க அல்லது அழிக்க கூடாது.
4. அரசாங்கத்துக்கும் மாகாண சபைக்கும் இடையில் முரண்பாட்டு நிலைமைகளை தோற்றுவிக்காது ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்லுகின்ற சினேகி பூர்வமான அரசியல் சூழலை உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மத்திய அரசின் தொழில் முயற்சிகள் பிராந்தியத்தின் வளச்சுரண்டலை தடுப்பதற்கு இந்த தொழில் முயற்சிகளுக்கு போட்டியாக மாகாணசபை தனியாருடன் இணைந்து தொழில் முயற்சிகளை உருவாக்குதல்.

உ + ம் - நொதேர்ன் ஏர்லைன்ஸ், நொதேர்ன் ஏளெக்ரிசிற்ரி போர்ட், நொதேர்ன் வேட்டர் சப்லை. நொதேர்ன் ரான்ஸ்போர்ட், நொதேர்ன் ப்பிஸ்ஸிங், நொதேர்ன் லீசிங், நொதேர்ன் இன்சுரன்ஸ், நொதேர்ன் பாங்கிங் லிமிற்ட்

6. பிராந்தியத்தில் வெளிநாட்டு வருவாய் ஊடாக திரட்டப்படும் சேமிப்பை தென்பகுதிக்கு செல்வதை தடுப்பதற்கு "நொதெர்ன் அபிவிருத்தி வங்கி" ஒன்றை உருவாக்கி கவர்ச்சிகரமான சேமிப்பு சலுகைகள் மூலம் அபிவிருத் திக்குத் தேவையான நிதியை திரட்டுதல், இது பிராந்தியத்தின் நிதிச் சுரண்டலைத் தடுக்கும். வடக்கு மக்களின் அபிவிருத்திக்கு தேவையான நிதி வடக்கு மக்களிடம் இருக்கின்றது.

7. பிராந்தியத்தின் அனைத்து துறைகளிலும் உள்ளூர் வல்லுனர் களை வெளிநாட்டுவல்லுனர்களுடன் இணைத்து "பொருளாதார அபிவிருத்தி ஆலோசனை சபை" ஒன்றை உருவாக்கி பிராந்தி யத்தில் உருவாக்கப்படுகின்ற எந்த திட்டங்களும் இந்த சபை யின் ஆலோசனைகளை உள்வாங்கி செயற்படுத்துதல்.

8. அபிவிருத்திக்கு மூலாதாரமான வேராக இருக்கின்ற பிராந்திய பொருளாதார வளர்ச்சியை தூண்டக்கூடிய திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து மாகாண அரசை நலச்சேவை அரசாக அன்றி அபிவிருத்தி அரசாக உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பிராந்திய அபிவிருத்தியில் சகல பிரிவினரையும் விழிப்ப டையச் செய்யத்தக்க வகையில் தொடர்பு சாதனங்கள் ஊடாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
10. காணி, பொலிஸ் மற்றும் நீதி அதிகாரங்களைப் பெற்று நல்லாட்சியை உருவாக்குதல்.
11. பிரதேசத்தின் அபிவிருத்தி தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியவகையில் மாகாண சபையும் தனியார் துறையும் இணைந்து தமிழ்த் தேசிய பல்கலைக் கழகம் ஒன்றை உருவாக்குதல்.

## 9. தொகுப்புரை

அபிவிருத்தியில் பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி என இரண்டு பிரதான கூறுகள் உள்ளன. வட பிராந்திய அபிவிருத்தியானது இலங்கையின் தேசிய அபி விருத்தி போன்று சமூகநலச் சேவைகளை வழங்கி வாக்கு வங்கியை நோக்கமாகக் கொண்ட சமூக அபிவிருத்தியை முதன்மைப்படுத்தாது பிராந்தியத்தின் பிராந்திய அரசின் மூலதன இருப்பையும் அதன் வழி பிராந்திய அரசுக்கும் மக்களுக்கும் நிரந்தர வருமானத்தைப் பெற்றுத் தரும் பொருளாதார வளர்ச்சியை தூண்டக் கூடிய பொருளாதார அபிவிருத்தியில் அரசு அதிகம் கவனம் செலுத்த வேண்டும். மக்களின் குறுங்கால அபிலாசைகளை நிறைவேற்றி மக்களை மகிழ்விக்க கூடிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்காது, நீண்ட காலத்தை நோக்கமாகக் கொண்ட மூலதன இருப்பை அதிகரிக்க கூடிய முதலீடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்ததாக அபிவிருத்தி அமைய வேண்டும். வளர்ச்சிக்கான தளம் இடப்பட்ட பின்னர் சமூக அபிவிருத்தியை செய்யலாம். குதிரைக்கு முன்புதான் எப்போதும் வண்டி நிற்கவேண்டும். மாறாக வண்டிக்கு பின்னால் குதிரை நிற்கக்கூடாது.(முதலில் பொருளாதார வளர்ச்சி பின்புதான்சமூக அபிவிருத்தி)

வட பிராந்திய அபிவிருத்தியில் மக்களின் விழிப்புணர்வு மிகக் குறைவாக இருக்கின்றது. மக்கள் அரசியலுக்கு கொடுகின்ற முக்கியத்துவத்தை விட பொருளாதாரத்திற்கு கொடுக்கும் முக்கியத்துவம் குறைவானதாகும். இந்நிலைமை மாறவேண்டும். மக்களை விழிப்படையச் செய்யும் வகையில் பத்திரிகைகள், வானொலி, தொலைக் காட்டி, மின்னஞ்சல், சஞ்சிகைகள் போன்றவற்றில் கருத்துக்களை திறந்து மக்களை பொருளாதார அபிவிருத்தி சார்பாக விழிப்படையச் செய்ய வேண்டும். மக்களின் விழிப்புணர்வு இல்லாமல் வகுக்கப்படும் எந்த திட்டங்களும் அதன் இலக்குகளை அடைய முடியாது. வடமாகாணசபை இவ் விடத்தில் கவனம் செலுத்தி ஓர்புதிய நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

பிராந்திய அபிவிருத்திக்கு அதிக முதலீடு தேவையான தாகும். முதலீடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சேமிப்பு (அன்னிய உதவி வெளிநாட்டு நேரடி முதலீடு) போன்ற வற்றால் கிடைக்கின்றது. வடக்கு கிழக்கு பிராந்தியத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு தொழில் முயற்சிகளில் என்று இல்லாமல் வெளிநாட்டு உழைப்பு மூலம் கணிசமான பங்கினைக் கொண்டிருந்த போதும் இந்த சேமிப்புக்களை தென்பகுதியை தளமாக கொண்ட அரச மற்றும் தனியார் வங்கிகள் உறிஞ்சி எடுத்து செல்லுகின்றன என்ற ஓர் குறை பலரால் கூறப்படுகின்றது. இப்பிரச்சினையை வெற்றி கொள்வதற்கு மத்திய வங்கியின் கீழ் பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் மாகாணமட்டத்திலும் உருவாக்கப்படலாம். இவைகளின் பிரதான நோக்கம் உள்நாட்டில் (பிராந்தியத்தில்) திரட்டப் படும் நிதியினை பிராந்திய அபிவிருத்திக்கு பயன்படுத் துவதாகும். இவ்வங்கியானது கவர்ச்சிகரமான அபிவிருத்தி முறிகளை விற்பனை செய்வதன் ஊடாகவும், நேரடி சேமிப்புக்களை திரட்டக்கூடிய வகையிலும் சட்டதிட்டங்க ளுக்கு அமைய உருவாக்கப்படும் போது பிராந்திய நிதி வெளியில் செல்வதை தடுத்து பிராந்திய அபிவிருத்திக்கு இந்நிதியை பயன்படுத்த முடியும்.

பிராந்திய அபிவிருத்தியில் இருக்கின்ற இன்னொரு பிரச்சினை அபிவிருத்தி திட்டங்களுக்கு இடையில் ஒருங்கி ணைப்பு இல்லாமை ஆகும். மத்திய அரசும் மாகாண சபையும் ஒருங்கிணைந்த வகையில் அதிகார வலு உள்ள "பிராந்திய பொருளாதார அபிவிருத்தி ஆலோசனை சபை" ஒன்றை உருவாக்குவது அவசியப்படுகின்றது. இச்சபை யானது சட்டவலு உள்ளதாக அமைவதோடு பிராந்தியத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட பெறுமதிக்கு மேலாக செய்யப்படுகின்ற எந்த திட்டங்களும் ஆலோசனை சபையின் அங்கீகாரத்தை பெற வேண்டும் என்ற அதிகாரவலு உள்ளதாக அமைக்கப்பட வேண்டும். இச்சபையானது தேவையான ஆலோசனைகள், கருத்து பரிமாற்றங்கள் போன்றவற்றை வழங்குவதன் ஊடாக அபிவிருத்தி திட்டங்களுக்கு இடையில் ஒரு ஒருங்கிணைவு ஏற்பட வழிவகுக்கும்.

2009 இன் பின்னர் இனமுரண்பாட்டுக்கான கொள்கைகள் தீவீரமாக அமுல்படுத்தப்படுகின்றன. எனவே அரச பக்கத்திலும் பல மாற்றங்கள் அவசியப்படுகின்றது. அரசுக்கும் மாகாண சபை ஆகிய இரண்டுக்கும் இடையில் நட்பு ரீதியான பாலத்தை ஏற்படுத்த பல சாதகமான காரணிகள் உள்ளன.

இலங்கை சுதந்திரம் அடைந்தது முதல் இலங்கையின் மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறுபட்ட இன ரீதியான பொருளாதார பேதப்படுத்தலில் இருந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தங்களை மீட்டு கொள்வதற்காக காலத்துக்கு காலம் பல்வேறுபடுத்தப்பட்ட ஜனநாயக ரீதியான போராட்டங்களில் ஈடுபட்டன. ஜனநாயக போராட்டங்கள் மத்திய அரசின் பொருளாதார இன மற்றும் பிரதேச ரீதியான பேதப்படுத்தல்களை தடுத்து நிறுத்த தவறிவிட்டன. பிரதேசத்தின் அபிவிருத்தியானது தனது நிலையில் இருந்து வீழ்ச்சியடைய தலைப்பட்டது, இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம் அடைந்தபோது அரசாங்க வேலை வாய்ப்பில் தமிழர்களின் நிலை உயர்வாக இருந்தது. இது வீழ்ச்சிய டைந்து சென்று தமிழ்மக்களுக்கான அரசதுறை வேலை வாய்ப்பு குடித்தொகை விகிதாசாரத்தை விட கீழ்நிலைக்கு சென்று விட்டது. அரசாங்கத்தின் சேவைகளான கல்வி, சுகாதாரம், மருத்துவம், போக்குவரத்து போன்ற பல்வேறுபட்ட பொதுச்சேவை வழங்கலில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் புறக்கணிக்கப்பட்டு கீழ் நிலைக்கு சென்றன.

இலங்கையின் மத்திய அரசின் பொருளாதார பேதப்படுத்தலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஜனநாயகப் போராட்டங்கள் தோல்வியை தழுவியமையைத் தொடர்ந்து ஆயதப் போராட்டமும் முடிவுக்கு கொண்டு வந்ததன் பின்பு, இலங்கை ஓர் புதிய பாதையில் பயணிக்கும் என்றும் இந்த பாதையில் இலங்கையில் எல்லா இன, மத, மொழி பேசு கின்ற மக்களும் எவ்வித பேதப்பாடுகளும் இன்றி சுபீட்சமாக நாம் இலங்கையர் என்ற வீராப்புடன் வாழமுடியும் என அரசியல்வாதிகளால் கூறப்பட்டது. பலர் இது நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் யுத்தத்துக்கு பின்னர் ஐந்து ஆண்டுகள் கழிந்தும், வடக்கு கிழக்கு மட்டும் அல்ல இலங்கை பூராகவே பொருளாதார அபிவிருத்தி என்பது ஸ்தம்பிதம் அடைந்து உள்ளது. "ஆசியாவின் ஆதிசயம்" என்ற பொருளாதார சுலோகம் என்பது முன்னர் J.R. ஜெயவர்த்தனா கொண்டிருந்த "குட்டிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கப்பூர்" என்ற சுலோகத்துக்கு ஏற்பட்ட கதி போன்று வாய்சொல்லிலும் மேடைப் பேச்சுக்களிலும் அறிக்கைகளில் மாத்திரமே காண ப்படுகின்றது, மாறாக இந்த இலக்குகளை அடைவதற்கான உசிதமான சமூக, அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலைகள் குறைவாகவே உள்ளன. இலங்கையை குட்டிச் சிங்கப்பூராக்குதல் என்ற இலக்கு ஏன் அடைய முடியாமல் இருந்ததோ அதே காரணங்கள் ஆசியா வின் அதிசயத்திலும் தோன்றக்கூடிய அகப்புறச் சூழல் இலங்கையில் காணப்படுகின்றது. இந்நிலையில் வடக்கின் அபிவிருத்தியில் இவ் ஒரு வருடகால சாதனை என்னவெனில் 13வது திருத்தச் சட்டத்தின் வழியான மாகாணசபை முறை மையில் சிறுபாண்மை மக்களின் அரசியல் அபிலாசைகள் மட்டும் அல்ல பிராந்திய மக்களுக்கான பொருளாதார அபிவிருத்தியும் அடைய முடியாது என்பதை மக்களுக்கு நிரூபித்து காட்ட வழியமைத்துக் கொடுத்தமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி II

# இலங்கைப் பொருளாதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04

## இலங்கையில் பணச்சந்தை
## Money market in Sri Lanka

1. அறிமுகம்

இலங்கையின் நிதிச்சந்தையானது பணச் சந்தை, மூலதனச் சந்தை என இரண்டு பிரிவுகளைக் கொண்டது. பொருளாதாரத்தில் மிகை நிலவும் அலகுகளில் (சேமிப்பு) இருந்து பற்றாக்குறை நிலவும் அலகுகளுக்கு (முதலீடு) நிதி சந்தை ஊடாக நிதி பரிமாற்றம் நடைபெறுகின்றது. இவ்வாறாக பரிமாற்றப்படும் நிதியானது நாட்டின் அபிவிருத் திக்கு உதவுகின்றது. ஆதர்லூயிஸ், கோல்ட்ஸ் மித்ஷோ, போன்றவர்கள் இந்த உறவுகளை ஆராய்ந்து நிதிச்சந்தை யினதும் நிதி நிறுவனங்களினதும் முக்கியத்துவத்தை விளக்கினார்கள்

இக்கட்டுரையானது நிதிச் சந்தையின் ஓர் அங்கமாக விளங்கும் பணச்சந்தையை இலங்கை பொருளா தாரத்துடன் தொடர்புபடுத்தி விளக்கிறது.

2. பணச்சந்தை என்றால் என்ன?

ஒரு வருடத்திற்கு உட்பட்ட குறுங்கால நிதிப்பரிமாற் றங்கள் நடைபெறும் சந்தை பணச்சந்தை ஆகும். இந்த நிதி பரிமாற்றங்கள் நிதி கருவிகள் மூலமும், நிதிக்கருவிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமலும் நடைபெறலாம். கடன் பெறுபவர்களுக்கும், கடன் கொடுப்பவர்களுக்கும் இடையிலான ஒப்பந்தகால மானது ஆகக்கூடியதாக ஒருவருடத்திற்கு உட்பட்டதாக காணப்படும் ஆகக் குறைந்த காலம் இலங்கையில் ஒரு இரவாக காணப்படுகின்றது. வெளிநாடுகளில் இது மணித் தியாலங்களாகவும் காணப்படுகின்றது.

3. பணச்சந்தையின் தொழிற்பாடுகள்

1. இது சேமிப்பை முதலீட்டுக்கு ஒதுக்கீடு செய்கிறது. மேலும் கடனுக்கான கேள்விக்கும் கடன் கொடுக்க கூடிய நிதியின் நிரம்பலுக்கும் இடையில் ஓர் சம நிலையை உருவாக்குகிறது.
2. பணச்சந்தையானது பொருளாதாரத்தில் திரவத்தன் மையை அதிகரிக்கிறது.
3. இச்சந்தை நிதிச் சொத்துக்களின் பாதுகாப்பை உயர்த்துகிறது.
4. ஓர்துறையில் இருந்து இன்னோர் துறைக்கு நிதியை மாற்றீடு செய்கிறது.
5. பணச்சந்தையானது மக்கள் மத்தியில் வங்கிப் பணக்கொள்கையை வெற்றிகரமாக நடை முறைப் படுத்துவதற்கு உதவுகிறது.
6. பொதுத்துறைக்கும் தனியார்துறைக்கும் தேவையான நிதியினை வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. இலங்கையில் பணச் சந்தையின் பிரிவுகள்

**பணச்சந்தை**

- பணச்சந்தை
  - மொத்த வியாபார சந்தை (Wholesale Market)
    - 01. வங்கிகளுக்கு இடையிலான அழைப்புப் பணச் சந்தை
    - 02. அழைப்பு சந்தை
    - 03. வங்கிகளுக்கு இடையிலான சந்தை
    - 04. திறை சேரி உண்டியல் சந்தை
    - 05. குறுங்கால கடன் சந்தை
    - 06. அன்னிய செலாவணி சந்தை
  - சில்லறை வியாபார சந்தை (Retail Market)
    - வர்த்தக வங்கிகளின் குறுங்கால சிறிய அளவிலான கடன்கள்
- அமைக்கப்படாதசந்தை
  - கடன் வழங்குவோர்
  - அடைவு பிடிப்போர்
  - நண்பர்கள்
  - வர்த்தகர்கள்
  - உறவினர்கள்
  - கடைச் சொந்தக்காரர்கள்
  - நிலவுடமையாளர்கள்

❖ அமைக்கப்பட்டதுறை என்பது நிறுவன மயப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட நிதி நிறுவனங்களை குறிக்கிறது. அமைக்கப்படாததுறை என்பது ஒழுங்குபடுத்தப்படாமல் சந்தைக்கு அப்பால் நடைபெறுவதாகும்.

❖ மொத்த வியாபார பணச்சந்தை என்பது பெரிய தொகையில் பணபரிமாற்றம் நடைபெறும் சந்தை ஆகும். இது மத்தியவங்கி, நிதி நிறுவனங்கள் திறைசேரி போன்றவற்றுக்குமிடையில் நடைபெறுகின்றது. சில்லறை வியாபார பணச்சந்தை என்பது சிறிய அளவில் பண பரிமாற்றம் நடைபெறும் சந்தையை குறிக்கிறது இது பொதுமக்களுக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையில் நடைபெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை

**(Interbank call Money Market)**

வங்கிகளுக்கு இடையிலான அழைப்பு பணச்சந்தை வர்த்தக வங்கிகளின் மிக குறுகிய கால (ஓர் இரவு) நிதியியல் தேவைகளை நிறைவு செய்யும் சந்தை இதுவாகும். 1977 வரைக்கும் இது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 99% வீதமானவை ஓர் இரவு கொடுக்கல் வாங்கலாக காணப்படுகிறது. இது நிதிநிறுவனங்களுக்கு இடையில் நடைபெறுகின்றது ஆனால் வெளி நாடுகளில் ஏனைய நிதி சாராத நிறுவனங்களும் பங்குகொள்கின்றன. வர்த்தக வங்கிகள் தங்களின் திரவத்தன்மையை பேணுவதற்காக இதை பயன்படுத்துகின்றன. இலங்கையில் வங்கிகள் கடன் கொடுப்பவர்களாகவும், ஏனைய வர்த்தக வங்கிகள் கடன் பெறுபவர்களாகவும் காணப்படுகின்றனர். வட்டி வீதம் கேள்வி நிரம்பலை பொறுத்து தீர்மானிக்கப்படுகின்றது. இது சந்தை வட்டி வீதத்திலும் செல்வாக்கு செலுத்துகிறது. நாளாந்தம் 3 - 4 பில்லியன் ரூபா வியாபாரம் நடைபெறுகின்றது. இச்சந்தை ஒடுங்கியதாகவும் தளம்பல் உடையதாகவும் காணப்படுகிறது. இலங்கையில் இச்சந்தையில் நிதிப்பத்திரங்கள் காணப்படவில்லை வெளிநாடுகளில் நிதிப் பத்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. திறைசேரி உண்டியல் சந்தை (Treasury bill Market)

குறுங்கால நிதித் தேவையை நிறைவு செய்வதற்காக அரசாங்கத்தின் திறை சேரியினால் வெளியிடப்படும் நிதிக் கருவி திறைசேரி உண்டியல் ஆகும். இது 3, 6, 9, 12 மாதங்களை முதிர்ச்சிகாலமாக கொண்டு வெளியிடப்படுகின்றன. இவற்றின் சிறப்பு இயல்புகள் வருமாறு.

- ❖ கைமாற்றத்தக்க அரசாங்க பிணையாகும்
- ❖ பூரணபாதுகாப்புள்ள நிதியியல் உபகரணமாகும்.
- ❖ முகப்பெறுமதியின் கழிவுவிலை ஒன்றில் அவை வழங்கப்படுகின்றன.
- ❖ முதிர்ச்சிகாலம் ஒரு வருடத்திற்கு உட்பட்டது.
- ❖ நிதி சந்தையில் மிகபாதுகாப்பான முதலீட்டு கருவியாக இருப்பதுடன் வர்த்தக வங்கிகளின் திரவத்தன்மையை பேண தற்போது மத்திய வங்கியிடம் கொடுத்து மாற்றிக் கொள்ளலாம். இச்சந்தையானது 1980இன் விரைவாக வளர்ச்சியடைந்தது இது இருவகைப்படும் அவையாவன.
  1. முதலாம் தர திறைசேரி உண்டியல் சந்தை (Primary Treasury Bill Market)
  2. இரண்டாம் தரதிறைசேரி உண்டியல் சந்தை (Secondary Teasury Bill Market)

1992 இல் முதலாம்தர திறைசேரி உண்டியல் சந்தையின் பங்கேற்பு அதிகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. திறைசேரியில் இருந்து பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக மத்தியவங்கியும் ஏனைய நிதிநிறுவனங்களாக ஊழியர் சேமலாப நிதியம், சேமிப்பு வங்கி என்பன அதிக அளவில் கொள்வனவு செய்கின்றன.

இரண்டாம் தரசந்தை என்பது மத்திய வங்கியிடம் இருந்து பிரதானமாக வர்த்தக வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் கொள்வனவு செய்கின்றன. மத்திய வங்கி யின் பகிரங்கசந்தை நடவடிக்கை இரண்டாம்தர திறைசேரி உண்டியல் சந்தையிலேயே நடைபெறுகின்றது.

1995இல் நேர் மாற்று மீள் கொள்வனவு ஒப்பந் தங்களின் கீழ் மத்தியவங்கி மீள்திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்ய (வைத்திருப்பவர்கள் விரும்பினால்) அனுமதித்தது. இதன் காரணமாக வர்த்தக வங்கிகள் தங்கள் திரவத்தன்மையை பேணுதல், இலாபம் உழைத்தல் ஆகிய இரு நடவடிக்கைகளையும் இந்த உடன்பாடு மூலம் பெறக்கூடியதாக இருந்தது. அழைப்பு பணச் சந்தையில் அழைப்பு பணத்திற்கான கேள்வி குறைவடைந்து வட்டி வீதம் வீழ்ச்சியடைந்தது. காரணம் பணம் தேவைப்படும் போது வணிக வங்கிகள் திறைசேரி உண்டியலை மீள கொள்வனவு செய்தல் ஒப்பந்தத்தின் கீழ் மத்திய வங்கிக்கு கொடுத்து பணத்தை பெறுகின்றன. (முன்னர் வங்கி விரும் பினாலும் ம.வங்கி கொள்வனவு/செய்வதில்லை) முதனிலை வணிகர்கள் இச்சந்தையை இன்று பிராந்திய நகரங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடித்துள்ளனர். 1997 யூன் இறுதியில் வெளி நின்ற திறை சேரி உண்டியல்களில் 68% வங்கியல்லாத தனியார் துறையினரின் கையில் காணப்பட்டது.

7. **குறும் கால கடன் சந்தை (Shortrun Debt Market)**

ஒரு வருடத்திற்கு உட்பட்ட கடன் சந்தை இதுவாகும். இதில் பின்வருபவை காணப்படுகின்றன.

1. **வர்த்தக தாள்கள் (commercial Papers)**

நன்கு பிரபல்யமான தனியார் நிறுவனங்கள் தங்களுடைய குறுங்கால நிதியை திரட்டுவதற்காக (2-270 நாட்கள்) இதனை வெளிவிடுகின்றன. இதனை கொள்வனவு செய்யும் முக்கிய முதலீட்டாளர்களாக வர்த்தக வங்கிகள், ஏனைய நிதி நிறுவனங்கள் கூறு நம்பிக்கை நிறுவனங்கள் என்பன காணப்படுகின்றன.

2. **மத்திய வங்கியின் சொந்தப்பிணைகள்**

மத்திய வங்கி 1980க்கு முன்னர் நீண்டகால பிணைகளை வழங்கி நிதியை திரட்டியது. ஆனால் 1990 இன் பின்னர் குறுங்கால முதிர்ச்சியை கொண்ட பிணை களை வெளியிட்டு நிதியினை பெறுகின்றது. 1997இல் 7 நாட்கள், 28 நாட்கள் முதிர்ச்சியை கொண்ட கடன்களை பிணைகள் மூலம் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. மீள் கொள்வனவுகள் சந்தை

இது மீள் கொள்வனவு செய்தல் என்ற ஒப்பத்தின் பெயரில் வழங்கப்படும் பத்திரமாகும். இது இலங்கையில் மூன்று வகையில் இடம்பெறுகின்றது.

a) இலங்கை மத்திய வங்கியுடனான மீள் கொள்வனவு சந்தை

b) வங்கிகளுக்குக்கு இடையிலான மீள்கொள்வனவு சந்தை

c) வங்கிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான மீள்கொள்வனவு சந்தை இச்சந்தையில் இருந்து இந்நிறுவனங்கள் ஓர் பத்திரத்தை வெளியிடுவதன் மூலம் ஒருவருடத்திற்கு உட்பட்ட முதிர்ச்சி காலத்தை உடைய கடனை பெறுகின்றன.

## 8. அன்னிய செலாவணி சந்தை
**(Foreign exchange market ) (Forex)**

வெளிநாட்டுநாணயங்கள் பரிமாற்றம் செய்யப்படும் சந்தை இதுவாகும். இது இரு பிரிவுகளைக் கொண்டது.

1. உள்நாட்டு சந்தை (Domestic Market)
2. கரை கடந்த சந்தை (off – shore Market)

உள்நாட்டு சந்தை என்பது மத்திய வங்கிகளுக்கும் அங்கீகரிக்கபட்ட வெளிநாட்டு வர்த்தகர்களுக்கும் இடையில் நடைபெறுவதாகும். கரைகடந்தசந்தையில் வதிவோர் வதிவற்றோர், வங்கிகள் என மூன்று பிரிவினர் பங்குகொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு நிதியை உள்நாட்டில் கவர்வதற்காக இச்சந்தை அபிவிருத்தி செய்யப்பட்டது. இச்சந்தையில் 1977 இன் துரிதவளர்ச்சி காணப்பட்டது. வெளிநாட்டு நாணயத்தில் வைப்புக்களை பெறல் கடன் கொடுத்தல் என்பன இடம் பெறுகின்றது. இச்சந்தை மென்மேலும் தாராள மயமாக் கப்பட்டு வருகிறது.

- சில்லறை வியாபார பணச்சந்தையில் 50%மானகடன்கள் வர்த்தகத்திற்கு வழங்கப்படுகின்றன. அமைக்கப்பட்ட பணச்சந்தையானது பின்வரும் காரணிகளால் இலங் கையில் விரிவடைந்தது
- வர்த்தக வங்கிகளின் அபிவிருத்தி
- கிராம நகர் புறங்களின் கிளைகளின் விரிவாக்கம் கிராம வங்கிகளின் அபிவிருத்தி
- தாராள பொருளாதார கொள்கையின் கீழ் நிதிதுறையில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள்
- கல்வியறிவு அதிகரித்தமையும் கிராம நகர இடைவெளி குறைந்தமையும்.

எனவே இலங்கையின் பணச் சந்தையானது மென்மேலும் விரிவடைந்து செல்லும் போக்கைக் கொண்டிருப்பதை அவதா னிக்கலாம். இதற்கு முன்னெடுத்து செல்லப்படும் தாராள பொருளாதார கொள்கையே காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. Reading

1. Banking and financial System of Sri Lanka

2. பொருளியல் நோக்கும் 1997 by H.N.S Karunathilaka

3. சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05

# இலங்கையில் வறுமை ஒழிப்பும் புதிய தந்திரோபாயமும்

## Poverty Alleviation in Sri Lanka and New Strategy

### 1. அறிமுகம்

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் கடந்த பல ஆண்டுகளாக எதிர்நோக்குகின்ற ஓர் பேரினப் பொருளாதாரப் பிரச்சினை வறுமை ஆகும். வறுமை ஒழித்தல் அல்லது வறுமையை எதிர்த்து போராடுதல் என்பது பல குறைவிருத்தி அரசுகள் எதிர்நோக்கும் பிரச்சினை ஆகும். இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பல மட்டங்களில் பல முயற்ச்சிகள் எடுக்கப்படுகின்றன. அரசாங்கம், அரசசார்பற்ற நிறுவனங்கள் உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி என பல அமைப்புக்களும் நிறுவனங்களும் இப் பிரச்சினையை தீர்க்க அதீதமாக முயல்கின்றன. பல மில்லியன் பணம் வறுமை ஒழிப்புக்கு செலவு செய்யப்படுகின்றது. பல நிர்வாக அமைப்புக்கள் இம் முயற்ச்சியை நோக்கி உருவாக்கப்பட்டுள்ளன. இந் நிர்வாக அமைப்புக் களுக்கு அரசு செலவு செய்தல் என்பது பெரிய சுமையாக இருப்பது ஒருபுறம் இருக்க, வறுமை ஒழிப்பு சாத்தியமற்றதாக இருக்கின்றது. இன்று உலகப் பொருளாதார ஒழுங்கில் உள்ள தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வறுமையை மென்மேலும் அதிகரிக்கின்றது. இம்மக்கள் இக்கொள்கைகளை பின்பற்றுகின்ற அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்க்கொள்கின்றன இதுவும் இவ் அரசாங்கங்களுக்கு ஓர் சவாலாக அமைகின்றது. இவ்வாறு பல மட்டங்களில் பிரச்சினையை ஏற்ப்படுத்துவது தொடர்பாக புதிய ஓர் அணுகு முறையை இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்குக்கு பொருத்தமுடையதாக உருவாக்கின்ற ஓர் திட்டமே இதுவாகும்.

## 2. வறுமையின் மூலங்கள்

வறுமைக்கான அடிப்படை மூலமாக இருப்பது வேலையின்மையும் வருமான சமமின்மை ஆகும். முழு அளவிலான வறுமையாயினும், அல்லது சார்பளவான வறுமையாக இருந்தாலும் அவற்றுக்கு பிரதான காரணம் வருமான வேறுபாடு ஆகும். வருமான பகிர்வு ஓர் பிரிவு மக்களுக்கு பாதமாகவும் இன்னொரு பிரிவினர்க்கு சாதகமாகவும் அமையும் போது குறைந்த வருமானம் பெறுபவர்கள் பாதிப்படைந்து வறுமைக் கோட்டுக்குள் தள்ளப்படுகின்றனர். வருமான சமமின்மையை நீக்குவதற்கு உயர்ந்த வருமானம் உடையவர்களிடம் இருந்து வரி அறவிடப்பட்டு தாழ்ந்த வருமானம் பெறுபவர்களுக்கு மானியம் வழங்கும் பல்வேறு முறைகள் ஊடாக வறுமையை தனிப்பதற்க்கு கடந்த காலங்களில் அரசாங்கத்தின் வறுமை ஒழிப்பு திட்டங்கள் அமைந்து இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உர மானியத்திட்டம், ஜனசவிய, சமுர்த்தி போன்ற பாரிய வறுமை ஒழிப்பு திட்டங்கள் இலங்கையில் எதிர்பார்த்த வெற்றியை கொடுக்கவில்லை. தொடர்ந்தும் வருமானம் சம மின்மை, வறுமை என்பன காணப்படுகின்றன. வறுமை என்பது ஓர் முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றது. வறுமை ஒழிப்பு வருமான மீள்பங்கீடு என்பன எல்லாம் ஓர் அரசியல் மயப்படுத்தப்பட்ட சுயநல அரசியல் நோக்கம் கருதிய திட்டங்களாக அரசியல் வாதிகளால் முன்வைக்கப்பட்டது. வறியவர்களுக்கு மகிழ்ச்சி தரக் கூடியதும் அரசாங்கத்தின் வாக்கு பலத்தை தக்க வைத்திருப்பதற்கும் இவ்வறுமை ஒழிப்பு திட்டங்களை பதவிக்கு வந்த அரசுகள் நடைமுறைப் படுத்தின. இதன் காரணமாக மக்களின் அடிப்படை வருமானம் உயரவில்லை மாறாக அவர்களை தொடர்ந்தும் அரசாங்கத் தின் மீது தங்கியிருக்கும் ஓர் ஏழ்மை வர்க்கத்தினராக்கவே இத்திட்டங்கள் உருவாக்கின. வறுமை ஒழிப்பில் கடந்த காலத்தில் இலங்கையில் செயற்ப்படுத்தப்பட்ட திட்டங்களில் உள்ள குறைபாடுகளை நோக்குவோம்.

## 3. வறுமை ஒழிப்புத் திட்டங்களின் குறைபாடுகள்

### 1. உணவு மானியத்திட்டம்

வறியவர்களை அவர்களின் வறுமையில் இருந்து மீட்பதற்க்கு காலத்திற்கு காலம் அரசு உணவு மானியத் திட்டங்களை பல வடிவங்களில் உருவாக்கியது. உணவு முத்திரை, மதிய உணவுத் திட்டம், பால் விநியோக திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றன இவ்வகையில் சார்ந்தவை ஆகும். உணவு மானியத்திட்டம் வறியவர்களை பட்டினியில் இருந்து நீக்கி அவர்களை வருமானம் உழைக்க ஏனைய மூலகங்களை தேட முயற்ச்சிக்காத ஓர் வறியவர் வர்க்கத்தை உருவாக்கியது. இக்கொடுப்பனவுகள் மக்களின் அடிப்படை வருமானத்தை உயர்த்துவதையோ or கிடைத்த வருமானத்தை தொடர்ந்து தக்க வைப்பதாக இருக்கவில்லை. அரசின் உணவு முத்திரையை பெற்று நன்கு சாப்பிட்டு வேலைக்கு போகாத ஓர் சோம்பேறி வர்க்கத்தை உருவாக்கிய அதே நேரம் குடும்பத்தில் பிள்ளைகளின் எண்ணிக்கையை அதிகரித்து அவர்களும் கல்வியை தொடராது சிறு வயதில் திருமணம் செய்து தொடர்ந்தும் வறுமை சக்கரத்தில் சுழல்கின்றனர். எனவே உணவு மானியத்திட்டம் உற்பத்தி சார்ந்த நிலைத்து நிற்க கூடிய வருமானத்தை பெறும் ஓர் திட்டமாக திகழவில்லை. மாறாக இது அரசியல் வாதிகளின் இச்சையை தீர்ப்பதற்கு அரசியல் வாதிகளுக்கு அரசின் மீது மக்களின் விசுவாசத்தை அதிகரிக்க செய்து வாக்கு வங்கியை நிரப்புவதாக இருந்தது.

இந்தியாவின் பிரபல எழுத்தாளர் சோ இது பற்றி குறிப்பிடும் போது இலங்கையின் அரசியலுக்கும் அரிசிக்கும் சம்பந்தம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் வி. நித்தியானந்தன் இலங்கையில் மானிய அரிசியின் விலையை அதிகரித்த அல்லது மானிய அரிசியின் அளவை குறைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்வாதிகள் தேர்தல் களில் தோல்வியடைந்ததை எடுத்துக் காட்டுகின்றார். உணவு மானியத்திட்டம் மொத்தத்தில் இலவச மற்றும் மானிய உணவினால் ஆயுள்காலம் உயர்ந்தது. இது சமூக அபிவிருத்தியை உயர்வாக காட்ட பங்களிப்பு செய்தது. அதன் பொருளாதார பங்களிப்பு மிக குறைவாகும்.

## 2. ஜனசவிய திட்டம்

இத்திட்டம் ஓர் சிறிய தொகையை சேமிப்பதை மக்களுக்கு தூண்டிய போதும் வறிய மக்கள் தமது அடிப்படை வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்க்கும் இத் திட்டம் பங்களிப்பு செய்யவில்லை. மேலும் இத்திட்டம் கூட வறியவர்களுக்கு உணவு மானியத்திட்டம் போன்று ஓர் நிவாரணத்தை வழங்கியது. இத்திட்டம் மக்களின் தகுதி கருதி வழங்கப்படாமல் செல்வந்தர்களும் இத்திட்டம் மூலம் நன்மைகளைப் பெற்றனர். கிராம மட்டங்களில் தெரிவு செய்தவர்களின் உள்ள குறைபாடுகள் மற்றும் அரசியல் பக்கச் சார்பு போன்ற காரணங்களுக்காகவும் இத்திட்டம் எதிர்பார்த்த வெற்றியை கொடுக்கவில்லை.

## 3. சமுர்த்தி திட்டம்

சமுர்த்திதிட்டம் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் வறிய குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்படுவதாக அமைக்கப்பட்டாலும் நடைமுறையில் சமுர்த்தி திட்டத்தில் பங்கு கொண்ட அலுவலர்கள் அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி சார்ந்தவர்கள் மற்றும் இலஞ்சம் கொடுத்து சமுர்த்தியில் வேலைவாய்ப்பு பெற்றவர்களாக இருந்தனர். மேலும் சமுர்த்தி ஊக்குவிப்புக்களும் வறியவர்களின் தொழில்களை விருத்தி செய்வதாக அமைக்கவில்லை. இத்திட்டத்தை தொடந்தும் வறுமை நடைமுறையில் இருக்கிறது. இதுவும் அரசியல் மயப்படுத்தப்பட்ட திட்டமாகவே காணப்படுகிறது.

## 4. சமூக சேவை செலவீடுகள்

சமூக சேவை செலவீடுகள் என கூறப்படும் கல்வி, சுகாதாரம், மருத்துவ வசதிகள் கூட உண்மையில் வறிய குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை வருமானத்தை உயர்த்தியுள்ளதா? இவற்றுக்கான விடை மிக ஆழ்ந்து கவனமாக நோக்கப்பட வேண்டியது. வருமான மீள்பங்கீடு செய்வதன் மூலம் கல்வி சுகாதாரம் மருத்துவம் இலவசமாக வழங்கப் படுகின்றது. இவற்றின் தரம் பற்றி முதலில் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அரசாங்கம் செலவழிப்பது வினைத் திறமையாக உள்ளதா? இவையாவும் ஓர் அரசியல் நலன் கருதிய திட்டங்களாகவே உள்ளன. அவை மக்களின் வாழ்க் கைத் தரத்தை முன்னேற்றம் செய்தபோதும் அவர்களுடைய வருமானம் உயர்வடையவில்லை. வருமான சமமின்மை வறுமை தொடர்ந்தும் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. திவிநெகும

மகிந்த சிந்தனையின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வறியவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு இத்திட்டத்தை விவசாயம், கைத்தொழில், சேவைத்துறை என எல்லா துறைகளிலும் நடைமுறைப்படுத்தியது. சிறிய முயற்சிகள் ஊடாக உற்பத்தியை மற்றும் வறியவர்களின் வருமானத்தை பெருக்கலாம் என்பது இத்திட்டத்தின் அடிப் படை நோக்கமாகும். வீட்டில் சிறிய தோட்டங்களை அமைத்து உலகில் எந்த நாட்டு வரலாற்றிலும் விவசாய புரட்சி ஏற்பட்டதாக வரலாறு இல்லை. மேலும் பெரியளவில் நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் கூட அரசின் சிறந்த பாதுகாப்புக் கொள்கை இன்மை காரணமாக நெருக்கடிகளை சந்தித்து முறிவடைகின்ற அல்லது நல்ல இலாபத்தை பெறாத நிலையில் இச் சிறு முயற்சிகள் ஊடாக நாட்டுமக்களின் குறிப்பாக வறியவர்களின் வருமானம் உயரும் என்பது முயல் கொம்பாகும். உதாரணமாக இத்திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட விதைகளில் பெரும் பாலானவை முளைக்கவே இல்லை. முளைத்து பல பராமரிப் புக்களை பெற்று விளைந்த மரக்கறிகளின் விலையை விட திறந்த சந்தையில் மிக மலிந்த நிலையில் மரக்கறிகளை கொள்வனவு செய்ய முடிந்தது. சாதாரண வார்த்தையில் குறிப்பிட்டால் இது ஒரு நணைத்து சுமக்கின்ற திட்டமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. அனுபவங்கள் காட்டும் தெரிவு

அனுபவங்கள் எமக்கு படிப்பினைகளை ஏற்படுத்துகின்றன. மேற்குறித்த இலங்கையில் கடந்த கால பின்னணியில் எதிர்காலத்தில் வறுமையை எப்படி ஒழிக்கலாம் என்பது கோட்பாட்டு மற்றும் நடைமுறைசார்ந்த பிரச்சினைகள் அடிப்படையிலும் அனுப்படவேண்டும். வறியவர்கள் பெரும் பான்மையினர் கிராமியத்துறையில் விவசாயத்துடன் சார்ந்து வாழ்கின்றனர். வறுமையை ஒழிப்பதற்கு விவசாயத்தை அபிவிருத்தி செய்தல் என்பது ஓரளவுக்கு வறுமையை நீக்கிய போதும் முற்று முழுதாக வறுமையை நீக்காது. காரணம் விவாசாயத்துறையில் முயற்சியாளர்களை விட தொழிலாளர்களின் வறுமை ஒழிப்புக்கு விவசாய அபிவிருத்தி நேரடியாக பங்களிப்பு செய்யமாட்டாது.

ஓர் பொருளாதாரத்தில் ஒருவர் கூடிய வருமானத்தையும், இன்னொருவர் குறைந்த வருமானத்தையும் பெறுவதற்கும், ஓர் பொருளாதாரத்தில் ஓர் நிறுவனம் கூடிய வருமானம் பெறுவதற்கும் இன்னொரு நிறுவனம் குறைந்த வருமானம் பெறுவதற்கும் பிரதான காரணம் என்ன? கோட்பாடு பின்னணியிலும் நடைமுறையிலும் தகவல் கிடைப்பனவுகளில் ஏற்படுகின்ற வேறுபாடே வருமான வேறுபாட்டுக்கு காரணமாக அமைகின்றது. யார் கூடிய தகவல்களை கொண்டிருக்கின்றனரோ அவர்கள் கூடிய வருமானத்தை பெறுகின்றனர். யார் குறைவான தகவல்களை கொண்டிருக்கின்றனரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் குறைந்த வருமானத்தைப் பெறுகின்றனர். வருமான வேறுபாடு தகவல்பரம்பல் வேறுபாட்டால் ஏற்ப்படுகின்றது. தகவல் கிடைக்காத பட்சத்தில் ஓர் உற்பத்தியாளனோ or நுகர் வோனே மற்றவர்களால் ஏமாற்றப்படுகின்றான். தகவல் பற்றாக்குறையானது சந்தையை போட்டி சந்தையில் இருந்து தோல்வியடைய செய்து தனியுரிமையாகவோ or தனியுரிமை போட்டியாகவோ மாற்றப்படுகிறது. நிறை போட்டி சந்தை யானது நுகர்வோன் மற்றும் உற்பத்தியாளன் ஆகிய இருவரு க்கும் சமமான நன்மை வழங்க, தகவல் பரம்பலில் உள்ள வேறுபாடு காரணமாக உருவாகும் நிறைவில் போட்டி சந்தை ஒருவருக்கு அதிக நன்மையையும் மற்றவர்களுக்கு குறைந்த நன்மையையும் வழங்கும். இது வருமான வேறுபாட்டுக்கு காரணமாக வருமான சமமின்மை அதிகரித்து வறுமைக்கு காரணமாக அமைகின்றது. எனவே வறுமைக்கான மூலம் தகவல் பரம்பலில் உள்ள வேறுபாடுதான்.

## 5. வறுமை ஒழிப்பில் தகவல்களின் பங்கு

மேற்குறித்த பின்னணியில் வறுமை ஒழிப்புக்கும் தகவல்களுக்கும் பிரதான பங்கு உண்டு. தகவல் என்பது முழுமையானதாகவும், தரம் மிக்கதாகவும் இருக்க வேண்டும் அவ்வாறான பூரணமான தரமான தகவல் வறியவர்களின் உற்பத்திக்கான மூலவளங்கள் மற்றும் விற்பனைப் பொருட் களுக்கான சந்தையை போட்டி மிக்கதாக உருவாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் வருமானம் அதிகரிக்கும். தகவல் கிடைக்கும் போது அவர்களின் பேரம் பேசும் பலம் அதிகரிக்கும். தங்களுடைய வளங்களை சுரண்டும் தகவல் படைத்தவரிடம் வறியவர்கள் பூரணமான தகவல்களை கொண்டிருக்கும் போது பேரம் பேசி தமது உற்பத்தி மற்றும் சந்தை வாய்ப்பு வசதிகளை அதிகரிக்க முடியும். இது அவர்களின் வருமானத்தை உயர்த்தி வாழ்க்கைத்தரத்தை அதிகரிக்கும். வறியவர்கள் தரமான பூரணமான தகவல்களைக் கொண்டிருக்கும் போது அவர்களின் வலுவூட்டல் சக்தி அதிகரிக்கின்றது. இது அமர்த்தியா சென் குறிப்பிடும் வறுமை ஒழிப்புக்கான உண்மையான சுதந்திரத்தை (Real Freedom for poor) வழங்குகின்றது.

தகவல்கள்தான் வாய்ப்புக்களை உருவாக்குகின்றது எனில், தகவல் (Information) என்பது என்ன? வறியவர்களுக்கு இவற்றை எப்படி வழங்கி வறியவர்களின் பொருளாதார வாய்ப்புக்களை அதிகரிக்கலாம்? பொருளாதாரத்தில் ஒவ்வொரு அம்சங்களிலும் பூரணமான தரம் மிக்க தகவல் வறியவர்களை சென்றடையும் போது அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்கின்றது. எனவே தகவல் என்பது என்ன? அவற்றை வழங்கும் தகவல் பரிமாற்ற ஊடகங்கள் எவை என்பது இங்கு விரிவாக நோக்கப்பட வேண்டும். மக்களின் அறிவுதான் தகவல் ஆகும். மக்களின் அறிவை வழங்குபவை எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கல்வி | |
| போக்குவரத்து | புறச்சூழல் |
| தொடர்புசாதனம் | சமூக சூழல் |
| வானொலி | குடும்பசூழல் |
| பத்திரிகை | உறவுச்சூழல் |
| TV | பயிற்சி |
| ரெலிபோன் | மொழிகள் |

தரமான கல்வியை பெறுபவன் அதிக வருமானத்தையும் தரம் குறைந்த கல்வியை பெறுவர்கள் குறைந்த வருமானத்தையும் பெறுகின்றார்கள். உதாரணமாக இலங்கையில் இருக்கும் கல்வி முறைமையில் சிறந்த பாடசாலையில் படிப்பவர்கள் நல்ல வேலைவாய்ப்பையும் நல்ல வருமானத்தையும் பெற, தரம் குறைந்த பாடசாலையில் படித்தவர்கள் தரமற்ற வேலை வாய்ப்பையும் குறைந்த வருமானமும் பெறுகின்றனர்.

எனவே வறுமையை நீக்குவதற்கு நுகர்வு செலவீடுகளை வறியவர்கள் மீது மேற்கொள்ளாமல் அவர்களின் பிள்ளைகளை தரம் மிக்க பாடசாலையில் சிறந்த கல்வியை வழங்குவதன் மூலம் அவர்களின் குடும்பத்தில் பல அடைக்கப்பட்ட வருமானக் கதவுகள் திறக்கப்படும். நகரத்துறையில் அதி உயர்கல்வி தரம் உடைய பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களை கிராம பாடசாலைக்கு இடம் மாற்றுவதை தவிர்த்து கிராம புற வறிய மாணவர்களை நகரத்துறை மாணவர்களுடன் ஒன்று சேர்ப்பதன் மூலம் கல்வியில் சம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்களை வறியவர்கள் பெற முடியும். இது அவர்களின் வருமானம் மற்றும் வாழ்க்கை தரத்தில் எதிர்காலத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தும். அவ்வாறு நகர பாடசாலைகளில் குறிப்பிட்ட ஓர் குறிப்பிட்ட சதவீத அனுமதியை (Admission) வறிய பிள்ளைகளுக்கு வழங்கி அவர்களை சிறந்தகல்வி தகமையை பெற்றவுடன் குறிப்பிட்ட கிராம பிரதேசத்தில் கட்டாயம் சேவையாற்ற வேண்டும் என்ற சட்டத்தை கூட உருவாக்கலாம். தனியார்துறை வேலை வாய்ப்பாக இருந்தால் கூட போக்குவரத்து வசதியூடாக அவர்களின் இருப்பிடத்தை சொந்த கிராமத்தில் ஏற்படுத்தலாம். வேலை வாய்ப்பு வழங்களில் கூட வறியவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப் படலாம். கல்வியில் சம வாய்பை ஏற்படுத்துவதன் மூலம் வறுமையை ஒழிக்கலாம்.

இலங்கையில் கடந்த கால கல்விக் கொள்கை எமக்கு கற்றுத்தந்தது என்ன? உதாரணமாக 100 மாண வர்கள் ஓர் O/L வகுப்பில்(தனியார் வகுப்பு) கல்வி கற்கின் றார்கள். அதில் மருத்துவபீடம், பொறியியல் பீடம் செல்லும் மாணவர்கள் யார்? அம்மாணவர்களின் குடும்ப பின்னணி என்ன? வர்த்தகர்கள், அரசாங்கத்தில் உயர்வருமானம் பெறும் உத்தியோகத்தர்கள் தங்களுடைய பல்வகை செல் வாக்கின் ஊடாக நகரப்பாடசாலைகளில் இடத்தை பெற்று, தமது பிள்ளைகளை கல்வி கற்பிப்பதோடு அவர்களின் வருமானம் பிள்ளைகளை பிரத்தியேக வகுப்புக்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்புவதற்கும், தனிப்பட்ட முறையில் வீட்டுக்கு அழைத்து கல்வி கற்பிப்பதற்கும் வாய்ப்பை கொடுக்கின்றது. இவர்கள் நகரச்சூழலில் வாழ்வதால் பிரதேசத்தில் பிரபல்யமான ஆசிரியர்களை கொண்ட பாடசாலைகளும், தனியார் கல்வி நிலையங்களும் வழங்கும் சேவையை மிக இலகுவாக பெறுகின்றார்கள். ஆனால் இதே வகுப்பில் சாதாரண ஓர் வறியவரின் பிள்ளை இணைய முடியாத நிலை காணப் படுகின்றது. இதற்கு குடும்பநிலை, வருமான நிலை, வீட்டு வசதி, அல்லது தங்குமிடவசதி, வாழ்க்கைசெலவு என பல தடைகள் உண்டு. இப்பாடசாலையில் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்கள் ஏற்கனவே பல்வேறுபட்ட பொரு ளாதார இன்னல்களை சுமந்தவர்களாக காணப்படுகின்றனர். அரசாங்கம் வழங்கும் இலவசக்கல்வி வருமான மீள் பங்கீட்டை செய்வதற்கு பதிலாக வருமானத்தை மென்மேலும் சமமின்மையாக்குகின்றது. பல்கலைக்கழக அனுமதி ஒவ் வொரு பாடசாலைகளிலும் ஏதோவிதத்தில் ஏற்கனவே நல்ல வருமானம் பெறும் நிலையில் உள்ள குடும்பங்களுக்கே அதிகம் கிடைக்கின்றது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் பல்கலைக்கழக அனுமதி பெறுபவர்கள் கலைத்துறைக்கே செல்கின்றார்கள். கலைத்துறையில் கல்வி பயிலுபவர்களில் அதிகமானோர் வறிய குடும்பத்தில் இருந்து வந்தவர்களாவும், அல்லது விவசாயத்துறையில் கிராமத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களாகவும் காணப்படுகின் றனர். கிராமத்தில் எதோவொரு வகையில் ஏனையவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட வருமானத்தை உயர்வாக பெறுபவர்களாக காணப் படுகின்றனர். இவ்வாறு செல்பவர்கள் மொத்தத்தில் ஓர் சிறு தொகையினரே. எனவே மிகுதி மாணவர்களின் கதி என்ன? அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த உருவாக்கப்பட்ட தொழில் நுட்ப கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகளின் நிலை என்ன? இவ்வாறான நிறுவனங்கள்கூட பல்கலைக்கழக அனுமதி பெறாத மாணவர்கள் அனைவருக்கும் கல்வியை வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் தொழில் நுட்ப கல்லூரிகள் உருவாக்குகின்ற தொழில் நுட்பவியலா ளர்களின் தரம் பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும். பல்கலைக் கழகங்கள் போன்று இவையும் பாடப் புத்தக அனுகுமுறையையே அதிகமாக கொண்டுள்ளன.

### 6. இலவசக் கல்வியும் வறுமை ஒழிப்பும்

இலங்கையில் வறுமை ஒழிப்புக்கு கல்விக் கொள்கையை பின்வருமாறு பயன்படுத்தலாம்.

### 1. பாடசாலையில் வளங்களின் ஒதுக்கீட்டில் உள்ள குறை பாட்டை நீக்குதல்.

நகரப்பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள், கணனிகள், ஆய்வு கூட வசதிகள் கிராம புற பாடசாலைகளில் உள்ளதை விட அதிகமாக ஒதுக்குவதை தவிர்த்து கிராமபுறப் பாட சாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து இப்பாடசாலைக ளுக்கு அதிக வளங்களை ஒதுக்கீடு செய்தல். இந் நடவடிக்கையில் நகரப்புற ஆசிரியர்களை கிராமப்புறத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடமாற்றம் செய்வதை விட ஆசிரியர்களின் உள்ளங்களில் கிராமப்புறத்தில் கல்வி கற்பிப்பது பல நன்மைகளை தரும் என்ற எண்ணப்பாங்கு ஏற்படக்கூடிய வகையில் சில வாய்ப்பு, வசதிகளை கிராமப்புறப் பாடசாலைகளில் ஏற்படுத்துதல்.

**2. பல்கலைக்கழக தெரிவில் வறுமைக்கும் நிறையழித்தல்**

பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி (ZScore) மாவட்ட மட்டத்தில் வேறுபட்ட போதும் மாவட்டத்தில் பாடசாலைகளுக்கு இடையில் வேறுபடுவது நடைமுறையில் இல்லை. இதன் காரணமாக மாவட்ட மட்டத்தில் உயர் வருமானம் பெறும் பெற்றோர்களின் பிள்ளைகள் பல்கலைக்கழகம் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. இதன் காரணமாக வறியவர்களுக்கு வாய்ப்பு குறைவாக உள்ளது. எனவே பாடசாலை மட்டத்தில் வெட்டுப்புள்ளிகளை வேறுபடுத்துவதோடு பாடசாலை மட்டத்திலும் வறிய மாணவர்களுக்கு ஓர் போனஸ் புள்ளி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப் படலாம்.

**3. தொழிற்பயிற்சி சார்ந்த பாடத்திட்டத்தை உருவாக்குதல்**

பாடசாலை மற்றும் பல்கலைக்கழக தொழிநுட்ப கல்லூரிகளில் வழங்கப்படும் கல்விக்கும் தொழிற்சந்தையில் தொழில் வழங்குனர்கள் எதிர்பார்ப்புக்கும் இடையில் நிறைய வேறுபாடு காணப்படுகின்றது. இதன்காரணமாக வறுமையிலும் கல்வி கற்று பட்டப்படிப்புக்களை தொடர முடியாத மாணவன் மற்றும் பட்டப்படிப்பு தொடரும் வறிய மாணவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையற்றவர்களாக காணப்படுகின்றனர். எனவே கிராம மட்டங்களில் தொழிற்பயிற்சி நிலையங்களை அமைத்தல் பாடசாலைகளில் தொழிற்பயிற்சி சார்ந்த கல்விக்கு அதிக நிறையளித்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் வறிய மாணவர்களின் வேலையின்மை பிரச்சினைக்கு தீர்வு காணலாம். இவ்வாறான நடவடிக்கைகள் வறுமை ஒழிப்புக்கு மறைமுகமாக பங்களிப்பு செய்யும்.

**5. பிரபல்யமான நகர்ப்புற பாடசாலைகளில் வறியவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்தல். (முன்னர் விளக்கப்பட்டுள்ளது)**

**6. கிராம பாடசாலைகளில் ஆங்கிலக்கல்வியை ஊக்குவித்தல்**

ஒருவருடைய வருமானத்தை தீர்மானிக்கின்ற முக்கியமான ஓர் காரணியாக ஆங்கிலக்கல்வி காணப்படுகின்றது. நகர்புறப் பாடசாலைகளில் கல்விகற்கின்ற மாணவர்கள் அதிக வருமானம் உள்ள தொழில்களை பெற்றுக் கொள்வதற்கு ஆங்கிலக்கல்வியும் ஓர்காரணமாக காணப்படுகின்றது. இன்று காணப்படும் உலக ஒழுங்கின் பிரகாரம் ஆங்கிலக் கல்வியை வருமானம் ஈட்டுவதற்கான ஒரு கருவியாக பலர் பயன்படுத்துகின்றனர். கிராம பாடசாலைகளில் சிலவற்றில் அறவே ஆங்கில ஆசிரியர் இன்றியும் சில பாடசாலைகள் இயங்குகின்றன. இவ்வாறான ஓர் சூழ் நிலையில் கிராமப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் எப்படி உலக நடப்புக்கு ஏற்றவாறு தொழில்சந்தையில் போட்டியிட முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே கிராமப்புறப்பாடசாலையில் கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கு சில கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்களை கொடுத்து ஆங்கிலக்கல்வியில் சம வாய்ப்புக்களை ஏற்படுத் துவதன் மூலம் வருமான சமமின்மை குறைந்து வறுமை குறையலாம்.

**6. கிராமப்புற தனியார் கல்வி நிலையங்களை ஊக்குவித்தல்**

இலங்கையின் கல்விசார் வளர்ச்சியில் தனியார் கல்வி நிலையங்கள் குறிப்பிடக்கூடிய பங்களிப்பை செய்வ தனை எவரும் மறுக்க முடியாது. அரசாங்கம் நகர்புற தனியார் கல்வி நிலையங்கள் மீது அதிக வரியை அறவிட்டு கிராமப்புற கல்வி நிலையங்களுக்கு மானியங்கள் வழங்கி ஊக்குவிக்கலாம். மேலும் தனியார் கல்வி நிலைகளில் காணப்படும் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையிலும் மாணவர்களின் அறிவு, சுயமாக சிந்திக்கும் தன்மை, வாசிப்பு என்பவற்றை அதிகரிக்கும் வகையிலும் பொதுப் பரீட்சையில் மாற்றவர்களை செய்யும் போது கல்வியை பணம் படைத் தோர் அபகரித்து செல்வதை தடுத்து வறியவர்களுக்கு வாய்ப்பை வழங்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவுரை**

இவ்வாறு வளியவர்களுக்கு கல்வியில் சமவாய்ப்பை வழங்கி அவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதன் ஊடாக தகவல் பரமப்ல் வலையமைப்பு மூலம் வறுமையை ஒழிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 06

# நாணய பெறுமதி இறக்கமும் பொருளாதாரமும்

(தினக்குரல் 26 யூன் 2000)

## 1. அறிமுகம்

கடந்த சில மாதங்களாக இலங்கையில் அத்தியாவசிய பொருட்கள், சேவைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. மின்சாரம், தொலைபேசி, எரிபொருள் வாயு, தண்ணீர், பஸ்கட்டணங்கள் என பலவற்றின் விலைகளும் மிக வேகமாக அதிகரிக்கப்பட்டுள்ளன. மக்கள் ஏதாவது மாற்றம் நிகழும், அரசாங்கம் விலை அதிகரிப்புக்கு நிவாரணம் வழங்கும் என எதிர்பார்த்து இருந்தனர். அவ்வாறு எதிர்பார்த் திருந்தவர்களுக்கு கடந்தவாரம் இன்னொரு பேரிடி விழுந்தது.

அதுதான் இலங்கை ரூபாவின் *பெறுமதி* 4 சதவீதத்தால் குறைக்கப்பட்டமை ஆகும். இந்த நாணயப் பெறுமதி இறக்க மானது ஏற்கனவே அரசாங்கத்தின் விலை அதிகரிப்பால் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு மேலும் துன்பத்தை, வறுமையைக் கொடுப்பதாவும் அமைந்துள்ளது.

## 2. நாணயப் பெறுமதி இறக்கம் என்றால் என்ன?

ஓர் வெளிநாட்டு நாணயத்திற்கு எதிராக வழங்கப்படும் குறித்த நாட்டின் பெறுமதியைச் சட்ட ரீதியாகக் குறைத்துக் கொள்ளல் நாணய பெறுமதி இறக்கம் என அழைக்கப் படுகின்றது. உதாரணமாக ஒரு அமெரிக்க டொலர் ரூபா 75



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயின் 4 சதவீத நாணயப் பெறுமதி இறக்கம் செய்வதாகக் கருதினால் $4/75 \times 100 = 5.33$ இன் படி நாணப் பெறுமதி இறக்கத்தின் பின்னர் டொலரின் பெறுமதி $75+5.33=80.33$ ஆக அமையும்.

நாணயப் பெறுமதி இறக்கம் ஒரு நாட்டின் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களைப் பதிந்து காட்டும் சென்மதி நிலுவைப் பட்டியலுடன் தொடர்புடையது. நாட்டின் பொருட்கள், சேவைகள், மாற்றல்கள் போன்றவற்றின் ஏற்றுமதி வருமானத்திற்கும் இறக்குமதி செலவிற்கும் இடையிலான வித்தியாசம் நடைமுறைக்கணக்கு மீதி ஆகும். இம்மீதியானது மிகையாக இருந்தால் இப்பட்டியலில் மூலதனக் கணக்கு ஊடாக நிதி (மூலதனம்) வெளியேறும் அல்லது ஒதுக்கம் அதிகரிக்கும் மூலதனக் கணக்கு வெளி நாட்டு .நேரடி முதலீடு, வெளிநாட்டுக்கடன்கள், நன்கொடைகள், சிறப்பு எடுப்பனவு உரிமைகள், பட்டியலிடப்படாத முதலுலீடுகள், போன்றவற்றையும், நாணயத் துறையையும் கொண்டுள்ளது. நடைமுறைக் கணக்கு குறையாக இருக்கும் போது அரசாங்கம் மூலதனக் கணக்கு ஊடாக அதனை நிவர்த்தி செய்கின்றது. தொடர்ந்து ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கப்பட்டு இறக்குமதி செலவு குறைக்கப்படும்.

உதாரணமாக ஒரு கிலோ தேயிலை வெளிநாட்டில் ஒரு டொலருக்கு விற்பனை செய்யப்பட்டால், ஓர் ஏற்றுமதி வருமானத்தை விட இறக்குமதி செலவு அதிகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற போது நாணயப் பெறுமதி இறக்கம் மூலம் ஏற்றுமதியாளன் 75 ரூபாவை வருமானமாகப் பெறுகின்றான். 4 சதவீத நாணயப் பெறுமதி பெறக்கம் செய்யப்படும் போது அவர்களின் வருமானம் ரூபா ரூபா 80.30 சதமாக அதிகரிக்கும். இவ்வாறு ஏற்றுமதி விலை அதிகரிக்காமல் ஓர் அலகுக்கான வருவாய் அதிகரித்து மொத்த ஏற்றுமதி வருவாய் அதிகரிக்கின்றது. இதனால் ஏற்றுமதி தூண்டப் படும். இறக்குமதி பக்கமாக நோக்கினால் ஒரு பரல் மசகு எண்ணெய்யின் விலை 10US$ ஆயின் பெறுமதி இறக்கத் திற்கு முன்னர் ரூபா 750 ஐ செலவு செய்ய வேண்டும். பெறுமதி இறக்கத்திற்குப் பின்னர் விலைஇதன் விலை 803 ஆக உயரும். எனவே. உள்நாட்டில் அதிகரிப்பால் இறக்குமதி கட்டுப்படுத்தப்படும். இதனால் இறக்குமதி, செலவு வீழ்ச்சிய டையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3. இலங்கையில் நாணயப்பெறுமதி இறக்கம்

இலங்கையில் தொடர்ந்து கொண்டிருக்கும் உள்நாட்டு யுத்தத்தினால் போர்த் தளபாடங்களின் இறக்குமதி அதிகரிக் கின்றது. மேலும் இறக்குமதியில் அத்தியாவசியப் பொருட் களாக அரிசி, கோதுமை, சீனி, எரிபொருள் இவையும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. மொத்தமாக உணவுப் பொருட் களை உற்பத்தி செய்யக்கூடிய காலநிலை மற்றும் ஏனைய வளங்கள் இருந்தும் இவை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்த நாணப் பெறுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்கம் இந்தப் பொருட்களின் இறக்குமதியைக் குறைக்காது காரணம்.

1. இவை அத்தியாவசியப் பொருட்களாக உள்ளன. விலை அதிகரித்தலும் இறக்குமதி அளவில் பெரியளவு மாற்றத்தைச் செய்ய முடியாது. எனவே இறக்குதி குறையாது.
2. பாதுகாப்புக்கான யுத்த தளபாடங்கள் தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கில் இழக்கப்படுகின்றன. தளபாடங்களை ஈடுசெய்வதற்கு இறக்குமதி தொடர்கிறது.
3. புதிதாக பலநவீன ஆயுதங்களை. மற்றும் தளபாடங்களை இறக்குமதி அதிகரிக்கும்.

இப்படிப்பட்ட ஓர் சூழ்நிலையில் நாணயப் பெறுமதி இறக்கத்தால் நடைமுறைக் கணக்கில் பற்றாக்குறையைக் குறைக்க முடியாது. ஆனால் இப்பற்றாக்குறையை ஈடு செய்யப் பயன்படுத்தப்படுகின்ற மூலதனக் கணக்கின் செயற்பாட்டை விரிவுபடுத்தலாம். வெளிநாட்டு நாணய அசைவுகளை அதிகரிக்கலாம். (உள் வாங்கலாம்) வெளிநாட்டு முதலீடுகளைக் கவரலாம்.

**4. நாணயப் பெறுமதி இறக்கமும் வெளிநாட்டு முதலீடும்.**

உதாரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவர் இலங்கையின் பங்குச் சந்தையில் 10 ரூபா பெறுமதியான 750 பங்குகளைக் கொள்வனவு செய்வாராயின் 7500 ரூபாவை முதலிட அவருக்கு 100 டொலர் போதுமானதாக இருக்கும். ஆனால், நாணயப் பெறுமதி இறக்கம் செய்த பின்னர் 93.3 டொலர் போதுமானதாக இருக்கும். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மேலும் தற்போது மேலும் பங்குகளைக் கொள்வனவு செய்ய முடியும். எனவே, அவரின் ஆரம்ப முதலீடு 100 டொலர் மற்றமடையாமல் மேலதிகமாக 803-750=53 பங்குகளுக்கு உரிமயாளராகின்றார். இவ்வாறு எல்லா நிதி 5.3 சொத்துக்களிலும் வெளிநாட்டவரின் முதலீட்டு ஆர்வம் அதிகரிக்கும். மொத்தமாக வெளிநாட்டு மூலதனம் இலங்கைக்குள் வரும். வளர்ச்சி அடைந்த நாடுகளில் மிகை மூலதனம் இருக்கும். அதாவது சென்மதி நிலுவைப் பட்டிய லில் நடைமுறைக்கணக்கு மிகை இருக்கும். வட்டிவீதம் மிகை மூலதனத்தை கொண்ட நாடுகளில் குறைவாக உள்ளது. எனவே இந் நாடுகளில் சில வெளிநாட்டு வர்த்தக வங்கிகள், நிதிக் கம்பனிகள் குறைந்த வட்டியில் சேமிப்பு களைத் திரட்டி இலங்கை போன்ற பற்றாக்குறை உள்ள நாடுகளில் அதிக வட்டிக்கு கடன் கொடுகின்றன. நாணயப் பெறுமதி இறக்கம் இவ்வட்டி வருமானத்திற்கு மேலாக வர்த்தக வங்கிகளுக்கு ஓர் வருமானம் கிடைக்கின்றது. உதாரணமாக அமெரிக்கப் பிரஜை ஒருவர் (NRFCA) என்ற வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் 1000 டொலரை இலங்கையில் வைப்புச் செய்வாராயின் பெறுமதி இறக்கத்திற்கு முன்னர் இலங்கை ரூபாவில் அதன் பெறுமதி ரூ.75000 ஆக இருக்கும். பெறுமதி இறக்கத்திற்குப் பின்னர் இதன்பெறுமதி ரூ.80300 ஆக உயரும். எனவே, வட்டி வருமானத்திற்கு மேலாக 5300 ரூபாவை ஒருவர் பெறமுடியும். இது பலருக்கு கவர்ச்சியாக இருப்பதால் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு சேமிப்புக்கள் மூலதன கணக்கு ஊடாக உள் நாட்டுக்கு ஈர்க்கப்படுகின்றது.

இவ்வாறு ஈர்க்கப்படும் நிதியில் அரசாங்கத்துறையும் கடன்பெற முடியும். இலங்கையின் வரவு, செலவுத்திட்ட பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்கின்ற மூலதனங்களில் ஏறத்தாழ 50 சதவீத வெளிநாட்டு தனியார் உள்நாட்டில் வழங்குகிறார்கள். வெளிநாட்டு மூலம் 10 சதவீத நிதியையே வழங்குகின்றது. இதேபோன்று பெறுமதி இறக்கத்தால் கவர்ச்சிகரமாக ஈர்க்கப்படும் நிதியைத் தனியார் துறைக்கும் கடனாகக் கொடுக்கப்படுகின்றது.

இலகுவில் விலகிக் கொள்ளக்கூடிய குறுங்கால முதலீடுகள் தவிர நீண்டகால முதலீடுகளும் பெறுமதி இறக்கத்தால் கவரப்படலாம். இலங்கையில் புடைவைத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு ஒரு வெளிநாட்டு நிறுவனம் ஐந்து மில்லியன் ரூபா முதலில் திட்டமிட்டுள்ளது. நாணயப் பெறுமதி இறக்கத்திற்கு முன்னர் 66,666.66 US$ ஐ மூலதனமாகக் கொண்டு வந்தால் இதைச் செய்யலாம். நாணயப் பெறுமதி இறக்கத்திற்கு பின்னர் 50,00,000/ 80.30= 62266.5 டொலர் போதுமானது. எனவே, நாணயப் பெறுமதி இறக்கம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கை ஒரு இலாபம் மிக்க முதலீட்டுப் பொருளாதாரமாகக் காட்சியளிக் கின்றது. இதனால் வெளி நாட்டு முதலீடுகள் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. வெளிநாட்டு முதலீடுகள் இறக்குமதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கி இருந்தால் அவர்களுக்கு ஓர் இழப்பு இருக்கும். ஆனால் அவை வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்றுமதி செய்யும் போது இழப்பை ஈடு செய்ய முடியும்.

மிதக்க விடப்பட்ட நாணயமாற்ற வீதத்தின் கீழ் இரண்டு எல்லைகளை மத்தியவங்கி கடைப்பிடிக்கின்றது. கீழ் எல்லைக்கும் மேல் எல்லைக்கும் இடையில் நாளாந்தம் வெளிநாட்டு நாணயங்களுக்கு ஏற்படும் கேள்வி மற்றும் நிரம்பல் அடிப்படையில் ரூபாவின் பெறுமதி தீர்மானிக்கப்படும் நடைமுறைக்கணக்கு மிகை காணப்படுமாயின் கீழ் எல்லையை அண்மித்ததாக இருக்கும். குறை காணப்படுமாயின் மேல் எல்லையை அண்மித்ததாக இருக்கும். வெளிநாட்டு மூலதனம் உள்வருவதற்கு உகந்த அரசியல் பொருளாதார சூழல் இங்கு இல்லையாயின் மத்திய வங்கி தீர்மானித்த வீச்சின் மேல் எல்லை வரை நாணயப் பெறுமானம் சென்று ஓர் அமுக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். இந்தச் சந்தர்ப் பத்தில் மத்திய வங்கிய வங்கி அந்நிய செலாவணி சந்தையில் தானாகத் தலையிட்டு எல்லை வீச்சை மாற்றிய மைக்க வேண்டும்.

### 5. இலங்கையில் தற்போது நிகழ்ந்தது என்ன?

இலங்கையில் 20 ஜுன் 2000 இல் 4 சதவீதத்தால் நாணயப் பெறுமதி இறக்கத்தை மத்திய வங்கி அறிவித்தது. இது புதியது அல்ல. 1977 நவம்பரில் ஒரு அமெரிக்க டொலரின் பெறுமதி ரூபா 8.60 சதத்தின் இருந்து ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16க்குப் பெறுமான இறக்கப்பட்டது. ஏறத்தாழ 100 சதவீதம் நாணயப் பெறுமதி இறக்கப்பட்டது. தற்போது அறிவித்துள்ள புதிய வீச்சின் பிரகாரம் டொலர் ஒன்றின் வாங்கும் பெறுமதி ரூ.75.60 சதமாகவும், விற்கும் விலை ரூபா 79.47 சதமாகவும் இருக்கும். அத்துடன் இதுவரை காலமும் இருந்து வந்த நாணயமாற்று வீதங்களில் வாங்கும் விலைகள் இனிமேல் நாளாந்த அடிப்படையில் மத்திய வங்கியினால் வெளியிடப் படமாட்டாது. சந்தை நிலவரங்கள் இதன் மீது ஆதிகத்தைச் செலுத்தும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் தற்போதைய நாணப் பெறுமதி இறக்கத்தின் பின்னணி என்ன? ஏன் மத்தியவங்கி நாணயப் பெறுமதித் தீர்மானத்தில் இருந்து வந்த வீச்சு எல்லையை 2 சத வீதத்தில் இருந்து 5 சதவீதமாக அதிகரித்துள்ளது? ஏன் மத்திய வங்கி ரூபாவின் பெறுமதி தீர்மான விடயத்தில் சந்தையை நாடிச் சென்று தான் விலகிக் கொள்கின்றது? போன்ற வினாக்களுக்கு விடை தேடி வேண்டியது முக்கிய மானதாகும்.

**6. வறிய, நடுத்தர மக்களின் செலவு மேலும் அதிகரிக்கும்.**

இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சினையானது கடந்த சில மாதங்களில் தீவிரமடைந்துள்ளது. எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என ஓர் பகுத்தறிவுள்ள முதலீட்டாளரால் தீர்மானிக்க முடியாமலுள்ளது. சுருக்கமாகச் சொன்னால் நாடு குழம்பியுள்ளது. அரசாங்கம் யுத்தத்தை தொடர்ந்து முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னெடுத்துச் செல்வதற்கு பெரியளவில் நிதி தேவைப்ப டுகின்றது. அதே நேரம் பொருளதாரம் வளர்ச்சி, வேலை யின்மை, போன்ற இலக்குகளும் அடையப்பட வேண்டும். அரச நிதியை (அரச வருமானத்தை) பாதுகாப்புச் செலவுக்கு அதிகமாக ஒதுக்கீடு செய்து கொண்டு போரை முன்னெடுத்துச் செல்கின்ற அதேவேளை தனியார்துறை மூலம் வெளி நாட்டுடன் தொடர்பைக் கொண்டிருக்கும் திறந்த பொருளா தாரக் கொள்கை மூலம் பொருளாதாரம் வளர்ச் சியை எடுத்துக்காட்டுவதற்குரிய முயற்சிக்கின்றது. இரண்டு முக்கிய பிரச்சினைகளுக்கு அரசு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

1. உள்நாட்டில் பொருட்கள் சேவைகளின் விலைகள் உயர்வடைந்துள்ளமை வெளிநாட்டு முதலீட்டாளர் களையும் பாதித்துள்ளது. வர்த்தகத்திற்கு அத்தியா வசியமாகத் தேவையான போக்குவரத்து, தொலைபேசி, மின்சாரம், எரிபொருள் போன்ற உள்ளீடுகளின் விலை யேற்றம், முதலீட்டுக்கான இலாபத்தைக் குறை க்கும். விற்பனைப் பொருள் வெளிநாட்டிற்கு அனுப்பப் படுவதால் அதன் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவதால் அதன் வெளி நாட்டு விலையில் மாற்றம் ஏற்படாத போது உள்நாட்டு உற்பத்தி செலவு அதிகரிப்பானது லாபத்தைக் குறைக் கின்றது. இதனால் வெளிநாட்டு விலையில் மாற்றம் ஏற்படாத போது உள்நாட்டு உற்பத்தி செலவு அதிகரிப் பானது லாபத்தைக் குறைக்கின்றதது. இதனால் வெளி நாட்டு முதலீட்டாளர்கள் வேறு நாடுகளுக்கு தங்களு டைய முதலீடுகளை மாற்றலாம். வருகை குறைவடை யலாம். உள்ளீட்டு விலை அதிகரிப்பு உற்பத்திச் செலவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிப்பு இலாபம் வீழ்ச்சி முதலீட் டாளர் வருகையில் வீழ்ச்சியும் இருப்பவர்களின் வெளி யேற்றமும். சென்மதி நிலுவையில் பற்றாக் குறையை அதிகரிக்க செய்கிறது. இது ரூபாவின் பெறுமதியை குறைப்பதற்கு தூண்டு கின்றது.

2. முதலீட்டாளர்களுக்கு அரசாங்கத்தின் போக்கு ஓர் அச்சத்தைக் கொடுக்கின்றது. அரசியலில் ஸ்திரமற்ற தன்மையினால் முதலீட்டுச் சூழல் இலங்கையில் குறை கின்றது. தொடர்கின்ற வடக்கு, கிழக்குப் பிரச்சினை காரணமாக ஆரோக்கியமான முதலீட்டுச் சூழல் இலங் கையில் குறைகின்றது.

இந்த இரண்டு பிரச்சினைகளையும் நீக்கி வெளிநாட்டு மூலதனத்தையும் முதலீட்டாளர்களையும் தொடர்ந்து வைத் திருக்கவும், மேலும் முதலீட்டாளர்களைக் கவர்ந்தி ருப்பதற்கும். சேமிப்புக்களை கவர்வதற்கும், அதிகரித்த இறக்குமதியால் ஏற்படும் நடைமுறைக்கணக்குப் பற்றாக் குறையை நிதிப்படுத்தி சமப்படுத்துவதற்கும் பணக் கொள் கையில் ஓர் மாற்றம் தேவைப்பட்டது. அது நாணய பெறுமதி இறக்கம் மூலம் அடையப்படுகிறது. எனவே ரூபாவின் பெறுமதியை வீழ்ச்சியடையச் செய்வதன் மூலம் அதிகரித்த இறக்குமதிச் செலவு நிதிப்படுத்தப்படுகின்றது. ரூபாவின் பெறுமதி இறக்கம் வெளிநாட்டு மூலதனம், ஏற்றுமதி அதிகரிப்பு, முதலீட்டு அதிகரிப்பு, உற்பத்தி வேலைவாய்ப்பு, வருமானம் அதிகரிப்பு, உற்பத்தி வேலைவாய்ப்பு, வருமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிப்பு, பொருளாதார வளர்ச்சி போன்றவற்றைப் பெற்றுத் தரும்.

ரூபாவின் பெறுமதி இறக்கம் இறுதியாக பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச்செல்கின்றது. ஆனால் உள்நாட்டில் பொருட்கள் சேவைகளின் விலை அதிகரிக்கும் (பணவீக்கம்) எனவே எதிர்காலத்தில் "அதிகரித்த பாதுகாப்பு" செலவின் மத்தியில் யுத்தத்தைத் தொடர்ந்து கொண்டு, உயர்ந்த பொருளாதார வளர்ச்சியையும் குறைந்த வேலையின்மை யையும் எமது அரசாங்கம் அடைந்துள்ளது. என பலர் அறிக்கைவிடுவார்கள். ஆனால், அவர்கள் மறுபுறத்தில்,

- ❖ உள்நாட்டில் ரூபாவின் பெறுமதியை வெளிநாட்டு நாணயங்களிம் பறிகொடுத்தமை.
- ❖ உள்நாட்டில் பணவீக்கம் ஏற்பட்டமை.
- ❖ அரசாங்கத்தின் பொதுப்படு கடன் அதிகரித்தமை
- ❖ உள்நாட்டில் வெளிநாட்டு தனியார் முதலீடுகள் அதிகரித்தமை
- ❖ உள்நாட்டில் தேசிய சொத்துக்கள் தனியார் மயப் படுப்படுத்தப்பட்டமை.
- ❖ வறுமை அதிகரித்தமை போன்றவற்றை வெளியிட மாட்டார்கள்.

நாணயப் பெறுமதி இறக்கத்தினால் வெளிநாட்டுத் துறையுடன் சார்ந்து வாழ்பவர்கள், நன்மை அடைவார்கள். ஏற்கனவே விலை அதிகரிக்கப்பட்ட பொருட்கள் சேவை களுக்கு வெளிநாட்டுத்துறையுடன் சார்ந்தவர்களுக்கு ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்ட ஈடாகவே 4 சதவீத நாணயப் பெறுமதி இறக்கம் அமையும். மறுபுறத்தில் வறிய, இடைத்தர மக்கள் இதனால் மேலும் தாக்கப்படுவார்கள். மத்திய கிழக்கில் அல்லது ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வேலை செய்பவர்கள் அனுப்பும் பணத்தின் உள்நாட்டுப் பெறுமதி அதிகரிக்கும். ஏற்றுமதியாளர்களின் வருமானம் அதிகரிக்கும். ஆனால் விவசாய நிலத்தில் பயிர்செய்யும் கிராமத்துறை வீழ்ச்சிய டையும் செலவு அதிகரிக்கும் இது வறுமை அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும்.

யுத்தத்தால் ஏற்கனவே நடுத்தல மக்கள் பாதிப்படைந் துள்ளனர். அண்மைக்கால விலை உயர்வுகள் இவ்வகுப்பு மக்களை மேலும் மேலும் பாதிக்கும். இந்தப் பெறுமதி இறக்கம் மேலும் அவர்கள் நுகர்கின்ற பொருட்களின் சேவைகளின் விலையை உயர்த்தும். அரசாங்கம் யுத்தத்தின் சுமையை யுத்த முனையிலும் பொருளாதார முனையிலும் வறியவர் மீதும் செலுத்துகின்றது.

**7. முடிவுரை**

எனவே தற்போது கிழமைக்கு அரசு வெளியிடும் திகிலடையச் செய்யும் அறிவிப்புக்கள் பெரிதும் கீழ்த்தர மற்றும் இடைத்தர மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் அதே நேரம் வெளிநாட்டுத் துறையுடன் தங்கி வாழ்பவர்க ளுக்கும் நாணயப் பெறுமதி இறக்கம் முன்னர் அதிகரித்த விலை உயர்வுக்கு ஓர் நட்ட ஈடாக அமைகின்றது. பெருந் தோட்டங்களில் வேலை செய்பவர்களும் கிராமியத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு விவசாயிகளும் மென் மெலும் தாக்கப்படுவார்கள். எனவே அண்மையில் இடம் பெற்ற நாணயப் பெறுமதி இறக்கம், மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதைக்கு ஒப்பானது. இதன் தாக்கத்தை கடந்த 13 ஆண்டுகளாக அனுபவித்தோம் இலங்கையில் தற்போது உள்ள நாணய மாற்று வீத முறைமையினால் இலங்கையில் அதிகமாக வாழும் கிராமியத்துறை பாதிப்படைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி III

# உலகப் பொருளாதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07

## உலகமயமாக்கலும் பொருளாதார சமமின்மைகளும்

## Globalization & Economic Inequalities

### 1. அறிமுகம்

இன்றைக்கு ஏறத்தாழ 3, 4 தசாப்தங்களுக்கு முன்னர் வெளிநாட்டு முதலீடு, வெளிநாட்டு பொருட்கள், வெளிநாட்டு சேவைகள், வெளிநாட்டு மோகம் மற்றும் வெளிநாட்டவர்கள் மீது வெறுப்பும் விரக்தியும் கொண்டிருந்த இன்றைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மக்கள் இன்று அவைகளை செங்கம்பளம் விரித்து வரவேற்கின்றனர். இது உலக பொருளாதார ஒழுங்கில் ஏற்பட்ட மாற்றம் ஆகும். உலக நாடுகளுக்கு இடையில் ஏற்பட்ட மாற்றம் ஆகும். உலக நாடுகளுக்கு இடையில் காணப்படும் பொருளாதார அரசியல் மற்றும் சக உறவுகளும் முன் னெப்போதும் இல்லாத அளவுக்கு இன்று அதிகரித்து காணப்படுகிறது. உலகத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் உலகமயமாக்கல் என்ற செயல் முறையை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர். காரணம் உலகமயமாக்கல் கொள்கை அடிப்ப டையில் உலக நாடுகளில் பரப்பப்படவில்லை. மாறாக இது ஓர் நிபந்தனையாக அபிவிருத்தி அடைந்த நாடுகளினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச நாணயநிதியம் (IMF) மற்றும் உலக வர்த்தக ஸ்தாபனம் (WTO) போன்றவற்றாலும் திணிக்கப்படுகின்றது.

இந்த அமைப்புக்களையும் நாடுகளையும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் சார்ந்து வாழ்கின்றன. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மூலதனப் பற்றாக்குறைக்கும் கடன் வழங்குகின்ற மற்றும் அபிவிருத்திக்கு உதவி செய்கின்ற ஓர் ஏகபோக சேவை நிறுவனங்களாக சர்வதேச நாணயநிதியமும் (IMF) உம், உலக வங்கியும் (IBRD) வர்ணிக்கப்படுகின்றன. இவை வழங்கும் உதவியில் பிணைக்கப்பட்டிருக்கும் பொருளாதார சீர்திருத்தங்கள் (Economics reforms) என்ற நிபந்தனையானது உலகமயமாக்கல் செயல்முறையை விரிவாக்குகின்றது.

"உலகமயமாக்கல்" என்ற சிந்தனையானது நவகாலணித்துவத்தின் வடிவமாகக் கொள்ளப்பட்ட போதும் இதனுள் பொருளாதார சிந்தனைக் கோட்பாடு அடிப்படையாக இருப்பதை மறுக்க முடியாது. போட்டிச் சந்தையை முறைமையானது பொருளாதாரத்தின் அருமையாக வளங்களை வினைத்திறமையாக ஒதுக்கீடு செய்து நாடுகளின் வளங்களின் உச்சப்பயன்பாட்டிற்கு இட்டுச் செல்லும் (Competition among the economic agents leads to efficient allocation of resources) இதன் அடிப்படையில் போட்டிச்சந்தை நெருங்கிய ஒரு சந்தை அமைப்பை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதன் மூலம் அருமையான வளங்களை வினைத்திறமையாக ஒதுக்க முடியும் என்ற வாதம் உலகமயமாதலுக்கு அடிப்படையாக அமைகின்றது. பழம்பொருளியலாளர்கள் (Classsical Economicts) புதுப்பழம் பொருளியலாளர்கள் (New classical Economists) போன்றவர்கள் உலகமய மாக்கல் சிந்தனையின் மூலகர்த்தாக்களாக அமைகின்றனர். போட்டிச்சந்தையானது வளங்களை வினைத்திறமையாக ஒதுக்கிய போதிலும் மக்களிடையே நீதித்தன்மையை மற்றும் சமத்துவத்தை ஏற்படுத்தாது என்பதும் ஏற்றுக் கொள்ளப் படுகின்றது.

எனவே IBRD, IMF மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளால் முன்னெடுத்துச் செல்லப்படும் உலகமயமாக்கல் கோட்பாட்டு அடிப்படையிலேயே சமத்துவத்தை ஏற்படுத்தாது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒன்றாகும். போட்டிச் சந்தையில் பரட்டோவின் வினைத்திறமையான வள ஒதுக்கீடானது சமத்துவம் மற்றும் நீதித்தன்மையை ஏற்படுத் தாது என்பதும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. சமத்துவத் தையும் நீதித்தன்மையையும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கத் தின் தலையீடு என்பது மேற்குறிப்பிட்ட கோட்பாடு மற்றும் சர்வதேச நிதி அமைப்பின் சீர்திருத்தப் பின்னணியிலும் உலகமயமாக்கல் தொடர்பான சமமின்மையினையும் ஆராய் வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சமமின்மை என்பது பிரதானமாக வருமானத்தில் ஏற்படுகின்ற சமமின்மையைக் குறித்து நிற்கின்றது. உலகமயமாக்கல் வருமானத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமமின்மையை ஏற்படுத்துவது மட்டுமல்லாது ஏனைய பொருளாதார விடயங்களான வெளிநாட்டு நேரடி முதலீட்டில் சமமின்மை, சர்வதேச வர்த்தகத்தில் சமமின்மை, பொரு ளாதார வளர்ச்சியில் சமமின்மை முதலியனவற்றிலும் சமமின் மையை ஏற்படுத்துகின்றது. இவை இறுதியில் வருமானச் சமமின்மைக்கு இட்டுச்சென்றாலும் இவற்றை வேறுபடுத்தி ஆய்வு செய்ய வேண்டிய தேவை உள்ளது.

## 2. உலகமயமாக்கல் வரைவிலக்கணம்

உலகமயமாக்கல் என்பது "நாடுகளின் அரசியல் எல்லைகளைக் கடந்து முதலீடு, வர்த்தகம், நிதி, உழைப்பு, அசைவு போன்றவற்றின் மீதான கட்டுப்பாடுகளை நீக்கி உலக நாடுகளை ஒரு சந்தையின் கீழ் கொண்டு வருதல்" எனக் கூறப்படுகின்றது. இவ்வாறு உருவாக்கப்படும் சந்தை யானது சுயமாக ஒழுங்குபடுத்தப்படும் சந்தையாகக் காணப்படும். (Self - regulation Marketing) இச் சந்தை யானது விரிவாக்கப்பட்ட சந்தையாக அமைவதோடு வர்த் தகம், முதலீடு போன்றவற்றை அதிகரித்து உற்பத்தியை விரிவாக்குகின்றது. மேலும் இது தொழில்நுட்ப வருகை, உற்பத்தித் திறன் அதிகரிப்பு, வாழ்க்கைத்தரத்தின் முன்னேற்றம் மற்றும் வறுமையை நீக்குதல் போன்றவற்றை உறுதிப்படுத்துகின்றது. சுயமாகத் தொழிற்படும் சந்தையை உருவாக்கும் உலகமயமாக்கலை ஏற்படுத்துவதற்காக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பொருளாதாரத்தின் மீது இருக்கும் எல்லாக் கடப்பாடுகளையும் நீக்கும் படியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானியங்களை அகற்றும் படியும் மற்றும் அரசாங்கச் செல வைக் குறைக்கும் படியும் IMF, IBRD போன்றனவற்றால் அறிவுறுத்தப்படுகின்றது. தாராளமயமாக்கலின் உச்சக்கட்டம் உலகமயமாக்கல் என்றும் கூறப்படுகின்றது. உலகமயமாக் கலின் ஆரம்பக் கட்டம் தாராளமயமாக்கல் என்றும் கூறப்படு கின்றது. உலகமயமாக்கலை வழிநடத்துகின்ற அமைப்பாக IBRD, IMF போன்றன காணப்படுகின்றன. இவை பணக்கார நாடுகளின் கைப்பொம்மைகள் எனவும் கூறப்படுகின்றன. உலகமயமாக்கலை மேலைத்தேச மயமாக்கல் என்றும் சிலர் வரையறுக்கின்றனர். வரைவிலக்கணம் இவ்வாறு அமைந் துள்ளது. (Globalization is Westernalization)

உலகமயமாக்கம் செயல்முறையானது வரியை அகற்றுதல், விலைக்கட்டுப்பாடுகளை நீக்குதல், மானியங் களைக் குறைத்தல் அல்லது முற்றாக நீக்குதல், அளவு ரீதியான கட்டுப்பாடுகளை நீக்குதல் என கைத்தொழில், விவாசாயம், சேவை ஆகிய எல்லாத் துறைகளிலும் காணப்ப டுகின்றது.

### 3. உலக மயமாக்கலும் நாடுகளுக்கிடையேயான வருமானச் சமமின்மையும்

உலக மயமாக்கலானது உலகநாடுகளில் இரண்டு விதமான வருமானச் சமமின்மையை ஏற்படுத்துகின்றது.

1. நாடுகளுக்கிடையேயான வருமானச் சமமின்மை
2. நாட்டுக்குள் வருமானச் சமமமின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மயமாக்கலினால் நாடுகளுக்கிடையே வருமானச் சமின்மை அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்கலாம். ஏழை நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்கும் இடையிலான வருமான இடைவெளியானது உலகமயமாக்கல் காரணமாக அதிகரித்துக் காணப்படுகின்றது. உலகமயமாக்கல் செய் முறை மூலம் அதிக வாய்ப்புக்களைப் பெறும் நாடுகள் செல்வந்த நாடுகளாகக் காணப்படுகின்றன. வறிய நாடுகள் இவ்வாய்ப்புக்களைப் பெறுவதில் ஓரங்கட்டப்படுகின்றன.உலக மயமாக்கல் செயற்பாடுகளின் சீர்திருத்தங்களின் நன்மை களை உலகிலே பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள் பயன்படுத் துகின்றன. இவைகள் தமது தலைமையகங்களை அபிவிருத் தியடைந்த நாடுகளில் கொண்டிருக்கின்றன. உலக மயமாக் கல் செயல்முறையின் சீர்திருத்தங்களை தங்களுக்குச் சாத மாகப் பயன்படுத்தி கிளைகளைக் குறைவிருத்தி நாடுகளில் நிறுவுகின்றன. ஏற்கனவே மிகை உற்பத்தியை சந்தைப் படுத்த முடியாமல் தேங்கி இருந்த உற்பத்திக்கும் மூலதனத் திற்கும் இந்த குறைவிருத்தி நாடுகளில் உலகமயமாக்கலின் பொருளாதாரச் சூழல் ஓர் வரப்பிரசாதமாக அமைகின்றது. இச் சூழலைப் பயன்படுத்தி இந் நிறுவனங்கள் தங்களுடைய வருமானங்களை உயர்த்துகின்றன. இக் கூட்டுத்தாபனங்க ளுடைய பங்குதாரர்கள் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மக்களாக இருப்பதால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுக ளின் மூலவளங்கள் சுரண்டப்படுகின்றன. இறுதியில் அபி விருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கும், அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்த நாடுகளிற்கும் இடையிலான வருமான இடைவெளி என்பது அதிகரிக்கின்றது.

1998 இன் முடிவில் இந்த பல்தேசிய கூட்டுத்தாபனங்கள் உலகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 40 சதவீதத்தையும் சர்வதேச வர்த்தகத்தில் 60 சதவீதத்தையும், கொண்டிருந்தன. இக் கூட்டுத்தாபனங்கள் தொடர்ந்தும் பெரியனவாகிக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக மோட்டார்க் கார் உற்பத்தியில் ஆறு பெரியனவாகிக் கொண்டிருக்கின்றன. ஆறு பெரிய கூட்டுக்கம்பனிகள் உலகத்தின் மொத்த கார் உற்பத்தியின் 80 சதவீதத்தை கொண்டிருக்கின்றன. இவ் ஆறு கூட்டுத்தாபனங்களும் அபிவிருத்தி அடைந்து நாட்டுக்கு சொந்தமாக உள்ளன.

கார்க் கம்பனிகளின் வகைகளும், அவற்றின் அதிகளவான பங்கினைக் கொண்ட நாடுகளும்.

1. General motors -Japan and Italy
2. Daimler chaysler - Japan
3. Renavlt - Sweden
4. Renavlt - Japan & Korea
5. Toyata - Japan
6. Vol. Kswagen - Britain

மூலம் **The Isalnd 10.02.2002**

தொலைத்தொடர்புத் துறையை நோக்கின் பத்து பல்தேசிய (TNCs) உலகத் தொலை தொடர்பாடலில் 86 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளன. கணனியில் 10 TNCs களும் 70 சதவீதத்தினை கொண்டுள்ளன. உலக சந்தையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதானமான துறைகளில் ஏறத்தாழ அரைப்பங்கினை கொண்டுள்ளன. பிரதான துறைகளாக மின்சார உபகரணங் கள், மென்பொருள் வர்த்தகம், குளிர்பானங்கள், fast food போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே உலக சந்தையானது சுயமாக ஒழுங்குபடுத்தி போட்டியினை ஏற்படுத்துகின்றது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இவை உலக சந்தையில் விற்பனையாளர்களும் கொள்வனவாளர்களும் ஒரே பேரம் பேசும் சக்தியை உலக மயமாக்கல் செயற் பாட்டால் கொண்டிருக்கும் போது இக் கூட்டுத்தாபனங்கள் போட்டிச் சந்தையில் இருந்து விலகி தனியுரிமை போட்டிக்கு செல்வதால் உலகத்தின் வருமான பரம்பலும் சந்தை புரழ்வுக்கு (distortion) ஏற்ப TNCs களின் நாடுகளுக்கு சார்பானதாக அமைவதைக் காணலாம்.

உலக மயமாக்கல் போட்டிச்சந்தை நிலமையை கூட ஏற்படுத்தவில்லை. சிறிய நிறுவனங்கள் ஓரங்கட்டப்பட்டுள் ளன. IMF, IBRD போன்ற வற்றின் சீர் திருத்தங்கள் பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள் தங்கள் மூலதனத்தை விரும்பிய இடத்தில் சுதந்திரமாக முதலீடு செய்வதற்கும் அவைகளின் இலாபங்களை உச்சப்படுத்துவதற்கும் தேவை யான முதலீட்டு மற்றும் வர்த்தக சூழலை ஏற்படுத்து வதையே உலக மயமாக்கல் செயற்பாடுகள் தோற்று விக்கின்றன. வர்த்தக தாராளமயமாக்கல், சுதந்திர வர்த்தகம் எனக் கூறுகின்ற U.S.A கூட குறை விருத்தி நாடுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு பொருட்களுக்கு மறைமுகமான தடைகளை விதிக்கின்றன. ஆனால் குறைவிருத்தி நாடுகள் மீது U.S.A தனது விருப்புக்களை உலகமயமாக்கல் மூலம் நேரடியாகவும், மறை முகமாகவும் IMF, IBRD, WTO ஐ பயன்படுத்தி திணித்து தங்கள் வருமானத்தை மென்மேலும் பெருக்குகின்றன.

அண்மைக் காலங்களில் உற்பத்தி, வர்த்தகம், தொழிநுட்பம், நேரடி முதலீடு போன்றவற்றில் மிக விரைவான அதிகரிப்பு காணப்பட்டது. ஆனால் இவைகளின் நன்மை எல்லாம் உலகிலே சமமற்ற முறையிலே பங்கிடப்பட்டுள்ளதை காணலாம். இவற்றின் நன்மை எல்லாம் பல்தேசிய கூட்டுத்தாபனங்கள் இயங்குகின்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கே சென்றுள்ளன. 20 சதவீத உலக சனத்தொகையைக் கொண்டுள்ள அபிவிருத்தி அடைந்த நாடுகள் உலக GDP இல் 80 சதவீதத்தையும், உலக வர்த்தகத்தில் 81 சதவீதத்தையும் பெற்றுள்ளன. ஓர் சில அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மட்டுமே உலகமயமாக்கலினால் நன்மையை பெற்று வருமானத்தை அதிகரித்தன. 15 அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு ஒன்று என்ற அளவிலேயே இவை ஒரு சில அபிவிருத்தி அடைந்த நாடுகளிலேயே இடம் பெற்றன. இன்றும் 3 மில்லியன் மக்கள் U$2 க்கு குறைவாகவே செலவு செய்கின்றனர். 1.1 மில்லியன் மக்கள் U$1 க்கு குறைவாகவே செலவு செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மயமாக்கலினால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஆயிரக்கணக்கான விவசாயிகளின் சீவனோபாய பயிர்ச்செய்கை அழிக்கப்பட்டது. ஆயிரக்கணக் கான சிறு கைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. தனியார் மயமாக்கலினால் ஆயிரக்கணக்கான மக்கள் தொழில்களை இழந்துள்ளனர். இவை யாவும் இம் மக்களின் வருமான வீழ்ச்சியை ஏற்படுத்தி எதிர்பார்க்கும் ஆயுள் காலத்தையும் குறைத்துள்ளது. 1990 இலிருந்து 33 நாடுகளில் எதிர்பார்க்கும் ஆயுள் காலம் வீழ்ச்சியடைந்துள்ளது. உலகமயமாக்கல் இம் மக்களின் வருமானத்தை அதிகரித்துள்ளது. சுதந்திர வர்த்தகத்தில் உன்னத நாடுகளாக தங்களைக் காட்டிக் கொள்ளும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் குறைவிருத்தி நாடுகளின் சுதேச ஏற்றுமதிகளுக்கு சுகாதாரக் கட்டுப்பாடு என்ற மறைமுகமான தடைகளை ஏற்படுத்துவதோடு இந் நாடுகளில் தங்களின் வர்த்தகத்தின் மூலம் அதிக நன்மைகளை அடைகின்றன. இது வருமான சமமின்மையை இந்நாடுகளுக்கு இடையில் அதிகரித்துள்ளது.

1960களில் உலகத்திலுள்ள அதிக உச்ச 20 சதவீதமான செல்வந்தர்களுக்கும் (அபிவிருத்தி அடைந்த நாடுகளில்) உலகத்திலுள்ள அதி குறைந்த 20 சதவீத ஏழைகளுக்கும் (அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில்) இடையில் உள்ள வருமான பகிர்வானது ஒரு நபர்க்கு 30க்கு ஒன்று என்ற விகிதத்தில் காணபட்டது. இது 1997 இல் 74க்கு ஒன்று என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகிதத்தில் அதிகரித்து காணப்படுகின்றது.2013 இல் மென்மேலும் அதிகரித்துள்ளது.

இவ் 20 சதவீத செல்வந்தர்கள் உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 86 சதவீதத்தையும், உலக பொருட்கள் சேவைகள் ஏற்றுமதியில் 82 சதவீதத்தையும், உலக மொத்த நேரடி வெளிநாட்டு முதலீட்டில் 68 சதவீதத்தையும், உலக மொத்த தொலைபேசி இணைப்புக்களில் 74 சதவீதத்தினையும் கொண்டுள்ளனர். உலகத்தில் உள்ள பெரும்பான்மையான ஏழைகள் இவற்றில் ஒரு சதவீதத்தை மட்டுமே கொண்டிருக் கின்றார்கள்.

உலக மயமாக்களினால் புதிதாக கைத்தொழில் மயமாகிய நாடுகளுக்கும் (NICs) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கும் இடையிலான வருமான இடைவெளி கூட அதிகரித்துள்ளது. 1975க்கும் 1995க்கும் இடைப்பட்ட காலத்தில் தென்கொரியாவின் வருடாந்த மொத்த தேசிய உற்பத்தியானது சராசரியாக 7 சதவீதத்தினாலும் சிங்கப்பூரின் வருடாந்த தலா தேசிய உற்பத்தியானது சராசரி 5.8 சதவீதத்தினாலும் அதிகரித்தது. ஆனால் இக்காலப்பகுதியில் ஆபிரிக்காவில் உள்ள பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளினது தலா தேசிய உற்பத்தியானது வருடாந்தம் சராசரி 0.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமயமாக்கலின் வருமானச் சமமின்மையினால் பெரிதும் ஓரப்படுத்தப்பட்ட கண்டமாக ஆபிரிக்கா விளங்கு கின்றது. 1965க்கும் 1996க்கும் இடைப்பட்ட 31 வருடத்தில் உபசாரா ஆபிரிக்காவின் பொருளாதார வளர்ச்சி வீதம் (எல்லா ஆபிரிக்க நாடுகளிலும்) சராசரியாக 2.7 சதவீதமாக காணப்பட்டது. ஆனால் இது தென் ஆசியாவில் 4.8 சதவீதமாகவும், கிழக்கு ஆசியாவில் 7.4 சதவீதமாகவும் காணப்பட்டது. 1990 – 1998க்கு இடைப்பட்ட காலத்தில் தென் ஆசியாவின் தலா வருமான வளர்ச்சி சராசரி 2.2 சதவீதமாக காணப்பட்டபோது ஆபிரிக்க நாடுகளின் தலா வருமானம் சராசரி 0.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. 1990-1998 இடையில் பொருளாதார வளர்ச்சி வீதம் தென்னாசியாவில் சராசரி 5.5 சதவீதமாக காணப்பட ஆபிரிக் காவில் இது 2.3 சதவீதமாக குறைவாக காணப்பட்டது. 1965 – 1996க்கு இடையில் ஆபிரிக்காவின் மொத்த உள்நாட்டு நிலையான முதலீட்டு வளர்ச்சி வீதம் 1.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைய தென்னாசியாவில் 5.3 சதவீதத்தினாலும் கிழக்கு ஆசியாவின் 9.4 சத வீதத்தாலும் அதிகரித்துள்ளது. ஆபிரிக்காவின் அரைப்பங்கு சனத்தொகையானது (600 மில்லியன்) நாள் ஒன்றுக்கு $ 0.65 லேயே வாழ்கின்றனர்.

வாழ்க்கைத் தரத்தை காட்டுகின்ற குறிகாட்டிகள் கூட ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது குறைவாக காணப்ப டுகின்றது. உலக மயமாக்கல் ஆபிரிக்காவின் சராசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுமதி அதிகரிப்பு 1960 – 1996க்கு இடையில் 2.1 சதவீத மாக காணப்பட்டது. இது தென்னாசியாவில் 6.2 சதவீத மாகவும் கிழக்கு ஆசியாவில் 8.8 சதவீதமாகவும் காணப் பட்டது. இவ்வாறு உலக மயமாக்கலானது ஆபிரிக்க நாடுகளை ஓரப்படுத்தியுள்ளது.

உலக மயமாக்கல் காரணமாக நாடுகளுக்கு இடையில் வருமான இடைவெளி அதிகரிக்கப்பட்டுள்ளதை பினவரும் அட்டவணை காட்டுகின்றது..

| நாடுகள் | தலாமொத்தஉள் நாட்டு உற்பத்தி (US1999) | வருமானஇடை வெளி உயர் வருமான நாடுகளுடன் |
|---|---|---|
| உயர் வருமான நாடுகள் | 26050 | |
| இலத்தின் அமெரிக்கா | 6880 | 19170 |
| அரபுநாடுகள் | 4550 | 21500 |
| கிழக்கு ஆசியாவும் பசுபிக்கும் | 3950 | 22100 |
| தென்னாசியா | 2280 | 23770 |
| ஆபிரிக்கா | 1640 | 24410 |
| எல்லா அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் | 3540 | 22520 |

மூலம்: UN Human Development Report 2001

வருமான இடைவெளி அதிகமாக இருக்கும் நாடுகளின் முன்னணியில் ஆபிரிக்கா விளங்குகின்றது. 1960க்கும் 1980 க்கும் இடைப்பட்ட காலத்தில் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் உயர்வருமானம் பெறும் நாடுகளுக்கும் இடையிலான வருமான இடைவெளி \$ 6000 இல் இருந்து \$ 13000 ஆக அதிகரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990 களில் அநேகமான அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகம் அதிகரித்துள்ளது. ஆனால் இவ் அதிகரிப்பானது ஓரிரு நாடுகளில் செறிந்து இருந்ததை அவதானிக்கலாம். உதாரணமாக 1996 இல் ஏறத்தாழ 80 சதவீதமான அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் ஏற்றுமதியானது ஆக 15 நாடுகளால் மட்டும் மேற்கொள்ளப்பட்டது. மிகுதி 20 சதவீதத்தையே ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் ஏற்றுமதி செய்தன. மேலும் 1996இல் 95 சதவீதமான நேரடி வெளிநாட்டு முதலீடு ஆக 25 நாடுகளுக்கு சென்றன. மிகுதி 5 சதவீதத்தையே ஏனைய 140 அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பெற்றன. எனவே வர்த்தக முதலீடு போன்றவற்றில் சமமற்ற பரம்பலை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உலக மயமாக்கல் ஏற்படுத்துவதன் மூலம் வருமானப் பரம்பலில் சமமின்மையை ஏற்படுத்துகின்றது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் உலகமயமாக்கல் செய்முறையில் வர்த்தகத்தின் ஊடாக அதிக வருமானத்தை பெறமுடியாமல் காணப்படுகின்றது. உலக மயமாக்கப்பட்ட வர்த்தகத்தின் பெரும் நன்மையும் வருமானமும் கைத்தொழில், மற்றும் இலத்திரனியல் பொருட் களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கே கிடைக்கிறது. ஆனால் எல்லா அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும் கைத்தொழிலில் ஏற்றுமதியை அதிகரிக்க முடியாது. அநேக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானவை முதனிலை பொருட்களின் ஏற்றுமதியில் தங்கி யிருக்கின்றன. முதனிலை பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள் உலக மயமாக்கலினால் கடுமையாக பாதிக்கப்படு கின்றன. 1980க்கும் 1997க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் முதனிலைப் பொருட்களின் மெய் விலைகள் 39 சதவீதத் தினால் வீழ்ச்சியடைந்துள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் (1996-2001) முதனிலைப்பொருட்களில் தாவர எணணெய்யின் விலை 61 சதவீ தத்தினாலும், கோதுமை தானியத்தின் விலை 59 சதவீதத்தினாலும் இறப்பரின் விலை 53 சதவீதத்தினாலும் அரிசியின் விலை 48 சதவீதத்தினாலும், சோயா அவரையின் விலை 46 சதவீதத்தினாலும், சீனியின் விலை 25 சதவீதத்தினாலும் கொக்கோவின் விலை 18 சதவீதத்தினாலும். வீழ்ச்சியடைந்து வருமான சமமின்மையை எதிர்நோக்குகின்றன. ஆபிரிக்கா நாடுகளின் ஏற்றுமதிகளின் விலையில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டதை பின் வரும் புள்ளி விபரம் காட்டுகிறது.

தெரிவு செய்யப்பட்ட ஆபிரிக்க ஏற்றுமதிகளின் உலக சந்தை விலைகள் US டொலரில்

| ஏற்றுமதி பொருட்கள் | 1996 | 1998 | 2001 | 1996க்கும் 2001 வீழ்ச்சியின் வீதம் |
|---|---|---|---|---|
| கோப்பி(IB) | 1.28 | 1.61 | 0.65 | 49 |
| பருத்தி (IB) | 0.86 | 0.60 | 0.45 | 48 |
| கொக்கோ(Ton) | 1517 | 1814 | 1249 | 18 |
| கோப்பர்(IB) | 2615 | 1740 | 1661 | 36 |

மூலம் **The Island 01.07.2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான விலை வீழ்ச்சியினால் இந் நாடுகளின் வருமானம் குறைந்து உலக மயமாக்கலினால் வருமான சமமின்மை அதிகரித்துள்ளது. 1997 களில் செல்வந்த நாடுகளில் வாழும் உச்சமான வருமானம் பெறும் 20 சதவீத மக்கள் உலக GDP 86 சதவீதத்தினை பெற்றனர். அடி மட்டத்தில் உள்ள 20 சதவீத வறிய மக்கள் ஆக ஓர் சதவீத உலக GDP ஐ பெற்றனர். LSE இன் பேராசியரியர் "றொபேட் வோட்" உலக மயமாக்கல் வருமான சமமின்மை பற்றி குறிப்பிடும் போது செல்வந்த வறிய நாடுகளுக்கு இடையிலான வருமான இடைவெளி அதிகரிக்கின்றது என குறிப்பிடுகின்றார். 1970 களில் U.S.A க்கும் வறிய நாடு ஒன்றிக்கும் இடையில் ஒரு நபருக்கான வருமானம் 9 மடங்கு அதிகமாக இருந்தது. இது 1995 இல் 45 மடங்காக அதிகரித்துள்ளது. (U.S.A க்கும் எதியோப்பியாவுக்கும்)

### 4. உலக மயமாக்கலும் நாட்டு மக்களுக்கு இடையிலான வருமான சமமின்மையும்

மேலே நாடுகளுக்கு இடையில் பல்வேறுபட்ட சமமின்மை களை எடுத்துக்காட்டி அவை உலக நாடுகளின் வருமான சமமின்மையை ஏற்படுத்தியுள்ளதை நோக்கினோம். இன்னொரு வகையில் உலக மயமாக்கலானது அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டு மக்களுக்குள்ளும் வருமான இடைவெளியை அதிகரித்துள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் வாழும் மக்களின் வருமான இடைவெளி அதிகரித்துள்ளது. இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகத் தான் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கூட உலக மயமாக்கலுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடை பெறுகின்றன. பணக்காரர்கள் மென்மேலும் செல்வந்தர்கள் ஆகின்றனர். ஏழைகள் மென்மேலும் வறியவர்களாகின்றனர்[1]. கடந்த பத்து வருடத்தில் அமெரிக்காவில் அடிமட்டத்தில் உள்ள 20 சதவீதமான மக்களின் வருமானம் 8 சதவீதத்தால் அதிகரிக்க உச்ச வருமானம் பெறும் 20 சதவீதமான மக்களின் வருமானம் 44 சதவீதமாக அதிகரித்துள்ளது. மிக உயர்ந்த 5 சதவீதமான செல்வந்தரின் வருமானம் 60 சதவீதத்தால் உயர்ந்துள்ளது. சிங்கப்பூரில் கொள்கை கற்கை நிறுவனத்தின் கணிப்பின்படி சிங்கப்பூரில் 1990இல் அடிமட்ட வருமானத்தை பெறும் 10சதவீதமான மக்களின் சராசரி மாதாந்த வருமானம் 258 சிங்கப்பூர் டொலரில் இருந்து 2000 இல் 133 சிங்கப்பூர் டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. 1998 இல் ஆக குறைந்த வருமானம் பெறும் 20 சதவீதமான மக்களின் வருமானத்தின் 15 மடங்கினை 20 சதவீதமான உச்ச வருமானம் பெறுபவர்கள் பெற்றனர். இது 2000 இல் 18 மடங்குகளாக அதிகரித்துள்ளது. ILO இன் அறிக்கையின் படி உலக தொழிலாளர்களில் 80 சதவீதமானவர்கள் போதுமான சமூக பாதுகாப்பை கொண்டிருக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் கூட வறியவர்களின் வருமானம் சிறிது அதிகரித்த போதும்

[1] The riches are Growing richer and the Poor are growing poorer.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வந்தர்களின் வருமானம் அதிகரிப்பு வேகம் உயர் வானதாக காணப்படுகின்றது. இந்நாடுகளில் செல்வந் தர்கள் பொருளாதார வாய்ப்புக்களை மென்மேலும் பெற்று செல்வத்தை சேர்க்கின்றார்கள். ஆனால் வறியவர்கள் பொரு ளாதார வாய்ப்புக்களை இழந்து மென்மேலும் வறியவர்க ளாகின்றனர்.

ஆபிரிக்காவில் குறைந்த வருமானம் பெறும் 10 வீத மக்களின் வருமானத்தின் 20 மடங்கிற்கு மேலாக 10 சதவீத உயர் வருமானம் பெறுபவர்கள் பெறுகின்றார்கள். இது மெச்சிக்கோவில் 15 மடங்காக காணப்படுகின்றது. இவ்வாறு உலக மயமாக்கல் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக் குள்ளும் வருமான இடைவெளியை அதிகரிக்கின்றது. அதி கூடிய வருமானம் பெறும் 10% சதவீத செல்வந்தர்களுக்கும் குறைந்த வருமானம் பெறும் 10 சதவீத வறியவர்களுக்கும் இடையிலான வருமான இடைவெளி மலேசியாவில் 22% ஆகவும் பிலிப்பைன்ஸில் 16% ஆகவும். சீனா மற்றும் தாய்லாந்தில் 20% ஆகவும் காணப்படுகின்றது. இது தென் கொரியாவில் 81% ஆகவும் பாகிஸ்தானில் 8% ஆகவும் பங்களா தேசத்தில் 71% ஆகவும், இந்தியாவில் 10% ஆகவும் காணப்படுகின்றது.

இவ்வாறாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக் குள்ளும் வருமான சமமின்மை அதிகரித்து செல்வதை அவதானிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மயமாக்கல் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வறியவர்களின் வருமானத்தை குறைப்பதற்கு பின்வருவன காரணங்களாக அமைகின்றன.

1. வறியவர்களுக்கான மானியங்கள் குறைக்கப்பட்டமையும், பல நீக்கப்பட்டமையும்.
2. கட்டற்ற வர்த்தகம் வறியவர்களின் தொழில் முயற்சி களை போட்டி காரணமாக இழக்கச் செய்து கூலித் தொழிலாளர் களாக மாற்றப்பட்டுள்ளது.
3. உலகமயமாக்கல் பொருளாதார நீரோட்டத்தில் இணைக் கின்ற நாடுகளில் பணவீக்கம் அதிகரித்துள்ளது. இப்பண வீக்கமானது வருமான இடைவெளியை அதிகரித்துள்ளது.
4. உலகமயமாக்கல் எடுத்து வரும் மூலதன செறிவான தொழில் நுட்பத்தின் காரணமாக பல நன்மைகளைக் கொண்ட மூலதனச் செறிவான தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்து வதால் தொழில் நிறுவனங்கள் ஊழிய செறி வான தொழில் நுட்பத் துறையை கைவிட்டு ஒப்பீட்டு ரீதியில் பல தொழிலாளர்கள் தொழிலை இழந்துள்ளனர்.
5. விலைக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதனால் வருமான சமமின்மை அதிகரித்துள்ளது.
6. உலகமயமாக்கலின் பொருளாதார வாய்ப்புக்களை ஏற்கனவே மூலதனம், கல்வியறிவு, தொடர்பாடல் போன்ற வற்றை அதிகமாக கொண்ட மக்கள் அதிகமாக பெற்றனர். அதேநேரம் மூலதனத்தால், கல்வியறிவால் கிடைக்கப்பெறும் வாய்ப்புக் களை இழந்து விடுகின்றனர். இதனால் வருமான சமமின்மை அதிகரித்துள்ளது.
7. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் தனியார் துறையின் விரிவாக்கமும் பொதுத் துறையின் ஸ்தம்பித நிலையும் கூட வருமான சமமின்மை நாடுகளுக்கு இடையில் அதிகரித்த மைக்கு காரணமாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. தொகுப்புரை

உலகமயமாக்கலானது வெளிநாட்டு வர்த்தகம், நேரடி முதலீடு போன்றவற்றில் சமமின்மைகளை உருவாக்கி நாடுகளின் உற்பத்தி, வருமான சமமின்மைகளை தோற்றுவிக்கின்றது. இச் சமமின்மையானது அபிவிருத்தி அடைந்த நாடுகளின் மக்களின் பங்குதாரர்களை அதிகமாக கொண்ட பல் தேசிய கூட்டுத்தாபனங்களின் விரிவாக்கத்தால் தூண்டப்படுகின்றது. உலகமயமாக்கல் செயல் முறையானது IMF, IBRD போன்ற அமைப்புக்களால் திட்டமிட்டப்பட்ட முறையில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு சாதகமாக அமைக்கப்பட்டுள்ளது. வருமான சமமின்மை நாடுகளுக்குள்ளும் நாடுகளுக்கிடையிடையேயும் தொடர்ச்சியாக அதிகரித்து காணப்படுவது நாடுகளில் பல சமூகபொருளாதார அரசியல் பிரச்சனைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் காரணமாக அமைகின்றது.

## References:


- சர்வதேசநாணய நிதியத்தின் இணையத்தள வெளயீடுகள்
- உலக வங்கியின் இணைய வெளியீடுகள்
- World Development reports.
- Globalization - Economic Review April & May 2000*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08

## சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் உலகவங்கி (IBRD) மீதான விமர்சன நோக்கு

## Critical View on International Monetary Fund (IFM) ard World Bank (IBRD)

### 1. அறிமுகம்

பிரிட்டன் வூட் (Britton Wood) அமைப்பின் இரட்டை குழந்தைகள் என அழைக்கப்படும் இச் சர்வதேச உதவி நிறுவனங்கள் மீது முன்வைக்கப்படும் விமர்சனங்களை தொகுத்து தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அண்மைக் காலங்களில் மத்திய வங்கியினுடைய ஆளுநர் பொதுமக்களுக்கு வழங்கிய பல விரிவுரைகள், செய்திகள் போன்றன IMF (சர்வதேச நாணய நிதியம்), World Bank (உலக வங்கி) போன்றவற்றிற்கு எதிராக தொடர்பு சாதனங்களினாலும் பொது மக்களினாலும் முன்வைக் கப்பட்ட விமர்சனங்களில் இருந்து இவற்றை பாதுகாப்பத தாகவும், இந் நிறுவனங்களுக்கு ஏற்பட்ட குறையை வெளுத்து தூய்மையாக்குவதாகவும் காணப்பட்டது.

உலக வங்கிக்கும் IMFக்கும் ஆளுநரால் சூட்டப்பட்ட புகழ்மாலைகள் துணை அமைச்சரின் வரவு செலவுத்திட்ட உரையை இந்நிறுவனங்களுக்கு ஒப்புவித்ததாக காணப்படுகி ன்றது. உலகத்தில் இன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் அடைந்து வரும் நாடுகளுக்கும் இடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடு நிலைமையாளராக நின்று அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்கின்ற ஓர் தியாக நிறுவனங்களாக இவை வர்ணிக்கப் படுகின்றன. இந் நிறுவனங்களின் தியாக உதவி செய்யும் மனப்பாங்குகளை குறைவிருத்தி பொருளாதாரங்களினது அரசுகளின் தலைவர்களும் போற்றி, புகழ்ந்து புகழ் மாலை சூடுகின்றார்கள்.

காரணம் இந்த அரசுகள் தங்கள் ஆட்சிக் காலத்தில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களுக்கு உதவி வழங்குபவை யாகவும் தொடர்ந்தும் பல திட்டங்கள் மூலம் மக்களின் நன்மதிப்பை பெற்று ஆட்சி அமைக்க தேவையான நிதியினை இந்நிறுவனங்களே வழங்குவதனாலும் ஆகும். நன்றி மறவாமல் இந் நாட்டு தலைவர்களும், அரசாங்கத்தின் கட்டுப் பாட்டில் இருகின்ற மத்திய வங்கியின் ஆளுநரும் அடிக்கடி துதிபாடி இந் நிறுவனங்களை போற்றி புகழ்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கை அரசாங் கத்திற்கும் இடையில் மிகப்பெரிய நிதி ஒப்பந்தம் (2001 மே, யூன்) ஒன்று கைச்சாத்திடப்பட்டது. சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி என்பன அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு உண்மையாகவே உதவி செய்கின்ற நிறுவனங் களாயின் இவ் ஒப்பந்தத்தை வெப்தளத்தில் இருந்து அதை அறிய முடியாத அளவுக்கு அரசாங்கம் ஏன் மூடிமறைக்க வேண்டும்? உண்மையில் இந் நிறுவனங்கள் உதவி செய்யும் போது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் அல்லது நிபந்தனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி அடைந்துவரும் பொருளதாரங்களை அவை எதிர் நோக்குகின்ற பொருளாதார நோயில் இருந்து மீட்டு எடுக்கின்றனவா? என்பது எம் முன் உள்ள மிகப் பெரிய வினா ஆகும்.

## 2. கடனும் கட்டுப்பாடுகளும்

எந்த ஒரு நாடும் இந் நிறுவனங்களிடமும் இருந்து கடன் பெறுவதற்கு முன்னர் அந் நாடுகளின் பொருளாதார கொள்கைகளில் காணப்படும் குறைபாடுகளையும் பலவீனங்களையும் நிவர்த்தி செய்வதற்கு இந் நிறுவனங்களினால் முன்வைக்கப்படும் பொருளாதார சீர்திருத்தங்கள் என்ற நிபந்தனையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் கடன் பெறமுடியும்.

“உலகத்தில் எவரும் கண்ணை மூடிக்கொண்டு கடன் கொடுப்பதில்லை. கடன் வாங்குபவர்கள் கடன் கொடுப்பவர்களின் சில கட்டுப்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டும். பொருளாதார விடயங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு புத்திசாலித்தனமாக இருக்கின்றது. அவ்வாறு இருந்தால் நாங்கள் உலகத்தில் பிச்சை கேட்டு எங்களை மீட்கும் படி போக வேண்டியதில்லை” எனக் குறிப்பிடுகின்றார். ஹென்றி கிஸிங்கர்.

இவரின் கருத்துப்படி பொருளாதார நோய்களை ஒவ்வொருவரும் புத்திசாலித்தனமாக தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். எனவே உலகத்தில் பொருளாதாரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை திட்டமிடுவதில் முகாமை செய்வதில் எந்த நாடு புத்திசாலித்தனமாக தொழிற்படுகின்றதோ அந்தநாடு அபி விருத்திஅடைந்த நாடாகவும் எந்த நாடு புத்திமதி கேட்க பிறரிடம் செல்லுகின்றதோ அந்த நாடு அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகவும் காணப்படுகின்றது.

உலகத்தில் உள்ள பெரும்பான்மையான அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் எத்தனை நாடுகள் இந்நிறுவனங் களினால் கொடுக்கப்படும் புத்திமதிகளை கேட்டு தங்கள் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்திருக்கின்றன? அவ்வாறு சில அபிவிருத்தியை எட்டினாலும் அவற்றுக்காக அவர்கள் கொடுத்த விலை என்ன?

வடக்கு தெற்கு ஆணைக் குழுவின் நோக்குடன் தெற்கு ஆணைக் குழுவின் சார்பில் மஹதீர் முகமட் கருத்து கூறுகையில் "இந்நிறுவனங்களின் சீர்திருத்தங்கள் எல்லா அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கும் ஒரே மாதிரியாக உள்ளன. இவர்களுடைய புத்திமதிகளால் குறைவிருத்தி பொருளாதாரங்களில் உள்ள நோய்கள் குணப்படுவதற்கு மாறாக அதிகரிக்கின்றன" என்றார். ("Doctor with only pill for every illness") இந் நிறுவனங்களால் விதிக்கப்படும் நிபந்தனைகளில் "பொருளாதார தாராளமயமாக்கல்" என்பது ஓர் பொதுவான மாத்திரையாக காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தில் உள்ள எல்லா அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் ஒரே மாதிரியான பொருளாதார பிரச்சினைகளையும், சமூககலாசார பொருளாதார பின்னணி யையும், அரசாங்கத்தின் இயல்தகவையும் (Government Capacity) கொண்டிருக்கவில்லை. அதாவது இந் நாடுகளில் கல்வியறிவு தனியார் துறையில் வளர்ச்சி, போட்டியிடும் திறன், அரசியல் உறுதித் தன்மை, பொதுத் துறையின் திறன் போன்ற பல பொருளாதார அபிவிருத்திக்கு முன் தேவை யாக உள்ள அம்சங்களில் ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது. இந்த தேவைப்பாடுகளை ஓர் அபிவிருத்தி அடைந்து வரும் நாடு பூர்த்தி செய்து விட்டதா? இல்லையா? என்பதை கவனத்தில் கொள்ளாது எந்த விதமான பொருளாதார பிரச்சினைகளுக்கும்“பொருளாதார சீர்திருத்தம்”என்ற வடிவில் இந்நிறுவனங்கள் “தாராளமயமாக்கல்” என்ற நிபந்தனையை கடன்களுடன் சேர்த்து விதிக்கின்றன. மேலும் தாராளமய மாக்கல் என்பது பொருளாதாரத்தின் அனைத்துத் துறைக ளிலும் மிகக் கடுமையாக அமுல்படுத்தப்படுவதை அவதா னிக்கலாம்.

## 3. போட்டிச் சந்தைக் கோட்பாடும் நடைமுறைகளும்

பொருளாதார கோட்பாடு கண்ணோட்டத்தில் கட்டுப்பாடுகள் வளங்களின் திறமையற்ற வள ஒதுக்கீட்டுக்கு இட்டு செல்வ தையும், போட்டியுடன் கூடிய தாராளமயமாக்கல் வளங்களின் வினைத்திறமையாக வள ஒதுக்கீட்டுக்கு இட்டு செல்லும் என்பதையும் எவரும் மறுக்க முடியாது.(“Compitition among the economic agents leads to effecient allocation of resources”)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கோட்பாடுகள் நடை முறைக்கு எவ்வளவுக்கு அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு பொருத்தமாக உள்ளது என்பது தான் இன்று இந்நாடுகளின் இக்கொள்கைகள் தோல்வியைத் தழுவியமைக்கு காரணமாக உள்ளது.

சர்வதேச நாணய நிதியமும், உலகவங்கி ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் டாக்டர்கள் ஒரே மாத்திரையை ஒவ்வொரு நோயாளிக்கும் கொடுப்பது மட்டுமல்ல இவர்கள் பாடப் புத்தக அணுகுமுறையை கொண்டவர்களாக காணப் படுகின்றார்கள். இவர்களுடைய மாத்திரையை உட்கொண்ட சில்லி, பிறேசில் போன்ற நாடுகள் இன்று மீள முடியாமல் கடன் பிரச்சினையால் சிக்குண்டு தவிக்கின்றன. 1997, 1998 ஆண்டுகளில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடிகள் கூட இந்நிறுவனங்களின் பொருளாதார சீர்திருத்தங்களின் எதிர்காலத்தை வினாக் குறியோடு நோக்க வைத்தன. இது ஓர் பிராந்தியத்தில் ஏற்பட்டதனால் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டது, ஆனால் இது ஓர் உலகளாவிய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்குரிய பிரச்சினையாக காணப்பட்டிருந்தால் சர்வதேச நாணயநிதியமும் உலக வங்கியும் என்ன தீர்வை முன்வைத்திருக்கும் என கேள்வி எழுப்பப்பகின்றது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலகவங்கி ஆகியன அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பிரச்சினைகளுக்கு ஓர் நிரந்தரமான தீர்வினை எடுத்து வரவில்லை. மாறாக, அபிவிருத்தி அடைந்த நாடுகளின் திரண்ட மூலதனத்திற்கு குறைவிருத்தி பொருளாதாரங்களில் ஓர் தாராளமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீட்டுச் சூழலையும், அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு, ஓர் சிறந்த சந்தை வாய்ப்பினையும் இக்கடன் வசதிகள் மற்றும் நிபந்த னைகள் ஊடாக முன்வைத்துள்ளது.

இது ஓர் நவகாலணித்துவ அம்சமாக காணப்படுகின்றது. (This is a neo-Colonialism) 1980 களில் கடன்களில் மீதான இந்த நிபந்தனைகள் மென் மேலும் இறுக்கப்படுவதை அவதானிக்கலாம். இவ்வாறான இறுக்கமான கொள்கை யினால் உண்மையில் இந்நாடுகளினுடைய (அபிவிருத்தி அடைந்துவரும்) வளர்ச்சியோ அல்லது சமத்துவமோ அதிகரிக்கப்படவில்லை.

சர்வதேச கடன் பொறி முறையானது இன்று ஓர் உயர்ந்த அரசியல் பொறி முறையாக காணப்படுகின்றது, இந்நிறுவனங்கள் கடன் பெறுவோர் மீது திணிக்கப்படும் கொள்கைகள் ஊடாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தங்கள் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியாது என பொருளாதார நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

“ஹேன்றி கிஸிங்கர்” என்பவர் 1997, 1998 இல் ஆசிய நிதி நெருக்கடிக்கு பின்னர் சர்வதேச நாணய நிதியம் என்ற கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மையில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பவற்றால் வழங்கப்படும் நிபந்தனைகளுடன் கூடிய கடன் வசதியானது இந்நிறுவனங்களுக்கும், சம்பந்தப்பட்ட நாடுகளுக்கும் சவக்குழிகளை தோண்டுகின்றன என்பதில் ஐயமில்லை" என்கின்றார்.

உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் போன்ற சர்வதேச நிதிநிறுவனங்களின் அரையாண்டு கூட்டத் தொடர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வோஷிங்டனில் நடைபெற்று முடிந்தது, பல ஆயிரக்கணக்கான மக்கள், "இந்நிதி நிறுவனங்களின் சீர்திருத்தங்கள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு நன்மை தருவதில்லை மாறாக வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளுக்கு நன்மையைப் பெற்றுக்கொடுக்கின்றது" என குரல் கொடுத்தனர்.

இவ்வமைப்புக்களால் அபிவிருத்தி குன்றிய வறிய நாடுகளில் திணிக்கப்படும் பொருளாதார சீர்திருத்தங்கள் அவ் வறிய நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க தவறி விட்டன. சந்தைப் பொருளாதாரத்தில் அமைந்த முதலாளித்துவ நாடுகள் தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் சித்தாந்தங்கள் யாவும் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கும், சேவைகளுக்கும் சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதற்கான சிறந்த ஓர் தந்திரோபாயம், என கருதிச் செயற்படுகின்றன. தங்கள் நாடுகளில் திரட்சியடைந்து இருகின்ற நிதியை (மூலதனம்) குறைவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் பொருளாதாரங்களில் முதலீடு செய்து அதற்கான இலாபத்தையும் வட்டி வருமானத்தையும் உழைப்பதற்கும், தங்கள் நாடுகளில் கைத்தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் சிறந்த ஓர் வர்த்தக முதலீட்டுச் சூழல் வளர்ச்சிடையடைந்து வரும் நாடுகளில் உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் போன்ற வற்றால் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது என விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

## 4. வளர்ந்த நாடுகளின் கைப்பொம்மைகளா?

பணக்கார முதலாளித்துவ நாடுகளின் நிதியில் சுகபோக வாழ்க்கை வாழ்ந்து வரும் இந்நிறுவனங்கள் இந்நாடுகளின் கைம்பொம்மைகளாக சிக்குகின்றன என பலர் விமர்சிக்கின்றனர். எனவே, இந்நிலையில் உலகவங்கி, சர்வ தேச நாணயநிதியம், ஆகியவைகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு நண்பர்களா? என்ற வினா எழுகின்றது.

உலக பொருளாதாரத்தின் வரலாற்றுப் பாதையை நோக்கும் போது சில உண்மைகள் புலப்படுகின்றன. 16, 17ஆம் நூற்றாண்டுகளில் வணிக முதலாளித்துவம் காணப் பட்டது. ஐரோப்பிய நாடுகள் கீழைத்தேய, ஆபிரிக்க, அமெரிக்க நாடுகளில் கட்டற்ற வர்த்தகத்தின் மூலம் செல் வத்தை திரட்டின. இந்நிதியானது (செல்வம்) மேலைத்தேச நாடுகளில் துரித வளர்ச்சியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக முதலாளித்துவம் விவசாய முதலாளித்துவமாக மாறி கைத்தொழில் புரட்சிக்கு காரணமாக அமைந்தது. 18ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற கைத்தொழில் புரட்சி மேலைத்தேச நாடுகளின் குடியேற்றங்களை தவிர்ப்பதற்கு தூண்டியது. மூலப்பொருட்களை எடுப்பதற்கும் விளைவுப் பொருட்களை விற்பதற்கும் சந்தை தேவைப்பட்டது.

இன்று முதலாளித்துவத்திற்கு தலைமை தாங்கும் அமெரிக்கா கூட ஓர் காலத்தில் குடியேற்றத்திற்குட்பட்ட ஓர் நாடாக இருந்தது. ஏற்கனவே சிறிய அளவில் இருந்த குடியேற்றவாத கொள்கை கைத்தொழில் புரட்சியினால் தூண்டப்பட்டது. குடியேற்றங்களை தாபிப்பதில் ஐரோப்பிய நாடுகளுக்குள் இடம் பெற்ற போட்டியானது முதலாம் உலகப் போருக்கு காரணமாயின.

19 ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டில் முன்னரைப் பகுதியிலும் குடியேற்ற வாதகொள்கையினால் இன்றைய குறைவிருத்தி நாடுகள் பாதிப்படைந்தன. பொருளாதாரத்தில் வளங்கள் சுரண்டப்பட்டன. சுதேச கைத்தொழில்கள் வளர அது தடையாக இருந்தது. கலாசாரம், பண்பாடு, சுதந்திரம் என்பன பறிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. சீர்திருத்தங்களால் குறைவிருத்தி நாடுகளுக்கு எதிர் பார்த்த சுபீட்சம் கிடைத்ததா?**

இதனால் பல நாடுகள் சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்டு பொருளாதார, அரசியல் சுதந்திரங்களைப் பெற்றன. ஆனால் இந்நாடுகள் பெற்ற பொருளாதார சுதந்திரங்களும் 3,4 தசாப்தங்களே நிலைத்திருந்தன.

பின்னர் உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் அடுத்து இந்நாடுகள் பெற்ற அப் பொருளாதார சுதந்திரங்களைப் பறிகொடுத்து பொருளாதார சுபீட்சத்திற்காக தாராளமய மாக்கல் போன்ற உலக நீரோட்டத்தில் இணைய வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாகின. ஆனால் அவை இதன் மூலம் எதிர்பார்த்த சுபீட்சம் பெறப்பட்டதா? என்பது தான் இன்றுள்ள வினாவாகும்.

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவை தோற்றம் பெற்ற போது இன்றைய குறைவிருத்தி நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதற்கு பல பொரு ளாதார நோய்களைத் தடையாக கொண்டிருந்தன. குறைந்த சேமிப்பு, குறைந்த முதலீடு, குறைந்த வேலைவாய்ப்பு, குறைந்த வருமானம், குறைந்த வாழ்க்கைத்தரம் என பல அந்நாடுகளில் காணப்பட்டன. தற்சார்பு பொருளதாரக் கொள் கையை கடைப்பிடித்து வெற்றி பெற்று சுயபூர்த்தியடைய லாம் என்ற இலக்கில் அந்நாடுகள் வகுத்த கொள்கைகள் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளைக் கொடுக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நோய் வாய்ப்பட்ட நிலையில் இருந்த இப்பொருளா தாரங்கள் நோயை தீர்க்கும் டாக்டர்களைக் கொண்டிருக்கும் மருத்துவமனைகளாக விளங்கிய உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றுக்குச் சென்றன.

ஓர் காலத்தில் (சுதந்திரத்தைத் தொடர்ந்து) இவ்வமைப் புக்களை கடுமையாக விமர்சித்த நாடுகள் கூட பின்னொரு காலத்தில் இவ்வமைப்புக்களிடம் உதவி நாடிச் சென்றன.

பல கோடிக்கணக்கான டொலர்கள் மற்றும் நிதி உதவி என்பன இவ்வமைப்புக்களால் வழங்கப்பட்டது. இவ் உதவிக்கு பிரதியுபகாரமாக கேட்டது யாதெனில் "பொருளா தாரத்தை தாராளமயமாக்கல்" என்ற நிபந்தனையாகும். அந்த அமைப்புக்கள் வழங்கிய அநேகமான உதவிகள் நிபந்த னையுடன் கூடிய உதவியும், சீர்திருத்தங்களும் இவ்வமைப் புக்களின் செயற்பாடுகள் மீது ஐயத்தை ஏற்படுத்தியுள்ளன. குறைவிருத்தி பொருளாதாரங்கள் உதவி வழங்கும் இந் நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ் சென்றன.

**6. தொகுப்புரை**

தாராளமயமாக்கல், உலக மயமாக்கல் செயற்பாடானது நிறைபோட்டி சந்தையை அடிப்படையாகக் கொண்டது. நடைமுறையில் திறந்த பொருளாதாரம் உலகமயமாக்கல் செயல்முறைகளுடன் ஓர் பொருளாதாரம் அவ்வாறான ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமான பக்குவப்பட்ட முயற்சியாளர்களை வளர்த்ததன் பின்பே சர்வதேச போட்டியை உள்நாட்டில் சந்திக்கின்றது. ஆனால் அநேகமான வளர்முக நாடுகளின் பொருளாதார கொள்கை கிராமியத் துறைக்கு ஏற்புடையதாக இருக்க தவறுகின்றது.

"இவ் அமைப்புக்களில் பிராதான நோக்கம் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் வர்த்தக நலன் என பலர் குறை கூறுகின்றன. இவ்வமைப்புக்களின் ஏற்பாட்டுக்கு ஏற்பர் பல குறைவிருத்தி பொருளதார அரசுகள் ஆட்டம் ஆடுகின்றன. தாராளமாக நிதியினை (கடன்) பெற்று வறிய மக்களுக்கு வறுமை ஒழிப்பு என்ற பெயரில் நிவாரணத்தை வழங்குகின்றார்கள். கல்வியறிவற்ற, இம்மாற்றங்களை சரியாக புரிந்துகொள்ளாத மக்கள் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவையே கொடுக்கும் நிதியை எடுத்து அரசு வழங்கும் நிவாரணத்தால் வாய் மூடி நின்று முதலாளித்துவ அரசை ஆதரிக்கின்றார்கள்.

ஆனால் கொடுக்கப்படும் நிவாரணம் அவர்களுடைய அடிப்படை வருமானத்தை நிரந்தரமாக உயர்த்தவில்லை. இது கூட ஒரு வகையில் ஓர் "ஊசி மருந்துச் சிகிச்சை" ஆகும்.எனவே தான் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றன வறிய நாடுகளுக்கு (வறிய மக்களுக்கு) நண்பன் அல்ல என்ற வாதம் முன்வைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் உதவி தொடர்பாக எதிர்க்கட்சி சார்பில் முன்னர் உரையாற்றிய திரு.சிவசிதம்பரம் பின்வருமாறு குறிப்பிட்டார்.

இந் நிறுவனங்களின் சீர்திருத்தங்கள் வளர்முக நாடுகளுக்கும் உதவுவதற்காக திட்டமிட்டு நிறுவப்பட்டவை அல்ல. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஏற்பட்ட மிகை வாதம், பொருள் உற்பத்தி தேக்கம் என்பவற்றால் ஏற்பட்டவை ஆகும். இச் சீர்திருத்தங்களினால் அபிவிருத்திக்கான எல்லா மூலவளங்களும் கிடைக்கும் என கூறமுடியாது. தாராள மயமாக்கல் சட்ட மூலத்தை கொண்டு வருவதை விட வேறு வழியே இல்லை என்ற நிலையில் இதைக் கொண்டு வர வேண்டி உள்ளது, பல வருடங்களாக சர்வதேச நாணய நிதியத்தில் அங்கத்தவராக இருந்து அதன் சலுகைகளை நாம் இங்கு பயன்படுத்தி உள்ளதால் இதனை ஏற்க வேண்டி உள்ளது. நாம் இங்கு அடிக்கடி கிளம்பியுள்ள அடுத்த பிரச்சினை இந் நிறுவனங்கள் விதிக்கும் நிபந்தனைகள் உதவி பெறும் நாடுகளின் சமூக அரசியல் அபிலாசைகளுக்கு இணங்க அமையவில்லை என்பதாகும். இவை ஓர் அரசியல் உந்துதல் பெற்ற நிறுவனங்கள் ஆகும். அமெரிக்காவின் செல்வாக்கு உண்டு. நான் ஓர் எச்சரிக்கை விடுக்கிறேன். சிறுத்தை தனது புள்ளிகளை மாற்றி விட்டது. என்று எண்ணக் கூடாது. அதாவது இவ் நிதி அமைப்புக்கள் திடீரென அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு பணியாற்ற ஓர் உபகார சங்கமாக மாறிவிட்டது என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக் கூடாது. ஒருவேளை சில புள்ளிகள் முன்பு வெளிப்படையாக தெரிந்தது போல இப்போது தெளிவாக தெரியாமல் இருக்கலாம்" என்கிறார்.

இலங்கையின் தாராளமயமாக்கல் கொள்கைக்கு ஐ.தே.க அரசாங்கத்தின் நிதியமைச்சராக இருந்த ரொனி டி மெல் முக்கிய பங்கை வகித்தார். அவர் ஓர் கருத்தரங்கில் "சீனத்தலைவர் மா ஓ சேதுங் கூறியது போல நாம் எமது சொந்த முயற்சியிலேயே தங்கியிருக்க வேண்டும். இறுதியில் எமது வீட்டை சீரமைப்பதற்கு எவரும் உதவ முடியாது" எனக் கூறினார். இக்கருத்தானது உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய அமைப்புக்களின் பிறநாட்டு நிதிமூலம், முதலீட்டின் மூலம் குறைவிருத்திப் பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்யும் முறைகளான தாராளமயமாக்கல் பொருத்த மற்றது என்பதைப் புலப்படுத்துகின்றது.

அமெரிக்காவில் சியாட்டா நகரில் நடைபெற்ற உலக வர்த்தக ஸ்தாபனத்தின் மகாநாட்டிலும், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் அரையாண்டு உச்சி மகாநாட்டிலும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் ஓர் பெரிய உண்மையைப் புலப்படுத்துகின்றன. அது யாதெனில் "உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு நண்பன் அல்ல பகைவன்" என்பதாகும். ஆனால் பகைவன் என்று தெரிந்து அவர்களிடம் இருந்து ஒதுங்கி நாம் வாழ முடியாது. காரணம் உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார ஒழுங்கு அவ்வாறு தான் அமைந்துள்ளது. உள்நாட்டில் ஏற்கனவே பலமான பக்குவமடைந்த முயற்சி யாளர் வர்க்கத்தை கொண்ட நாடுகள் இதனால் ஓரளவு நன்மையைப் பெறலாம். ஆனால் அநேகமான குறைவிருத்தி நாடுகளின் பொருளாதாரங்களுக்கு இன்றைய உலக பொருளாதார ஒழுங்கும் கொள்கைகளும் பொருத்தமற்ற தாகவே உள்ளன.

உலகமயமாக்கலில் அதிக நன்மையைப் பெறுகின்ற வாஷிங்டனில் கூட எவ்வெதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது என்பது இன்னொரு குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் "மக்கள் தங்களு டைய கருத்துக்களை கூற உரிமையுடையவர்கள், அவர்களு டைய கருத்துக்களை சம்பந்தப்பட்டவர் செவி மடுக்க வேண்டும்" எனக் கூறியுள்ளார். இது ஒரு அரசியல் பேச்சாக இருக்கலாம்.

தமிழ் மொழியில் ஒரு பழமொழி உண்டு."ஊர் ஓடினால் ஒத்து ஓடு ஒருவன் ஓடினால் கேட்டு ஓடு" என்பதாகும். உலக நாடுகள் யாவும் அதிலும் சோசலிய நாடுகள் கூட தாராளமயமாக்கல் என்பதனை ஏற்று உலகமயமாக்கலை முன்னெடுத்து செல்லுகின்றன. எனவே ஓர் சிலர் இப்படி ஆர்ப்பாட்டம் செய்யத்தான் முடியுமே தவிர வேறு எதையும் பெரிதாக சாதிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09

# பொருளியலில் கணிதத்தின் பிரயோகங்கள்
## Applications of Mathematics in Economics

### 1. அறிமுகம்

இது 21ம் நூற்றாண்டு, சமூக விஞ்ஞானத்தில் ஓர் அங்கமாகிய பொருளியல் இன்று பல நவீன மாதிரிகளையும் அணுகு முறைகளையும் அளவீட்டுநுட்ப கருவிகளையும் பின் பற்றி வளர்ந்துள்ளது. அந்த வகையில் பொருளியலானது பின்வரும் 3 அணுகு முறைகள் ஊடாக விளங்கப்படுத்தப்படு கின்றது.

1. சாதாரண கட்டுரை விளக்கங்கள்
2. வரைபட விளக்கங்கள்
3. கணித விளக்கங்கள்

ஒரு பொருளியல் எண்ணக்கருவை பூரணமாக விளங்கிக் கொள்வதற்கு இம்மூன்று அணுகு முறைகளும் அவசியமானவையாகும். பகுப்பாய்வு அணுகு முறைகள், மாதிரிகள் மற்றும் பாரம்பரியமாகக் கையாண்டு வந்த முறைகள் என்பனவற்றுடன் இணைந்து பொருளியலாளர்கள், சமூக விஞ்ஞான ஆய்வாளர்கள் தங்களின் எண்ணக் கருக் களை இன்று கணித அணுகு முறையினூடாக நிரூபிக்க முயற்சிக்கிறார்கள். 21ம் நூற்றாண்டில் இது மென்மேலும் புதிய பரிணாம வளர்ச்சியைப் பெறும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனித்துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பொருளியல் கணிதத்தின் முக்கியத்துவத்தை அதிகரிக்கச் செய்துள்ளன. பொருளதாரப் பிரச்சினைகளை,சிக்கல்களை, ஒன்றுடனொன்று இணைந்த எண்ணக்கருக்களை ஓர்கணித உருவாக மாற்றி அவ்வுருக்களை கணனியின் துணைகொண்டு இலகுவாக விளக்கிக் கொள்ளக்கூடிய தீர்மானங்களை எடுப்பதற்கு கணித அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

பொருளியலில் இன்று பொருளியல் அளவீட்டியல் (Econometrics) என்ற பாடப்பரப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. பொருளியல் எண்ணக்கருக்கள், புள்ளி விபரவியல் எண்ணக்கருக்கள் மற்றும் கணித எண்ணக்கருக்கள் ஆகிய இம்மூன்றையும் இணைத்ததாகவே பொருளளவீட்டிலும் கணித அணுகுமுறை முக்கியத்துவம் பெறுவதால் பொருளியலில் இதன் முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றது.

இந்தவகையில் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு புதிய பொருளியல் பாடத்திட்டத்தின் பிரகாரம் அடிப்படை கணித எண்ணக்கருக்களும் அவற்றின் பிரயோகங்களும் முக்கியம் பெறுகின்றன. இக்கட்டுரையானது பொருளியல் எண்ணக்கருக்களை கணித அணுகுமுறையூடாக விளங்கிக் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாணவர்கள் தேவையேற்படும் பட்சத்தில் இக்கணிதப் பிரயோகங்களை பிரயோகிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சார்மாறியும் சாரா மாறியும்

**(Dependent and Independent Variable)**

பொருளியலில் மாறிகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர் கணிதத்தில் மாறிகளையும் அவற்றுக்கு இடையிலான தொடர்புகளையும் அறிமுகப்படுத்தப்பட வேண்டிய தேவை உள்ளது. மாறிகளை இருவகைப்படுத்தலாம்.

1. சார் மாறி, அல்லது தங்கியிருக்கும் மாறி.

2. சாரா மாறி

சார் மாறி என்பது சுதந்திரம் அற்ற ஓர் மாறி ஆகும். இது தன்னியல்பாக மாற்றத்திற்கு உட்படாது. யாதாயினும் ஒரு காரணியின் அல்லது காரணிகளினால் மாற்றத்திற்கு உள்ளாகின்றது. சாராமாறி என்பது சுதந்திரமாக மாற்றத்திற்கு உள்ளாகும் மாறி ஆகும். இது தன்னியல்பாக மாறக்கூடியது. இம் மாறிகள் தொடர்புகளை எளிமைப்படுத்திய வகையில் பின்வரும் சார்புகளுடன் நோக்குவோம்.

1) $Y = f(x)$

இதில் $Y$ என்பது ஓர் சார் மாறி ஆகும். $x$ என்பது ஓர் சாரா மாறி ஆகும். $x$ தன்னியல்பாக மாறக்கூடியது Y தங்கி மாறக்கூடியது. $f$ என்பது சார்ந்துள்ளது அல்லது சார்பு என்பதை குறிக்கும் குறியீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$$Y = f(a, b, c, \ldots\ldots n)$$

$Y$ - மாறி

$a, b, c \ldots n$ சாரா மாறிகள்

$f$ - தொழிற்பாடு (சார்பை குறிக்கும் குறியீடு)

சார்மாறிகள் மற்றும் சாராமாறிகள் என வகைப்படுத்தப் பட்ட மாறிகள் எல்லாச் சந்தர்ப்பத்திலும் சார்மாறியாகவோ அல்லது சாரா மாறியாகவோ இருக்கும் என கூறமுடியாது. வேறொரு சந்தர்ப்பத்தில் அவை தங்களுடைய இயல்புகளை மாற்றலாம். ஓர் சந்தர்ப்பத்தில் சார்மாறியாக இருப்பது பிறிதொரு சந்தர்ப்பத்தில் சாராமாறியாகவும் தொழிற்படலாம். எனவே இந்தவகைப்படுத்தலில் குறித்த ஒரு சந்தர்ப்பத்தை கவனத்தில் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றது என்பது கவனிக்கத்தக்கதாகும்.

### 3. பொருளியல் சார் மற்றும் சாரா மாறிகள்

பொருளியல் ஓர் எண்ணக் கருவை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பல காரணிகள் தீர்மானிக்கின்றன. உதாரணமாக ஒரு பண்டத்தின் கேள்வியை அப்பண்டத்தின் விலை, நுகர்வோரின் வருமானம், ஏனைய பண்டங்களின் விலை (பதிலீடு, இணைப்பு), விளம்பரம், சுவை, காலநிலை, போன்ற பலகாரணிகள் தீர்மானிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பண்டத்தின் கேள்வியானது அப்பண்டத்திற்கான கேள்வியை தீர்மானிக்கும் காரணிகளில் தங்கி உள்ளது. இது கணித உரு சார்பாக பின்வருமாறு தரப்படுகின்றது.

$D_x = f[P_x, P_i \dots P_n, Y, T, E, R, W]$

சார்மாறி - $D_x$

சாராமாறிகள் - $[P_x, P_i \dots P_n, Y, T, E, R, W]$

$D_x - x$ பொருள்களின் கேள்வி

f - கேள்வியானது கேள்வியை தீர்மானிக்கும் காரணிகளின் சார்பாக, அல்லது சார்ந்துள்ளது என்பதை காட்டும் குறியீடு.

$P_i$ - $P_n$ - $x$ பண்டத்துடன் தொடர்புடைய ஏனைய பண்டங்கள் விலை.

Y - நுகர்வோரின் வருமானம்

T - நுகர்வோரின் சுவை

E - பொருளின் விலை தொடர்பான எதிர்கால எதிர்பார்க்கை

R - சமூகக் காரணிகள்

W - காலநிலை

மேற்குறிப்பிட்ட கேள்வி சார்பிலே "Y" என்பது ஒரு சாராமாறியாக தரப்பட்டுள்ளது. ஏற்கனவே நாம் குறிப்பிட்டது போன்று பின்வரும் சந்தர்ப்பத்தில் இது ஒரு சாராமாறியாக மாற்றமடைவதைக் காணலாம். X பொருளின் கேள்வியை தீர்மானிக்கும் காரணியான வருமானத்தை நுகர்வோனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையான சொத்துக்கள், நிதிச்சொத்துக்கள் மற்றும் வட்டிவீதம் போன்றவை தீர்மானித்து இருக்கலாம். அவ்வாறான ஓர் சந்தர்ப்பத்தில் வருமானம் (Y) ஒருசார் மாறியாகவும் அதை தீர்மானிக்கின்ற ஏனைய காரணிகள் சாராமாறியாகவும் தொழிற்படும். ஆகவே சந்தர்ப்பம் சூழ் நிலையை பொறுத்து ஒரு சார்மாறி சாராமாறியாகவோ, சாரா மாறி சார்மாறியாகவோ மாற்றமடையலாம்.

எல்லாக் காரணிகளுக்கும் ஒரேநேரத்தில் மாற்றம் அடையும்போது குறித்த பண்டத்தின் (X) கேள்வியில் என்ன மாற்றம் நிகழும் என்பதை ஆய்வு செய்வது கடினமானதும் சிக்கல் நிறைந்ததும் ஆகும். ஓர் காரணி மட்டும் மாற்றம் அடைகின்றது எனக் கொண்டு கேள்வித் தொகை சார்பினை நோக்குவோமாயின் அது பின்வருமாறு அமையும்.

$$Qd_x = f(p_x)$$

இது கேள்வித் தொகை சார்பு ஆகும். இதனை கேள்வி விதிச்சார்பு எனவும் கூறலாம். X பொருளின் கேள் வியை தீர்மானிக்கின்ற ஏனைய காரணிகள் மாறாமல் இருக்க X பொருளின் விலைக்கும் அதன் கேள்வித் தொகை க்கும் இடையில் உள்ள தொடர்பை மேற்குறிப்பிட்ட சார்பு விளக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விச் சார்பும் கேள்வித் தொகைச் சார்பும் இரு வேறுபட்ட எண்ணக்கருக்கள் ஆகும். கேள்வியை விலை யுடன் சேர்த்து ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகள் தீர்மானிக்கும் போது அதனை கேள்விச்சார்பு என அழைக்கின்றோம். கேள்வியினை குறித்த பொருளின் விலை தீர்மானிக்கும் போது அதனை கேள்வித் தொகை சார்பு என அழைக்கி ன்றோம். கேள்வித் தொகை சார்பில் இருந்து பெறப்பட்ட கேள்விச் சமன்பாட்டின் பொதுவடிவம் பின்வருமாறு அமையும்.

$Qdx = f(P_x) \qquad \Rightarrow$

$$Qd_x = a - b\,P_x$$

கேள்வித்தொகை சார்பு $\Rightarrow$

கேள்விச் சமன்பாடு

Qdx – X பொருளின் கேள்வித்தொகை

$a$ - இது ஓர் மாறிலி ஆகும். சாராமாறி $(P_x)$ பூச்சியமாக உள்ளபோது காணப்படும் சார்மாறியின் $(Qd_x)$ பெறுமதி / சமன்பாட்டுக்குரிய கேள்விக்கோடு கேள்வித் தொகை அச்சை வெட்டும் புள்ளி.

$b$ - கேள்விக் கோட்டின் சரிவு $= \frac{\Delta Qd_x}{\Delta P_x}$

$P_x - x$ பொருளின் விலை.

மேற்குறிப்பிட்ட கேள்விச் சமன்பாடானது கேள்வித் தொகைக்கும் குறித்த பொருளின் விலைக்கும் இடையிலான தொடர்பை (கேள்வி விதியை) விளக்கிய போதும் இச் சமன்பாடானது ஒவ்வொரு விலையிலும் அப் பண்டத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வியும் பிரதிபலிக்கின்றது. சமன்பாட்டிலே a ஐ ஆழ்ந்து நோக்குவோமாயின் அது விலை தவிர்ந்த ஏனைய கேள்வியை தீர்மானிக்கும் காரணிகளை மாற்றத்திற்கு உள்ளாக்கும் ஒரு மாறிலி ஆகும். aயில் பெறப்படுகின்ற ஓர் மாற்றம் குறித்த பொருளின் விலையால் ஏற்பட்டது அல்ல மாறாக விலை தவிர்ந்த ஏனைய காரணிகளால் ஏற்பட்டது ஆகும்.

எனவேதான் கேள்வித் தொகை சார்பில் இருந்து பெறப்பட்ட கேள்விச் சமன்பாடானது a பிரதிநிதித்துவபடுத்துகின்ற கேள்வியை தீர்மானிக்கும் விலை தவிர்ந்த ஏனைய காரணிகளையும் தன்னகத்தே கொண்டிருப்பதனால் தான் கேள்வித்தொகை சமன்பாடு என அழைக்கப்படாமல் கேள்விச் சமன்பாடு என அழைக்கப்படுகின்றது.

விலைக்கும் கேள்வித்தொகைக்கும் இடையில் எதிர்க்கணிய தொடர்பு காணப்படுவதால் b மறைப் பெறுமானத்தை பெறுகின்றது. புறநடைக் கேள்வியை பொறுத்தவரை b நேர் பெறுமானத்தை எடுக்கும்.

4. உதாரணம் (1)

குறித்த நுகர்வோனால் X பண்டம் தொடர்பாக கேள்வியில் பின்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| விலை (ரூபாவில்) | (P) | 10 | 15 |
| கேள்வித்தொகை | (Qd) | 100 | 80 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

X பண்டத்தின்

1) கேள்விச் சமன்பாட்டை பெறுக.

2) ஒரு ரூபா விலையில் அப்பண்டத்தின் கேள்வித் தொகை யாது?

3) என்ன விலையில் கேள்வித் தொகை பூச்சியம் ஆகும்?

4) கேள்விக் கோட்டை பருமட்டாக வரைக.

$Qd_x = a - bP$

$b = \frac{\Delta Qd}{\Delta P} = \frac{(100-80)}{(10-15)} = \frac{20}{10} = -4$

$Qd_x = a - 4P$

10/= விலையில் $Qd = 100$ ஆகும். எனவே $a$

$100 = a - bP$

$a = 100 + 4 \times 10$

$a = 140$

1) கேள்விச் சமன்பாடு $Qd_x = 140 - 4P_x$

2) $Qd = 140 - 4P$

$= 140 - 4 \times 1$

$Qd = 136$

3) $Qdx = 0$

$0 = 140 - 4P_x$


$4P_x = 140$

$P_x = \frac{140}{4} = 35$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35/= விலையில் கேள்வித் தொகை பூச்சியமாகும்.




கேள்வித் தொகை மாற்றம் பண்டம் ஒன்றின் விலை மாற்றத்தால் ஏற்படுகின்றது. கேள்வி மாற்றம் அப் பண்டத்தின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகளின் மாற்றத்தினால் ஏற்படுகின்றது.

- ❖ கேள்விச் சமன்பாட்டில் $a$ மாற்றம் இன்றி இருக்க விலை அதிகரித்தால் அது கேள்வி ஒடுக்கம் ஆகும். மாறாக விலை வீழ்ச்சி அடைந்தால் அது கேள்வி நீட்டம் ஆகும்.
- ❖ கேள்விச் சமன்பாட்டில் குறித்த பொருளின் விலை மாற்ற மின்றி இருக்க $a$ அதிகரிக்குமாயின் அது கேள்வி அதிகரித்தல் ஆகும். a குறைவடையுமாயின் அது கேள்வி குறைதல் ஆகும்.
- ❖ குறித்த பொருளுக்கு $A$ என்ற நுகர்வோரினால் கேட்கப் படும் கேள்வியின் அளவு தனி நபர் கேள்வி ஆகும். ஒரு சந்தையில் $(A, B, C,$ ....... n) என பல நுகர்வோர்கள் காணப்படுவார்கள். தனித்தனியாக பெறப்பட்ட கேள்விகளின் கூட்டுத்தொகை சந்தைக்கேள்வி ஆகும். தனிநபர் கேள்வி களின் கூட்டுத்தொகை சந்தைக் கேள்வி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. உதாரணம் 2

X – பொருளுக்கான A யின் கேள்விச் சமன்பாடு

$$D_x = 10 - 2P_x + 0.1Y_a + 0.5P_y$$

$D_x - a$ இன் X பொருளுக்கான கேள்வி

$Px - X$ பொருளின் விலை

$Y_a$ – A இன் வருமானம் (1000 ரூபாக்களில்)

Py – Y பொருளின் விலை

i. Ya, Py குறுங்காலங்களில் மாறாதவை எனக் கொண்டு X பொருளுக்கான தனி நபர் கேள்வி சமன்பாட்டை Py=4, Ya=40 ஆக உள்ள போது காண்க.

ii. தனிநபர் கேள்விக் கோட்டை வரைக.

iii. கேள்வி நீட்டம் கேள்வி ஒடுக்கம் போன்றவற்றை 2/= விலையை ஆரம்பமாக கொண்டு காட்டுக.

iv. நுகர்வோரின் வருமானம் 30/= இலும் 60/= இலும் கேள்வி யாது? (ஏனையவை மாறாத போது) இம் மாற்றத்தை வரைபடத்தில் காட்டுக.

v. தனிநபர் B இன் X பொருளுக்கான கேள்வி பின்வருமாறு தரப்படுகின்றது.

$$D_x = 17 - Px + 0.5Y_b + 0.5P_y$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இருவர் மட்டும் தான் குறித்த சந்தையில் X பொருளை கொள்வனவு செய்கிறார்கள் என கொண்டு சந்தை கேள்வியை பெற்று, B இன் வருமானம் 20/=ஆக உள்ளபோது சந்தைக் கான கேள்விச் சமன்பாட்டை பெற்று, சந்தை கேள்விக் கோட்டை வரைந்து தனி நபர் கேள்விக் கோட்டுடன் ஒப்பிடுக.

i. $D_x = 10 - 2P_x + 0.1Y_a + 0.5P_y$

$Ya =, P_y = 4$

$D_x = 10 - 2P_x + 0.1 \times 40 + 0.5 \times 4$

$QD_x = 16 - 2P_x$ ($A$ யின் கேள்வி சமன்பாடானது)




iii. 2 = விலையில் $Dx$

$QD_x = 16 - 2 \times 2 = 12$

கேள்வி நீட்டம் ஒரு ரூபா விலையில்

$QD_x = 16 - 2 \times 1 = 14$

கேள்வி ஒடுக்கம் 4/= விலையில்

$QD_x = 16 - 2 \times 4 = 8$ (2 ரூபாவுக்கு மேலாகவும் கீழாகவும் இரு விலைகளை எடுக்கலாம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. $Ya = 30$


$$Dx = 10 - 2P_x + 0.1 \times 30 + 0.5 \times 4$$

$$QD_x = 15 - 2P_x$$

$$Ya = 60$$

$$QD_x = 10 - 2P_x + 0.1 \times 60 + 0.5 \times 4$$

$$QD_x = 18 - 2P_x$$




சந்தை கேள்வி = A யின் கேள்வி + B இன் கேள்வி

= (10 - 2Px+0.1Ya+0.5Py) + (17 - Px+0.5Yb+0.5Py)

$= 27 - 3P_x + 0.1Y_a + 0.5Y_B + P_y$

$P_y = 4, \ Y_a = 40 \ Y_B = 20$

ஆக உள்ள போது சந்தைக் கேள்வி


$$D_x = 27 - 3P_x + 0.1 \times 40 + 0.5 \times 20 + 1 \times 4$$


$$= 27 - 3Px + 4 + 10 + 4$$

$$= 45 - 3Px.$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபி பதிப்பகம்

ISBN 978-955-44890-9-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org